
# சாம்பல்தீவு ஒரு பார்வை

10622



## செ. மோகனசுந்தரம்

வெளியீடு:
V.T. நவரெத்தினம்
சந்திரோதயமலர் பவுண்டேசன்,
இல. ௭, திருமால் வீதி, திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

U. xvi + 98
250.00

| | |
|---|---|
| ACC.NO | 10622 |
| CLASS.NO | 900 |
| DATE | 15.11.2016 |


# சாம்பல்தீவு ஒரு பார்வை

பொது நூலகம்
உப்புவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

நூல் : சாம்பல்தீவு ஒரு பார்வை

ஆசிரியர் : செ.மோகனசுந்தரம்

வெளியீடு : V.T. நவரெத்தினம்
சந்திரமலர் பவுண்டேசன்
61, திருமால்வீதி, திருகோணமலை.
தொ.பே : 077 1313464, 026 2220953

முதற்பதிப்பு : மார்ச் 2016

பதிப்புரிமை : வெளியீட்டாளருக்கு

அச்சுப்பதிப்பு : **Ben Vision Printers**
355/A, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.
தொ . பே : 076 9000035, 026 2225984

விலை : ரூபா. 250.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அமைவிடமும் வரலாறும் | 01 |
| 2. தரைத்தோற்றம் | 06 |
| 3. மண்வளம் | 08 |
| 4. நீர்வளம் | 10 |
| 5. கிராமத்தின் பகுதிகள் | 12 |
| 6. கிராம சேவகர் பிரிவுகள் | 18 |
| 7. நெற்செய்கை | 21 |
| 8. உப உணவுப்பயிர்ச்செய்கை | 23 |
| 9. பழச்செய்கை | 24 |
| 10. தெங்குச்செய்கை | 25 |
| 11. பனைவளம் | 26 |
| 12. விலங்கு வளர்ப்பு | 27 |
| 13. சிறுகைத்தொழில் | 29 |
| 14. வியாபாரம் | 30 |
| 15. உல்லாசப் பயணத்தொழில் | 31 |
| 16. கடற்தொழில் | 32 |
| 17. மாங்கணாய் மாரி அம்மன் ஆலயம் | 33 |
| 18. சல்லி முத்துமாரி அம்மன் ஆலயம் | 36 |
| 19. ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் | 39 |
| 20. வடலிப்பிள்ளையார் ஆலயம் | 41 |
| 21. கோணேசபுரி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் | 42 |
| 22. ஆத்திமோட்டை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் | 43 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 23. ஆறாம் கட்டை விநாயர் ஆலயம் | 44 |
| 24. லக்ஷ்மி நாராயணர் ஆலயம் | 45 |
| 25. கிறிஸ்தவ ஆலயங்கள் | 47 |
| 26. கிராமத்தின் சிறப்பியல்புகள் | 48 |
| 27. கல்விப்பின்னணி | 50 |
| 28. யுத்த பாதிப்பு | 51 |
| 29. மக்களுக்கான சேவைகள் | 53 |
| 30. சாம்பல்தீவு கடல்நீரேரி | 57 |
| 31. கேணிக்கிணறு | 59 |
| 32. நகரப்பகுதி மக்களின் நிலங்கள் | 60 |
| 33. சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம் | 61 |
| 34. சல்லி அம்பாள் மகாவித்தியாலயம் | 63 |
| 35. ஆத்திமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | 65 |
| 36. அடுக்குப்பார் பால்டேயஸ் இறையியல் கல்லூரி | 67 |
| 37. கட்டட தொழிற்பயிற்சி நிலையம் | 68 |
| 38. அடுக்குப்பார் மீன்வளர்ப்பு நிலையம் | 69 |
| 39. கிராமத்தலைவர்கள் | 70 |
| 40. கிராமத்திலிருந்து உருவாகிய உத்தியோகத்தர்கள் | 75 |
| 41. தொழில் நிலையில் உயர்வடைந்தோர் | 79 |
| 42. நினைவு கூர வேண்டியவர்கள் | 82 |
| 43. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் | 85 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான கௌரவ இரா.சம்பந்தன் அவர்கள் வழங்கும் வாழ்த்துச்செய்தி.



திருக்கோணமலைப் பட்டினத்தின் அயல் கிராமமான சாம்பல்தீவு கிராமத்தின் வரலாறு குறித்து "சாம்பல்தீவு ஒரு பார்வை" எனும் மகுடத்திலான ஒரு நூல் வெளியிடப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

சாம்பல்தீவு கிராமம் ஒரு பழம்பெரும் தமிழ்க் கிராமமாகும். கிழக்குக் கடலோரம் அமைந்துள்ள இவ்வழகிய நெய்தல் நிலக் கிராமம் பல சிறப்பம்சங்களைக் கொண்டதாகும். இக்கிராமத்து மக்கள் தமது அரசியல் இருப்புக்கும் விடிவுக்குமான ஓர் அரசியல் அமைப்பாக தமிழரசுக் கட்சியையே தொடர்ந்தேர்ச்சியாக ஆதரித்து வந்தனர். இன்றும் ஆதரித்து வருகின்றனர். எமது இனத்தின் வரலாற்றைத் திரிவுபடுத்தும் கைங்கரியங்கள் இடம்பெற்றுவரும் இக்காலகட்டத்தில் இக்கிராமம் தனது வரலாற்றினை ஆவணப்படுத்த முன்வந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

வரலாறு என்பதை காலத்தின் கண்ணாடி என்பர். அத்தகைய வரலாறு என்பது ஒரு நாட்டிற்கு மட்டுமல்ல, ஓர் இனக் குழுமத்திற்கு மட்டுமல்ல ஒவ்வொரு நகரத்திற்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் முக்கியமாக விளங்குகின்றது. சமகாலத்து அரசியல், கலை, கலாசார, வாழ்க்கை முறைகளை மட்டுமல்ல, பொருளாதார நிலைமைகள், வளங்கள் பற்றியெல்லாம் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும் ஒரு முக்கிய பணியை வரலாற்றுப் பதிவுகள் மேற்கொள்கின்றன.

அந்த வகையில் சாம்பல்தீவு எனும் பெருமைமிகு கிராமத்தின் அமைவிடம், அதன் மண்வளம், நீர்வளம் அக்கிராமத்தின் பொருளாதார நடவடிக்கைகள், கடந்த கால யுத்தத்தின் விளைவாக அக்கிராமம் சந்தித்த அவலங்கள் போன்றவற்றையும் அக்கிராமத்தில் அமைந்துள்ள ஆலயங்கள், பாடசாலைகள் பற்றிய பதிவுகள், அக்கிராமத்தில் வாழ்ந்த சமூக முன்னோடிகள் மற்றும் உத்தியோகத்துறையில் உயர்வடைந்தோர் பற்றிய தகவல்கள் என்பவற்றையும் உள்ளடக்கி இவ்வரலாற்று நூல் அமையவிருப்பது காலத்தின் தேவையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பல்தீவு கிராமத்தின் வரலாற்றினைத் தாங்கி வரவுள்ள இந்நூல் கனதியான ஒரு வரலாற்று ஆவணமாக அமைய எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மேலும், இந்நூலின் ஆசிரியரும் இக்கிராமத்தைச் சேர்ந்தவருமான திரு.செ.மோகனசுந்தரம் அவர்களுக்கும் வெளியீட்டாளராகச் செயற்படும் திரு.வி.ரி.நவரெத்தினம் அவர்களுக்கும் மற்றும் இந்நூல் வெளியீடு தொடர்பில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி ஒத்தாசை புரிந்து நற்பணியாற்றிவரும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது நன்றியறிதலையும் பாராட்டுக்களையும் இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இரா. சம்பந்தன்.

இரா.சம்பந்தன், பா.உ.,
எதிர்க்கட்சித் தலைவர்

இரா. சம்பந்தன் பா.உ
எதிர்க்கட்சித் தலைவர்
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்
பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



திரு.செ.மோகனசுந்தரம் ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் நீண்டகாலம் கல்விப்புலத்தில் சிறப்பாக கடமை புரிந்தவர். அவர்கள் "சாம்பல்தீவு ஒரு பார்வை" என்ற நூலை எழுத திரு.வி.ரி.நவரெத்தினம் சமூக சேவையாளர் அவர்கள் வெளியிடவிருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இவர்கள் இருவரும் சாம்பல்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். தாம் பிறந்து வளர்ந்த ஊரில் கொண்ட பற்று, பாசம், அபிமானம் காரணமாக இப்பணி தொடர்கிறது. இது ஒரு முன்மாதிரியான பணியாகக்கருதுகின்றேன். இவர்கள் இருவருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சாம்பல்தீவு கிராமம் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கோணேஸ்வரத்துடன் நெருங்கிய தொடர்புடையது வரலாற்றுப் பெருமை வாய்ந்த பழம்பெரும் கிராமம், நீர், நில, அமைவிடவளத்துடன் நல்ல மனித வளத்தையும் கொண்டது. எத்தனையோ கல்வி மான்களையும் சமூக சேவையாளர்களையும் உருவாக்கிய மண். இதன் வரலாற்று பெருமை ஆவணப்படுத்தப்படுவது காலத்தின் கட்டாய தேவை, வரலாறுகள் புதிய பாதையில் உறுதியாக பயணித்து சாதனை பல படைக்க உதவும் என்பது எனது நம்பிக்கை, இவ் ஆக்கப்பணிகளுக்கு அனைவரும் உந்து சக்தியாக இருப்போமாக.

நன்றி

அன்புடன்

க.துரைரெட்ணசிங்கம்
பாரளுமன்ற உறுப்பினர்
திருகோணமலை

க.துரைரெட்ணசிங்கம்
நாடாளுமன்ற உறுப்பினர்
(தேசியப் பட்டியல்)
204/6, லோவர் வீதி
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



"சாம்பல்தீவு ஒரு பார்வை" எனும் நூலின் ஊடாக சாம்பல்தீவு கிராமத்திலுள்ள விடயங்களை விரிவுபடுத்தி ஆவணமாக்கும் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தியளிப்பதையிட்டு உண்மையில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

இந்த வகையில் ஒரு கிராமத்தின் சமூக, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றி ஆங்காங்கு தேடி அலைபவர்களுக்கு, தேடாமலே அனைத்து விடயங்களையும் ஒருங்கு சேரப் பார்த்து ஆய்வு செய்யும் வரப்பிரசாதமே **சாம்பல்தீவு ஒரு பார்வை** எனும் இந்நூல் ஆகும். கவிதை நூல்கள் என்றும், கட்டுரை நூல்கள் என்றும், பாட நூல்கள் என்றும் இன்னோரன்ன விடயங்களை சிந்தித்து நூலாக்கும், பலர் மத்தியில் ஒரு கிராமத்தினுடைய முழுவிபரங்களையும் தொகுத்து நூலாக்க முன்வந்திருக்கும் திரு.செ.மோகனசுந்தரம் அவர்கள் எனது பார்வையில் வித்தியாசமான பொது நோக்கு, சிறந்த சிந்தனைவாதியாகவும் அதே வேளை அனைவராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒருவராகவும் உள்ளமையை இங்கு சிறப்பாக சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதே போல் இந்நூலினை வெளியிட முன்வந்த தமிழ்பற்று மற்றும் சமூக அக்கறையுடைய திரு.V.T.நவரெத்தினம் அவர்களும் பாராட்டுக்குரிய ஒரு சமூக சேவகனாவார். இவர்கள் சாம்பல்தீவு மண்ணின் மறக்கமுடியாத மகான்கள். இந்நூல் வெறுமனே கிராமத்தின் அமைவிடமும் வரலாறும் என்ற வகையில் நின்றுவிடாது கிராமம் சார்ந்த பௌதீகவளம், நிதிவளம், தொழில்நுட்ப வளங்கள் என விரிந்து செல்கின்றது. அத்துடன் மானிட வளங்கள் பற்றி குறிப்பிடுகையில் கிராமத்தின் சமூக முன்னோடிகள், தொழில் முன்னோடிகள் உத்தியோகத்தர்கள் என விரிந்து செல்வதையும் உற்று நோக்கலாம். அத்துடன் கோவில்களின் வரலாறு மற்றும் பாடசாலைகளின் வரலாறு பற்றியும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் தொகுத்து உற்று நோக்குமிடத்து தொடர்ந்து வரும் காலங்களில் சாம்பல்தீவு கிராமம் எப்படி இருக்கவேண்டும் என்று இளம் தலைமுறையை சிந்திக்க வைத்து சிந்தனையை தூண்டிவிடுவதாக இந்நூல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மாவட்டத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் என்ற வகையில் மட்டும் அல்லாது இக்கிராமத்தில் வசிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவராகவும் எனது வகிபாகம் பற்றியும் என்னை சிந்திக்க வைத்துள்ளமை பாலில் விழுந்த பழம் போல் இரட்டிப்பு மகிழ்ச்சியை அளித்துள்ளது. இந்நூலினூடாக மக்களும், சாம்பல்தீவு கிராமமும் பயனடைய எல்லாம் வல்ல கோணேசப்பெருமான் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

ச.சுதாகரன்
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
திருகோணமலை
16.02.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



"சாம்பல்தீவு ஒரு பார்வை" எனும் நூலுக்கு ஆசிச்செய்தியை வழங்குவதில் நான் மகிழ்வடைகிறேன். திரு.V.T.நவரெத்தினம் திரு.செ.மோகனசுந்தரம் ஆகியோர் மேற்கொண்ட அயரா முயற்சி, தேடுதல், உழைப்பு மூலமாக பலருக்கும் இந்நூல் பயனுள்ளதாக இருக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

இது வேகமாக நகரும் உலகம். எமது மண், மதம், கலாசாரம், பாரம்பரியம், பழக்கவழக்கங்களைக் கட்டிக்காப்பது என்பது பெரும் சவாலாக இன்று அமைந்துள்ளது. பழையதை சிந்திக்கவோ, அதன் பயன்களை உணரவோ, ஆவணப்படுத்தவோ நம்மில் பலருக்கு நேரமில்லை, விருப்பமில்லை. அவையெல்லாம் வீண்விரயம் எனும் சிந்தனையே இளம் சந்ததிக்குண்டு.

பழையவர்கள் பழையதைத் தேடுகிறார்கள் ஆனாலும் பழையவர்களில் பலர் தமது மண்ணில் இல்லை. 30வருட யுத்தம் காரணமாக கிராமங்கள் அழிக்கப்பட புலம்பெயர்ந்தவர்கள் பலர். இவர்களில் சிலர் தமது உறவுகளோடு வெளிநாடுகளில் தங்கிவிட்டனர். சிலர் வேறு பாதுகாப்பான இடங்களில் இடம் எடுத்து குடியேறிவிட்டனர். சிலர் தமது சொந்த மண்ணுக்கே திரும்பியுள்ளனர். திரும்பியவர்களில் தம் மண்ணைச் சேராதவர்களும் திரும்பியுள்ளனர். இவையெல்லாம் யுத்தம், சுனாமி போன்ற அனர்த்தங்களின் விளைவே. புதிதாக வந்து குடியேறியவர்களுக்கு மண்ணின் வாசம் பற்றிய ஆர்வம் இருக்க வாய்ப்பில்லை.

இந்நிலையில் திருக்கோணமலையில் பழமை வாய்ந்த கிராமங்களில் ஒன்றான சாம்பல்தீவு மண்ணின் மணம் பரப்ப வருகிறது "சாம்பல்தீவு ஒரு பார்வை" எனும் இந்நூல். சாம்பல்தீவு கிராமத்தின் இயற்கை எழில், மண்வளம், கலாசாரம், பண்பாடு பாரம்பரியம், சமயங்கள் இன ஐக்கியம் போன்றவற்றை உலகறியச் செய்ய இந்நூல் உதவியாக இருக்கும். இது பழையவர்களுக்கு தேன் சுவையாகவும், புதியவர்களுக்கு கல்வியாகவும் இளையோருக்கு உற்சாகமாகவும் அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான தரவுகளை சேகரித்து பலரை நேர்கண்டு, தன் அனுபவங்களையும் உள்வாங்கி, பலரது ஆலோசனைகளையும் பெற்று இந்நூலை வடிவமைத்துள்ள திரு.செ.மோகனசுந்தரம் அவர்களை பெரிதும் பாராட்டுகிறேன். இதுபோன்ற நூல்கள் வெளிவருவது அரிதாகியுள்ள இக்காலத்தில் வெளியீட்டாளர் திரு.V.T.நவரெத்தினம் அவர்களின் முயற்சி வரவேற்கத்தக்கதே.

யுத்தத்தின் போதும் அதன் பின்பும் பல கிராமங்கள் அழிந்துள்ளன, மாற்றப்பட்டுள்ளன, புதிய கிராமங்களும் உருவாகியுள்ளன. இந்நிலையில் எமது ஊர்களையும் அவை தந்த பாரம்பரியங்கள், நல்ல விழுமியங்களையும் நாம் மறந்து விடக்கூடாது. எனவே தமது கிராமங்களின் மண்வாசனை பற்றி முடிந்தவர்கள் முன்வந்து எழுதி வெளியிட்டு உலகறியச் செய்ய வேண்டுமென்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்.

"சாம்பல்தீவு ஒரு பார்வை" எனும் நூலை எழுதிய திரு.செ.மோகனசுந்தரம் அவர்களையும் அதை வெளியிடும் திரு.V.T.நவரெத்தினம் அவர்களையும் இவர்களோடு உழைத்த ஒவ்வொருவரையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

இந்நூல் பலருக்கும் பயனுள்ளதாக அமையவும், நாம் எமது மண்வாசனை, கலாசாரம், பண்பாடுகளையும் அவைதரும் வழிகாட்டல்களையும் பின்பற்ற இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

கிறிஸ்துவில்,

+ Ch. Emmanuel




**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**

**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

"All things to all people"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



**சாம்பல்தீவு ஒருபார்வை என்ற பெயரைத் தாங்கி வருகின்ற இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.**

ஒரு பிரதேசத்தின் பல்வேறுபட்ட வளநிலைமைகள், மக்களுக்கு அவை எவ்வகையில் பயன்பாடுடையதாகின்றது. அங்குள்ள தொழில்சார் நிலைமைகள், அவ்வளங்கள் மக்கள் பாவனைக்கு ஈடுகொடுக்கின்ற தன்மை, இவற்றிற்கு அடிநாதமாக விளங்கும் கல்விக்கூடங்கள், கிராம சேவையாளர் பிரிவுகள், கிராமத்தின் பிரிவுகள், அங்குள்ள மக்கள் யுத்த காலத்தின் போது எதிர்நோக்கிய பிரச்சனைகள், இன்றும் சவாலாக உள்ள விடயங்கள், இக்காலகட்டத்தில் அப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கு சேவையாற்றியவர்கள், அப்பிரதேசத்திலே நிலவிய கல்விப்பபின்னணி, அக்கிராமத்திலிருந்து தோற்றம் பெற்ற பல்வேறு அரசதொழில் மற்றும் சமூக சேவைகளில் செயற்படுகின்றவர்கள் பற்றிய விபரங்கள், அப்பிரதேசத்திலே தோற்றம்பெற்ற சமயவழிபாட்டு முறைகளும் ஆலயங்களும், இவை அனைத்திலும் கரிசனை கொண்டு பிரதேசத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்ட கிராமத்தின் தலைவர்கள், முன்னோடிகள், நினைவில் நிறுத்தப்பட வேண்டியவர்கள் என பலதரப்பட்ட தகவல்களை தாங்கி எதிர்கால சந்ததியினதும், கிராமத்தினதும் எழுச்சிக்காக வெளிவருகின்ற வரலாற்று ஆவணமாகவும், அப்பிரதேச குடிமகன் ஒவ்வொருவராலும் ஆய்ந்தறியப்பட வேண்டியதும், கிராமத்தின் வளர்ச்சி பற்றிச் சிந்திக்கும் ஒவ்வொருவராலும் ஆய்ந்தறியப்பட வேண்டியதுமான நூலாகும்.

இதற்கான அடித்தளத்தினையிட்டவர்களுக்கும், நூலாசிரியர் திரு.செ.மோகனசுந்தரம் (முன்னாள் ISA, வலயக்கல்வி அலுவலகம், திருக்கோணமலை) அவர்களுக்கும், இதன் வெளியீட்டாளர் திரு.V.T.நவரத்தினம் அவர்களுக்கும், பல்வேறு தகவல்களை, இந்நூல் உருவாக்கம் பெற வழங்கியோருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ந.விஜேந்திரன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருகோணமலை.

**N.Vijendren**
**Zonal Director of Education.**
**Zonal Education Office,**
**Trincomalee.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



"தனது வரலாற்றை அறிந்திராத சமுதாயம் சீரழிவையே எதிர்நோக்கும்" என்ற கருத்தைப் புரிந்துகொண்டு "சாம்பல்தீவு ஒரு பார்வை" எனும் நூலானது சாம்பல்தீவைச் சேர்ந்த நூலாசிரியரான திரு.எஸ்.மோகனசுந்தரம் அவர்களாலும் வெளியீட்டாளரான திரு.வி.ரி.நவரத்தினம் அவர்களாலும் வெளியிடப்படுவதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சாம்பல்தீவு கிராமத்தின் அமைவிடம், வரலாறு, கிராமத்தின் வளங்கள், கோவில்கள், பாடசாலைகள், கிராமத்தை வலுப்படுத்தும் முன்னோடிகள் போன்ற அனைத்து விடயத்தையும் உள்ளடக்கி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளமையால் இக்கிராமம் தொடர்பான விடயங்களை கிராம மக்கள் மற்றும் ஏனைய அனைத்து மக்களும் தெரிந்துகொள்வர் என்கின்ற நூலாசிரியருடைய நோக்கம் வெற்றிகரமாக ஈடேறும் என நான் எதிர்பார்க்கின்றேன். கிராமத்தின் கடந்தகால, நிகழ்கால நிகழ்வுகளும் எதிர்கால தேவைப்பாடு மற்றும் எதிர்பார்ப்புக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் இக்கிராமத்தின் அபிவிருத்திக்கும் உந்துசக்தியாக இந்நூல் காணப்படும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

மாணவர்கள், அலுவலர்கள், மற்றும் அனைத்து மக்களும் உபயோகப்படுத்தப்படக்கூடிய ஒரு நூலை வெளிக்கொணர்தல் காலத்திற்கேற்ற செயலாகும். இந்நூலில் உள்ளடக்கப்படுகின்ற விடயங்கள் மூலம் சாம்பல்தீவு கிராமம் தொடர்பான தகவல்கள் அல்லது வரலாறு தேவைப்படும் யாவரும் மிகவும் இலகுவான முறையில் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் சமூகத்தின் தேவைப்பாடுகளை அனைவரும் அறிந்துகொள்வதற்கும் உதவியளிக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

"சாம்பல்தீவு ஒரு பார்வை" எனும் இந்த நூலை உருவாக்கி வெளியிட்ட நூலாசிரியரினதும், வெளியீட்டாளரினதும் மற்றும் நூலின் உருவாக்கத்தில் ஏதோ ஒரு வகையில் பங்களிப்பு செய்த அனைத்து உள்ளங்களினதும் ஆர்வமிக்க முயற்சியும் தேடலும் பாராட்டப்படவேண்டியதுடன் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியையும் தெரிவிக்கின்றேன். அனைத்து தரப்பினதும் விடாமுயற்சியின் மூலமும், பரிபூரணமான ஒத்துழைப்புடனான நற்பணி மற்றும் சேவைகளாலும் இக்கிராமத்தை மிகவும் உன்னதமான நிலைக்கு கொண்டுவர முடியும். அவ்வாறான முயற்சிக்கும் பணிக்கும் எனது ஒத்துழைப்பையும், வாழ்த்தையும் தெரிவித்து இறைவனின் நல்லாசியை வேண்டிநிற்கின்றேன்.

ஜே.எஸ்.அருள்ராஜ்
பிரதேச செயலாளர்
திருகோணமலை பட்டணமும் சூழலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல் வெளியீட்டாளரின் செய்தி...

எனது மூதாதையர்கள் ஐந்து பரம்பரையினர் சாம்பல்தீவு கிராமத்தில் வாழ்ந்ததாக அறிகின்றேன். நானும் அங்கு பிறந்து 32 வருடங்கள் அங்கேயே வாழ்ந்தேன். யுத்த சூழ்நிலைகாரணமாக நகரப் பகுதியில் வாழ்ந்தாலும் சாம்பல்தீவுதான் எனது ஊர் என்று எப்போதும் எண்ணிக்கொள்கின்றேன். எனது ஊரைப்பற்றி எழுதக்கூடிய யாராவது ஒருவரைக் கொண்டு ஒரு நூல் எழுதி வெளியிடவேண்டும் என்பது எனது நீண்டநாள் விருப்பமாக இருந்தது. பலரிடம் கூறினேன், கேட்டேன். அவ்விடயம் நிறைவேறவில்லை. எனது கிராமத்தில் வாழ்ந்த பரம்பரையான ஒரு குடும்பத்தைச் சேர்ந்த திரு.செ.மோகனசுந்தரம் அவர்களிடம் கடந்தவருட இறுதியில் எனது விருப்பதை தெரிவித்தேன். சாம்பல் தீவைப்பற்றிய நூலை எழுதுவதற்கு அவர் சம்மதித்தார்.

“சாம்பல்தீவு ஒருபார்வை” என்னும் தலைப்பில் அவர் நூலை எழுதத்தொடங்கினார். அவரது கல்வி, தொழில் அனுபவம், சாம்பல்தீவு கிராமத்தைப்பற்றிய அறிவு, அனுபவம் என்பவை இந்த நூலை உருவாக்க உதவியுள்ளது. குறுகிய காலத்தில் நூலை தயாரித்துள்ளார். நூலை ஆக்குவதற்காக பலநாட்களாக அவர் பலருடனும் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொண்டார் என்பதை நான் அறிவேன் நூலுக்குத்தேவையான சில தகவல்களையும் பெற்றுக்கொள்வதிலும் ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதிலும் தனக்கு உதவுமாறு அவர் என்னைக்கேட்டுக் கொண்டதற்கிணங்க அவற்றைப் பெற்றுக்கொடுத்தேன். தற்போது சாம்பல்தீவைப்பற்றி ஒரு நூல் உருவாகியுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலை வெளியிடும் பொறுப்பை நான் ஏற்றுள்ளேன். இந்நூல் உருவாக்கத்திற்குத் தேவையான தகவல்களைக் கொடுத்துதவியோர். ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள் என்பவற்றை கொடுத்துதவிய பெரியவர்கள் நூலை அச்சிட்டு உதவிய திருமலை பென்-விஷன் பிரின்டர்ஸ் நிறுவன உரிமையாளர், ஊழியர்கள், நூலை ஆக்கிய நூலாசிரியர் செ.மோகனசுந்தரம் ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நூலைப்பற்றிய அபிப்பிராயங்களை நேரடியாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தலாம் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

V.T. நவரத்தினம் (நாதன்)
சந்திரோதயமலர் பவுண்டேசன்
61, திருமால் வீதி,
திருக்கோணமலை.

தொ.பே.இல :
077 1313464
026 2220953



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் செய்தி...



சாம்பல்தீவைச் சேர்ந்தவரும் தற்போது திருமலை நகரத்தில் வாழ்பவருமான திரு.V.T.நவரத்தினம் அவர்கள் கடந்தவருட இறுதியில் என்னைச் சந்தித்தபோது எமது ஊரான சாம்பல்தீவைப்பற்றி ஒரு நூலை எழுதி வெளியிடவேண்டும் என்றும் அந்நூலை எழுதும்பணியை என்னைச் செய்யுமாறும் வெளியிடும் பணியை தான் செய்வதாகவும் கூறினார். எமது கிராமத்தைப்பற்றி ஒரு நூலை வெளியிடுவது ஒரு நல்ல பணி என்பதால் இந்நூலை ஆக்குவதற்கு நான் சம்மதித்தேன். இவ்வருடத்தின் ஜனவரி மாதத்தில் நூலாக்கப்பணியில் ஈடுபடத்தொடங்கி பெப்ரவரி இறுதியில் நிறைவு செய்தேன். ஏறக்குறைய 1600 குடும்பங்களையும் 6000 மக்களையும் 15 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக்கொண்ட ஒரு சிறிய பகுதி பற்றிய நூலாயினும் தேவையான, பொருத்தமான தகவல்களைத்திரட்டியே இந்நூலை எழுதவேண்டிய பொறுப்பிருந்தது.

"சாம்பல்தீவு ஒரு பார்வை" என்னும் நூல் சல்லியில் இருந்து சிறுப்பிட்டிவரை பரந்துள்ள அந்த நிலப்பரப்புக்குரிய தகவல்களைக் கொண்டதாகவுள்ளது. இப்பகுதி முழுவதும் முன்பு சாம்பல்தீவு எனப்படும் ஒரு கிராமசேவகர் பிரிவாகவே இருந்தது. இப்போது மூன்று கிராமசேவகர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி முழுவதும் சாம்பல்தீவு என்னும் ஒரு கிராமசபை நிருவாகத்தின் கீழேயே இருந்தது. தற்போது சாம்பல்தீவின் சில பெரிய பகுதிகளை மக்கள் தனித் தனி கிராமங்களாக பெயரிட்டுக்கூறினாலும் அவை எல்லாவற்றையும் சாம்பல்தீவு கிராமத்தின் பகுதிகளாக்கொண்டு இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இக்கிராம மக்கள் கூட அறிந்திராத பல வரலாற்றுத்தகவல்களையும் ஏனைய தகவல்களையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. கிராமங்கள் யுத்தத்தால் பாதிப்படைந்து மக்களும் இடம் பெயர்ந்து சென்று, மூத்தோர் பலர் இறந்துவிட்ட நிலையில் கிராமங்களில் ஒரு தொடர்ச்சிப் போக்கில்லாத நிலையில் இவ்வாறான ஆவணப்பதிவுகள் பயனுடையதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

இந்நூலிற்குத் தேவையான தகவல்களை பலதிணைக்களங்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், கிராமத்தில் வாழும் மக்கள். இக்கிராமத்தைச் சேர்ந்த நகரத்தில் வாழும் மக்கள், பாடசாலை அதிபர்கள், ஆகியோர் மூலமாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை வெளியீடுகள் திணைக்களங்கள அறிக்கைகள் என்பவற்றின் மூலம் பெற்றுக்கொண்டேன். எனது அறிவில் இருந்த தகவல்களையும் சேர்த்துள்ளேன். தகவல்களைப் பெறுவது சிரமமானதாக இருந்தது. ஒரு வழிமூலம் சென்று தகவல்களை பெற முயற்சித்தவேளையில் அது முடியாத நிலையில் வேறொருவழியை நாடிச்சென்று தகவலைப் பெற்றதும் உண்டு. இந்நூலுக்குத் தேவையான தகவல்களைத் தந்துதவியோர், அணிந்துரைகள், வாழத்துரைகள், ஆசிச்செய்திகள் என்பவற்றைத் தந்துதவியோர், இந்நூலை எழுதுவதற்கு என்னை ஊக்கப்படுத்திய நூல்வெளியீட்டாளர் திரு.V.T.நவரெத்தினம் ஆகியோருக்கும் நூலை அச்சிட்டு உதவிய திருகோணமலை பென் விஷன் பிரின்டஸ் நிறுவனத்திருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் பற்றிய அபிப்பிராயத்தை நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


தொ.பே.இல
077 2844859
026 2224339

திரு.செ.மோகனசுந்தரம்
57B, மக்கெய்சர் வீதி, உவர்மலை,
திருகோணமலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைவிடமும் வரலாறும்

## அமைவிடம்

சாம்பல்தீவு கிராமமானது திருகோணமலை நகரத்திற்கு வடக்கே 08 கிலோமீற்றர் தொலைவில் திருகோணமலை புல்மோட்டை வீதியை மத்தியில் கொண்டு 13.3 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அலஸ்தோட்டம் - துவரங்காடு, இக்பால்நகர் ஆகிய கிராமங்களுக்கிடையில் அமைந்துள்ளது. கிழக்கு - தெற்கு எல்லையாக கடல்நீர் ஏரியையும், கிழக்கு - வடக்கு எல்லையாக கடலையும், வடக்கு - மேற்கு எல்லையாக ஒரு சிறு மலைத்தொடரையும், மேற்கில் சிறுப்பிட்டிக்குளத்தையும் எல்லைகளாக கொண்டு அமைந்துள்ளது. சல்லி, மாங்கணாய், செம்பாடு, ஆத்திமோட்டை, கோணேசபுரி, இலுப்பைக்குளம், சிறுப்பிட்டி பகுதிகளை உள்ளடக்கி அமைந்துள்ளது.

## வரலாற்றுப் பின்னணி :

இப்பிரதேசத்தின் பெயர் பற்றி வாய்மொழிமூலமாகவே இங்குள்ள மக்களால் கூறப்பட்டு வருகின்றது. வாய்மொழி வரலாற்றையும் ஆங்காங்கே காணப்பட்ட தரவுகள், கல்வெட்டு வரலாறுகள் என்பவற்றைக் கொண்டே இப் பிரதேசத்தின் வரலாற்றுப் பின்னணியை எழுதவேண்டியுள்ளது. இப்பிரதேசத்தின் பெயர் தொடர்ந்து பலகாலமாக சாம்பல்தீவு என்று வழங்கி வருகின்றது. இப் பெயருக்கு ஏற்றாற்போல இப்பிரதேசம் எல்லாப் பகுதியிலும் கடலால் சூழப்பட்டுத் தீவாக இல்லை. ஆனால் இது எல்லைகளாகக் கடலையும், கடல்நீர் ஏரியையும், வயல் நிலங்களையும், மேட்டு நிலங்களையும் கொண்டு தனிமைப்படுத்தப்பட்ட ஒரு பிரதேசமாகவிருப்பதனால் தீவு என்று இப்பகுதி மக்களால் கருதப்பட்டிருக்கலாம். ஆனால் தீவு என்ற சொல்லுடன் "சாம்பல்" என்ற ஒரு சொல்லையும் இணைத்து எப்படிச் சாம்பல்தீவு என்று வழங்கப்படலாயிற்று என்ற கேள்வி எழுகின்றது.

இப் பிரதேசத்திற்கு மிக அண்மையிலிருக்கும் கோணேஸ்வரர் ஆலயத்தில் முற்காலங்களில் பெரும் வேள்வி நடந்ததென்றும் அவ்வேள்வி நடைபெறுவதற்கு மூட்டப்பட்ட பெரும் தீயில் இருந்து தோன்றிய சாம்பல்கள் இப் பகுதியில் கொட்டப்பட்டதென்றும் அதனாலேயே இப்பகுதி சாம்பல்தீவு என்று வழங்கப்படலாற்று என்று ஒருபகுதி மக்கள் கூறுகின்றனர். அதாவது சாம்பல்கொட்டப்பட்ட பகுதியாகையால் சாம்பல்தீவு என்று பெயர் வழங்கப்படுகின்றது என்பது இவர்களது கருத்தாகும். ஆனால் இன்னொரு பகுதி மக்கள் சாம்பல்தீவு என்ற பெயருக்குரிய காரணமாக வேறொரு கருத்தைக் கூறுகின்றனர். அதாவது "ஆம்பல்" எனப்படும் பெறுமதி வாய்ந்த ஒரு வகைக் கடல்படு திரவியம் இப்பிரதேசத்தின் கடற்கரைகளில் வந்து அடைவதனால்தான் இது முதலில் ஆம்பல்தீவு எனப்பட்டதென்றும் பின்பு "ஆம்பல்தீவு" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்தான் மருவி சாம்பல்த்தீவு என்று வந்துள்ளது என்று இவர்கள் கூறுகின்றனர்.

பெயருக்குரிய இத்தகைய வரலாறு கொண்ட பிரதேசம் திருகோணமலை நகரத்தையும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் தமது ஆதிக்கத்துக்குட்படுத்தியிருந்த அரசர்களின் செல்வாக்குக்குட்பட்டிருந்தது என்பதை அறிய முடிகின்றது. இக்கிராமத்திற்குச் சற்றுத்தொலைவில் உள்ள குச்சவெளி, திரியாய் ஆகிய கிராமங்களில் பல்லவர் காலக் கல்வெட்டுக்களை கண்டெடுத்துள்ளதாக திரு.செ.குணசிங்கம் என்ற வரலாற்று ஆசிரியர் "திருக்கோணேஸ்வரம்" என்ற தன்னுடைய ஆய்வு நூலில் எழுதியுள்ளார். எனவே குச்சவெளி, திரியாய் ஆகிய கிராமங்களில் பல்லவ்ர் ஆதிக்கம் இடம் பெற்றிருக்கிறது எனக்கொள்ளலாம். திருகோணமலை நகரத்தையும் திருக்கோணேஸ்வரத்தையும் ஆதிக்கத்துக்குட்படுத்தியிருந்த பல்லவர்கள் குச்சவெளி, திரியாய் ஆகிய கிராமங்கள் வரையும் தமது ஆதிக்கத்தை வைத்திருந்தார்கள். எனவே அக்கிராமங்களுக்கும் திருக்கோணமலைக்கும் உட்பட்ட பகுதியான சாம்பல்தீவுக் கிராமமும் அவர்களது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கவேண்டும். பல்லவர் காலத்தில் பல்லவர்களது ஆதிக்கத்திற்குள் உட்பட்டிருந்ததுமட்டுமல்லாமல் சோழர்களது ஆதிக்கத்திற்குள்ளும் இக்கிராமம் இடம்பெற்றுள்ளது.

இக்கிராமத்தின் கரையோரப்பகுதி ஆகிய மாங்கணாய் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு சோழர் காலத்திற்குரியது, என்று திரு.செ.குணசிங்கம் அவர்கள் திருக்கோணேஸ்வரம் என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கிராமத்திலிருந்து 03 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பெரியகுளம் என்ற பகுதியிலும், 07 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அயல் கிராமமான நிலாவெளி என்ற கிராமத்திலும் சோழர்காலக் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இவற்றிலிருந்து நோக்குகின்றபோது சோழர்களது ஆதிக்கத்திற்குள்ளும் இக் கிராமம் உட்பட்டிருக்கின்றது என்பது தெரிகின்றது. இவ்வாறு காலத்திற்குக் காலம் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் திருகோணமலை நகரத்தையும் தமது ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்த மன்னர்களின் ஆதிக்கத்திற்குள் சாம்பல்தீவுக் கிராமமும் உட்பட்டிருக்கிறது.

அதன் பின்பு பலகாலம் இக்கிராமத்தின் வரலாறு எப்படியிருந்தது என்பதை அறியமுடியவில்லை. பின்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இப்பிரதேசத்தின் வரலாற்றை அறியக்கூடியதாகவுள்ளது. தற்போது இப்பிரதேசத்திலுள்ள குடியிருப்புக்களின் ஆரம்பக் குடியேற்றங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாரம்பக் குடியிருப்புக்கள் இப்பிரதேசத்தின் கரையோரப்பகுதியாகிய மாங்கணாய் என்ற பகுதியிலும் இப்பிரதேசத்தின் மேற்கிலுள்ள பகுதியாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபிட்டி என்ற பகுதியிலும் காணப்பட்டிருக்கின்றன. சிறுப்பிட்டி என்ற இடத்தில் ஒருசில குடியிருப்புக்களே இருந்திருக்கின்றன. மாங்கணாய் என்ற பகுதியிலே ஏறக்குறை 20 குடும்பங்கள் அளவில் இருந்திருக்கின்றன.

1824ம் ஆண்டு மாவட்டக் கலக்டர்களால் சேகரிக்கப்பட்டு வருமான ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட சனத்தொகை பற்றிய தரவுகளை 1827ம் ஆண்டில் "NICHOLAS BERGMAN" என்பவர் தொகுத்து அச்சிட்ட "RETURN OF THE POPULATION OF THE ISLAND OF CEYLON" என்ற அறிக்கையில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் மாங்கணாய் என்ற பகுதியில் 1824இல் 156 பேர் இருந்ததாகவும் சிறுப்பிட்டி என்ற பகுதியில் 10 பேர் இருந்ததாகவும் காட்டப்பட்டுள்ளது. எனவே ஆரம்பக்குடியிருப்புக்கள், மாங்கணாய், சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளிலேயே காணப்பட்டிருக்கின்றது. 1824ல் ஆண்டில் இத்தகைய சிறிய குடித்தொகை காணப்பட்டதிலிருந்து அக்காலத்திற்குச் சற்று முன்பதாகத்தான் தற்போதைய குடியிருப்புக்களின் ஆரம்பக் குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன எனலாம். எனவே இப்பிரதேசத்தின் ஆரம்பக் குடியிருப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தோற்றம் பெற்றிருக்கிறது. 1824ம் ஆண்டளவில் இக்கிராமத்தின் பெரும்பகுதி பயன்படுத்தப்படாமல் காடடர்ந்த பிரதேசமாகவே இருந்திருக்கிறது.

பின்பு படிப்படியாக இக்கிராமத்திற்குக் குடிவரவு இடம் பெற்றிருக்கிறது. இக்கிராமத்தின் அயல்கிராமங்களான கும்புறுப்பிட்டி, கன்னியாய், உப்புவெளி போன்ற பகுதிகளில் இருந்தும் திருகோணமலை நகரத்திலிருந்தும் குடிவரவு இடம் பெற்றிருக்கின்றது. இவ்விதம் இடம் பெயர்ந்து வந்து சாம்பல்தீவுப் பிரதேசத்தில் குடியமர்ந்த மக்கள் இங்குள்ள விவசாயத்தை அடிப்படையாகக்கொண்டு வாழ்ந்துவந்திருக்கிறார்கள். 1880ம் ஆண்டளவில் இப்பிரதேசத்திற்கு ஒரு குறிப்பிடக்கூடிய குடிவரவு இடம்பெற்றுள்ளது. இப்பிரதேசத்தின் கிழக்கு மூலையில் காணப்படும் சல்லி என்றழைக்கப்படும் பகுதியில் வாழுகின்ற ஆரம்பக் குடிகளாகவே இக்குடிவரவு காணப்பட்டிருக்கின்றது. சல்லி என்கிற இப்பகுதிக்கு மீன்பிடித்தொழிலில் ஈடுபடுகின்ற மக்களே வந்து குடியேறியுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயுள்ள மீன்பிடி மக்கள் அதிகமாகவாழ்கின்ற பகுதியாகிய வல்வெட்டித்துறை என்னும் பகுதியிலிருந்தே வந்து குடியேறியுள்ளனர்.

1901ம் ஆண்டு புள்ளி விபரக்கணிப்பீட்டு அறிக்கையில் சாம்பல்தீவின் சனத்தொகை சிறுப்பிட்டி, செம்பாடு சல்லி, என்ற பகுதிகளுக்குரியதாக பிரிந்து எழுதப்பட்டிருக்கின்றது. இதில் சல்லியில் வாழ்ந்த மக்கள் தொகை சிறிதளவாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதனைக் கொண்டு சல்லிப் பகுதியில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்கு சற்று முன்பிருந்துதான் ஆரம்பக் குடியிருப்புக்கள் தோன்றின என அறிய முடிகின்றது. பின்பு சல்லிப் பகுதிக்கு மீண்டும் மீண்டும் வல்வெட்டித்துறைப் பகுதியிலிருந்து வந்து மக்கள் குடியேறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1900ஆம் ஆண்டளவில் இக்கிராமத்தின் மத்திய பகுதியான செம்பாடு என்ற பகுதியில் மக்கள் குடியமரலாயினர். 1901ம் ஆண்டு புள்ளி விபர அறிக்கையில் செம்பாடு என்ற பகுதியில் சனத்தொகையிருந்ததாகக் காட்டப்பட்டுள்ளது. சாம்பல்தீவு கிராமம் 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தொழிலடிப்படையிலான இரு பிரிவு மக்கள் வாழுகின்ற கிராமமாக மாறியிருக்கின்றது. சல்லிப் பகுதி மக்கள் மீன்பிடியையும், ஏனைய மக்கள் விவசாயத்தையும் அடிப்படையாகக்கொண்டு வாழ்ந்துவரலாயினர். 1945ஆம் ஆண்டில் இரண்டாம் உலக யுத்த காலத்தில் திருகோணமலை நகரம் தாக்கப்பட்டபோது குண்டுவீச்சுச் சம்பவங்களின் அதிர்ச்சியைக் கண்டு பயந்து சாம்பல்தீவு பிரதேச மக்கள் பலர் தற்காலிகமாகக் குடிபெயர்ந்து சென்று அண்மைக் கிராமங்களான நிலவெளி, பனிக்கட்டிமுறிப்பு, கும்புறுப்பிட்டி ஆகிய பகுதிகளில் சிறிது காலம் வாழ்ந்திருக்கின்றார்கள். இக்காலப் பகுதியில் பல மக்கள் தமது உடைமைகளை இழந்தும் உள்ளார்கள். சிலர் புதிய உடைமைகளை தேடியும் உள்ளார்கள்.

யுத்த காலத்தில் பிரித்தானிய அதிகாரிகளது தற்காலிக வாழ்விடப்பகுதியாகவும் யுத்த சேவைக்கு துணைபுரியும் துணை அலுவலகங்கள் அமைக்கப்பட்ட பகுதியாகவும் சாம்பல்தீவுப் பிரதேசம் காணப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தின் கடற்கரை ஓரங்களில் யுத்த வீரர்கள் தங்கியிருந்து திருகோணமலைத் துறைமுகத்தை நோக்கிவரும் கப்பல்களை அவதானிக்கக்கூடியதாக பல கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தன. இவையாவும் அழிந்த நிலையில் காணக்கூடியதாகவிருந்தன. சாம்பல்தீவுப் பிரதேசத்தின் எல்லையில் காணப்படும் மேட்டு நிலத்தின் உச்சியில்கூட இத்தகைய அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அவ்வலுவலகம் திருக்கோணமலையிலிருந்து கடற்படைத் தளத்துடன் தொலைத்தொடர்புக்கம்பிகளால் இணைக்கப்பட்டிருந்தது. இவ்வலுவலகமும் தற்போது அழிந்துவிட்டது.

1950ம் ஆண்டின் பின்பு இப்பிரதேசத்தின் விருத்தியுறாமல் இருந்த காடடர்ந்த பகுதிகள் விருத்தியடையத் தொடங்கின. குறிப்பாக இக் கிராமத்தின் வடக்கு - மேற்கு எல்லையைச் சார்ந்துள்ள பகுதியாகிய ஆத்திமோட்டை என்னும் பகுதி இக்காலத்தில் விருத்தியுறலாயிற்று. இப்பகுதியில் மக்கள் பழைய குடியிருப்புப் பகுதியில் இருந்தும் கிராமத்திற்கு வெளியில் இருந்தும் வந்து குடியேறலாயினர். 1970ஆம் ஆண்டின் பின்பு இக்கிராமத்தின் மேற்குப் பகுதியைச் சார்ந்திருக்கும் இலுப்பைக்குளம், சாளம்பைமோட்டை ஆகிய பகுதிகள் விருத்தியுறலாயின. இப்பகுதிகளில் மக்கள் விவசாயச் செய்கையில் ஈடுபடுவதுடன் குடியமரவும் தொடங்கினர்.


2006ஆம் ஆண்டில் இக்கிராமத்திற்கு மற்றொரு முக்கியமான குடிவரவு இடம்பெற்றுள்ளது. திருக்கோணமலையின் பல பகுதிகளிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் சாம்பல்தீவின் கிழக்கு - மேற்கு பகுதியில் அமைந்துள்ள மலைப்பகுதியான கோணேசபுரி என்னும் பகுதியில் குடியேற்றப்பட்டனர். 400 குடும்பங்கள் வரையில் இப்பகுதியில் குடியேறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமத்தின் அமைவிடமும் வீதிகளும்.

A - கேணியடிச் சந்தி
B - கடல்நீர் ஏரி
C - சல்லி கோவில்
D - நிலாவெளி வீதி
E - சாம்பல்தீவு வீதி
F - ஆத்திமோட்டை வீதி
G - சல்லி வீதி
H - மாங்கணாய் வீதி
I - கோணேசபுரி வீதி
J - சிறுப்பிட்டிவீதி
K - இலுப்பைகுளம் வீதி
L - சிறுப்பிடிகுளம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரைத்தோற்றம்

இக்கிராமத்தின் தரைத்தோற்ற அமைப்பை நோக்கும்போது இது அதிக சிக்கலான தரைத்தோற்ற அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. மிக இலகுவான தரைத்தோற்ற இயல்பையே கொண்டு விளங்குகின்றது. இப்பிரதேசம் கடற்கரையைச் சார்ந்த பகுதியாகவிருப்பதனால் கடல் மட்டத்திலிருந்து அதிக உயரம் கொண்ட பகுதியாகவில்லாமல் சிறிதளவு உயரம் கொண்ட பகுதியாகவே காணப்படுகின்றது. எனினும் இப்பிரதேசம் முழுவதும் சமமான உயரத்தைக் கொண்டிருக்கவில்லை. கடற்கரையிலிருந்தும் கடல்நீர் ஏரிக்கரையிலிருந்தும் உட்பகுதி நோக்கிச்செல்ல தரைத்தோற்றம் உயர்ச்சியடைந்து செல்வதை காணக்கூடியதாக உள்ளது. இந்த அடிப்படையில் இப்பிரதேசத்தின் தரைத்தோற்ற அமைப்பை நான்கு 1பிரிவுகளாக பிரிக்கக்கூடியதாகவுள்ளது.

25 அடிக்கு குறைந்த பகுதி
25 - 50 அடி கொண்ட பகுதி
50 அடிக்கு மேற்பட்ட பகுதி
25 அடி உயரப்பகுதி

இதில் வடக்கு - கிழக்கு எல்லையாகிய கடலைச் சார்ந்தும் தெற்கு - கிழக்கு எல்லையான கடல்நீர் ஏரி, வயல் நிலம் என்பனவற்றைச் சார்ந்ததுமான ஒரு பகுதியே 25 அடிக்கு குறைவான பகுதியாக காணப்படுகின்றது. இப் பிரதேசத்தின் மத்தியில் ஒரு பகுதி 25 - 50 அடி உயரம் கொண்டது. மத்தியில் மற்றொருபகுதி 50 அடிக்கு மேற்பட்ட பகுதியாக காணப்படுகின்றது. கிழக்கு மேற்கு மலைத்தொடரே இப்பிரதேசத்தின் அதியுயர்ந்த பகுதியாகக் காணப்படுகின்றது. இப் பகுதியின் உயரம் 125 அடி ஆகக் காணப்படுகின்றது. மொத்தத்தில் இப்பிரதேசத்தின் தரைத்தோற்றத்தை நோக்குகின்றபோது தரையமைப்பானது கிழக்கு - தெற்கு எல்லையை நோக்கியும் வடக்கு - கிழக்கு எல்லையை நோக்கியும் சாய்ந்து செல்லுகின்றது. இப்பிரதேசத்தின் அதிகூடிய உயரம் கொண்ட பகுதியாகவுள்ள மேட்டுநிலப் பகுதி குத்தான சரிவினைக் கொண்டு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**தரைத்தோற்றம் - கடல் மட்டத்திலிருந்து**

A - 25 அடி கீழ்ப்பட்டபகுதி

B - 25 அடிக்கும் 50 அடிக்கும் இடைப்பட்ட பகுதி

C - 50 அடிக்கு மேற்பட்ட பகுதி

D - 125 அடி பகுதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்வளம்

இப்பிரதேசத்தின் மண்வளத்தினை நோக்குகின்றபோது இப் பிரதேசத்தின் மண்வளமானது எங்கும் ஒரே விதமானதாகக் காணப்படவில்லை. இங்கு இடத்துக்கிடம் வேறுபட்ட மண்வளத்தைக் காணக்கூடியதாகவுள்ளது. இதன் அடிப்படையில் இப் பிரதேசத்தின் மண்வளமானது மணல் மண், செங்கபில மண், உவர் மண், வண்டல் மண், குவாட்ஸ் கலந்த கிறவல் மண் என ஐந்தாக வகுக்கக்கூடியதாகவுள்ளது. இப் பிரதேசத்தில் வடக்கு - கிழக்கு எல்லையாகக் காணப்படும் கடலைச் சார்ந்த பிரதேசத்திலும் கிழக்குத் - தெற்கு எல்லையின் சிறு பகுதியிலும் மணல் மண் காணப்படுகின்றது. அத்துடன் இப்பிரதேசத்தின் மூன்று இடங்களிலே உவர் மண்ணைக் காணக்கூடியதாகவுள்ளது. இப்பகுதிகள் கடல் நீர் உடப்புகும் பகுதிகளாகக் காணப்படுவதாலேயே உவர் மண்ணைக்கொண்டுள்ளன.

உவர் மண்ணைக் கொண்டுள்ள மூன்று பகுதிகளில் ஒரு பகுதி இப் பிரதேசத்தின் வடக்கு மூலையைச் சார்ந்து காணப்படுகின்றது. மழை காலத்தில் நீர் வழிந்தோடுகின்ற கால்வாயினூடே கடல்நீர் புகுந்து வந்து இப் பகுதியிலே பரவுவதால் இது உவர் மண்ணைக் கொண்டுள்ளது. இப் பகுதியை இங்குள்ள மக்கள் மாங்கணாய்க் கரைச்சி என்று அழைப்பர். உவர்மண் காணப்படும் இன்னொரு பகுதியானது இப்பிரதேசத்தின் கிழக்கு மூலையைச் சார்ந்து காணப்படுகின்றது. இப் பிரதேசத்தின் எல்லையில் காணப்படும் கடல்நீர் ஏரி கடலுடன் கலக்கும் கிழக்கு மூலைக்கு அண்மையிலிருந்து கடல்நீர் ஏரியின் நீர் தாழ்ந்த பகுதியினூடே வந்து இப்பகுதியில் பரவுவதால் இங்கு உவர் மண் காணப்படுகிறது. இப் பகுதியை இங்குள்ள மக்கள் இறால் குளப்பகுதியென்று அழைப்பர். இப்பிரதேசத்தின் மூன்றாவது உவர்மண் பகுதியாக இப்பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் திருக்கோணமலை - புல்மோட்டை வீதிக்கு இரு மருங்கிலும் கடல்நீர் ஏரியைச்சார்ந்த பகுதி காணப்படுகிறது. இப்பிரதேசத்தின் எல்லையில் காணப்படும் கடல்நீர் ஏரியிலிருந்து இப்பகுதியினுள் நீர் செல்வதே இதற்குக் காரணமாகவுள்ளது.


செங்கபில மண் காணப்படும் பகுதியாக இப்பிரதேசத்தின் மத்தியில் உள்ள உயர் நிலப்பகுதி காணப்படுகின்றது. இப்பகுதியிலுள்ள செங்கபில மண் மிக இறுக்கமானதாகவும் நீர் உப்புகவிடா தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் வண்டல் மண் காணப்படும் பகுதியாக இரண்டு பகுதிகள் உள்ளன. இதில் ஒரு பகுதி இப்பிரதேசத்தின் வடக்கு மூலையைச் சார்ந்தும் மற்றொரு பகுதி மேற்குப் பகுதியைச் சார்ந்தும் காணப்படுகின்றது. இதில் வடக்கு மூலையைச் சார்ந்து காணப்படும் பகுதி சிறிய பகுதியாகவும் மேற்கைச் சார்ந்து காணப்படும் பகுதி பெரிதாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதிகள் வண்டல் மண் பகுதியாகக் காணப்படுவதற்கு இப்பிரதேசத்தின் எல்லையில் காணப்படும் உயர் நிலத்திலிருந்து மழை காலத்தில் வெள்ளம் இப் பகுதிகளுக்கு பாய்ந்து செல்வதே காரணமாகவுள்ளது. கோணேசபுரி எனப்படும் வடக்கு - மேற்கு மலைப்பகுதியில் குவாட்ஸ் கலந்த கிறவல் மண் காணப்படுகின்றது. இவ்விதமாக சாம்பல்தீவு கிராமத்தின் மண்வளம் இடத்துக்கிடம் வேறுபட்டு ஐந்து வகையான மண்ணைக்கொண்டு காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வளம்


இக்கிராமத்தின் நீர்வளமாக குளத்து நீரும் தரைக்கீழ் நீரும் காணப்படுகின்றது. சிறுப்பிட்டிக்குளம், இலுப்பைக்குளம், மாங்கணாய் குளம் ஆகிய மூன்று குளங்கள் இங்கு காணப்படுகின்றன. இவற்றில் சிறுப்பிட்டிக்குளம் பெரியதாகவும், அடுத்த நிலையில் உள்ள குளமாக மாங்கணாய்க்குளமும், சிறிய குளமாக இலுப்பைக்குளமும் காணப்படுகின்றது. சிறுப்பிட்டிக்குளம் 120 ஏக்கருக்கும், மாங்கணாய் குளம் 20 ஏக்கருக்கும், இலுப்பைக்குளம் 12 ஏக்கருக்கும் நீர்ப்பாசனம் செய்யக்கூடியது. ஆனாலும் கோடை வேளாண்மைச் செய்கைக்கு குளத்திலுள்ள நீர்மட்டத்தைப் பொறுத்து நீர்ப்பாசன ஏக்கர் அளவு வேறுபடுகின்றது. சிறுப்பிட்டிக்குளம் 90 ஏக்கருக்கும், மாங்கணாய் குளம் 15 ஏக்கருக்கும் கோடைச் செய்கைக்கு நீர்ப்பாசனத்தை வழங்குகின்றது.

இங்கு தரைக்கீழ் நீர்வளம் சல்லி, மாங்கணாய் ஆகிய பகுதிகளில் கூடிய அளவில் காணப்படுகின்றது. இப்பகுதிகள் தாழ்ந்த பகுதிகளாக இருப்பதுடன் நீரை உட்புக விடக்கூடிய மணல்மண்காணப்படுகின்றமை, நீரைத்தேக்கிவைக்கக் கூடிய சுண்ணக்கற்பாறைப்படைகள் தரையின் கீழ் காணப்படுகின்றமை ஆகிய காரணங்களால் இங்கு தரைக் கீழ் நீர்வளம் கூடிய அளவில் காணப்படுகின்றது. இவற்றைவிட ஆத்திமோட்டை, இலுப்பைக்குளம் ஆகிய பகுதிகளில் தரைக்கீழ் நீர் ஓரளவில் காணப்படுகின்றது. செம்பாட்டுப்பகுதியில் தரைக்கீழ் நீர் மிகவும் அரிதாகவுள்ளது. செம்பாட்டுப்பகுதி இறுக்கமான மண்படையைக் கொண்டுள்ளதுடன் நீர் வழிந்தோடக் கூடியதான மேட்டு நிலப்பகுதியாக காணப்படுகின்றது. இதனால் மழைநீர் இப்பகுதியில் உட்செல்வது குறைவு. எனவே செம்பாட்டுப்பகுதியில் நீர்வளம் குறைவாகவுள்ளது. இப்பகுதி சிறந்த மண்வளத்தை கொண்டுள்ள போதிலும், நீர்வளம் மிகக்குறைவாக உள்ளதால் இப்பகுதியிலுள்ள நிலம் பயன்படுத்தப்படுவது குறைவாகவுள்ளது.

உள்ளூர் நீர்வளத்தைவிட கந்தளாய்க் குளத்தில் இருந்து வரும் குழாய் நீரும் அண்மைக்காலத்திலிருந்து இக்கிராமத்திற்கு கிடைக்கின்றது. கோணேசபுரிப்பகுதியில் இருக்கும் மக்களில் பெரும்பாலானோர் குழாய் நீரையே பயன்படுத்துகின்றனர். ஏறத்தாழ 2000 பேர்வரையில் சாம்பல்தீவு கிராமத்தில் குழாய் நீரைப்பயன்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தின் பகுதிகள்

ஒரு நகரமோ கிராமமோ நீண்டகால அடிப்படையில் விரிவடைந்து செல்வது இயல்பானதே. இதற்கு காரணம் இருக்கும் குடித்தொகையின் இயற்கையான அதிகரிப்பு அடுத்தது வேறுபகுதிகளில் இருந்து மக்கள் வருவதும், கொண்டு கொண்டு வரப்படுவதும் ஆகும். இந்நிலை சாம்பல்தீவு கிராமத்திற்கும் காணப்பட்டு கிராமம் விரிவடைந்து பல பகுதிகளைக் கொண்டுள்ளது. சாம்பல்தீவு கிராமமானது. சல்லி, ஆத்தடி, செம்பாடு, மாங்கணாய், ஐயன்குடா, அடுக்குப்பார், ஆத்திமோட்டை, இறால்குளப்பகுதி, புலவு, நாவல்மோட்டை பகுதி, முதலியார் தரை பகுதி, இலுப்பைக்குளம், கோணேசபுரி, சாளம்பமோட்டை, சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. இப்பகுதிகளின் பெயர்கள் பெரும்பாலும் காரணப் பெயர்களாகவே காணப்படுகின்றன.

**சல்லி :**

இப்பகுதி கிராமத்தின் கிழக்கு மூலையைச் சார்ந்து அமைந்துள்ளது. கடல்நீர் ஏரியையும் கடலையும் சார்ந்து அமைந்துள்ளது. கடலைச்சார்ந்த பிரதேசமாகையால் கடற்தொழில் பிரதான தொழிலாக காணப்படுகின்றது. சில குடும்பங்கள் விவசாயம் வியாபாரம் என்பவற்றிலும் ஈடுபடுகின்றன. தென்னைப் பயிர்ச்செய்கையும் இப்பகுதியில் காணப்படுகின்றது. 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து மக்கள் இங்கே வாழ்ந்து வருகின்றனர். தென்னந்தோட்டப்பகுதிகளை விடுத்த ஏனைய பகுதிகளில் குடியிருப்புக்கள் நெருக்கமாக காணப்படுகின்றன. சல்லி முத்துமாரி அம்மன் ஆலயம், ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயம், கடற்கரை பிள்ளையார் ஆலயம், தி/ சல்லி அம்பாள் மகா வித்தியாலயம், கூட்டுறவுச்சங்க கடை என்பவை இப்பகுதியில் அமைந்துள்ளன. சல்லி எனப்படும் சிறிய வெள்ளைநிற சுண்ணக்கற்கள் இங்குள்ள கடற்கரையில் காணப்படுவதால் இப்பகுதி சல்லி எனப்படுகின்றது.

**ஆத்தடி :**

சாம்பல்தீவு கடல்நீர் ஏரியைச் சார்ந்து சல்லிப்பகுதியுடன் இணைந்துள்ள பகுதியையே இங்குள்ள மக்கள் ஆத்தடி என்கின்றனர். கடல்நீர் ஏரியின் ஒடுங்கிய பகுதியை இங்குள்ள மக்கள் ஆறு என்பதால் இப்பகுதியை ஆத்தடி என்று அழைக்கின்றனர். இங்குள்ள சில குடும்பங்கள் கடற்தொழிலில் ஈடுபடுகின்றனர். சில குடும்பங்கள் மிருகவளர்ப்பு, தென்னைப்பயிர்ச்செய்கை என்பவற்றில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் தெங்குப்பயிர்ச்செய்கை முக்கியம் பெற்றுள்ளது.

**மாங்கணாய் :**

இப்பகுதி சாம்பல்தீவு கிராமத்தின் கிழக்குப்பகுதியாக காணப்படுகின்றது. கிழக்குப்புறத்தில் கடலை எல்லையாகக் கொண்டுள்ளது. இப்பகுதியிலும் மக்கள் வாழ்கின்றனர். மிக ஆரம்பத்தில் இருந்தே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். 1824ஆம் ஆண்டிலேயே 156 பேர் இப்பகுதியில் வாழ்ந்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பகுதியில் தென்னைப் பயிர்ச்செய்கை முக்கியம் பெற்றுள்ளது. மாரி அம்மன் ஆலயம், ஒரு கிறிஸ்தவ ஆலயம், இந்து மயானம், கிறிஸ்தவ மயானம் என்பவை இப்பகுதியில் அமைந்துள்ளன. விலங்குவளர்ப்பும் இப்பகுதியில் முக்கியம் பெற்றுள்ளது.

**செம்பாடு :**

இப்பகுதியானது மாங்கணாய், சாம்பல்தீவின் பிரதான வீதி, ஆத்திமோட்டை ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்டதாக காணப்படுகின்றது. செங்கபிலமண் (செம்மண்) காணப்படுவதால் இப்பகுதி செம்பாடு எனப்படுகின்றது. இப்பகுதி சற்று உயர்ந்த நிலமாக இருப்பதால் நீர்வளம் குறைவாகவுள்ளது. இப்பகுதியில் மா, பலா ஆகிய வான்பயிர்கள் (நீண்டகாலப் பயிர்கள்) முக்கியம் பெற்றுள்ளன. விலங்கு வளர்ப்பும் இங்கு முக்கியமாகவுள்ளது. குடும்பங்களின் நிலப்பரப்பு 1 - 2 ஏக்கராக காணப்படுகின்றது.

**இறால் குளப்பகுதி :**

இப்பகுதி சல்லிக்கும் செம்பாட்டுப்பகுதிக்கும் இடைப்பட்டதாக காணப்படுகின்றது. இங்கு ஒரு உவர்நீர் ஏரி காணப்படுகின்றது. அதில் இறால்கள் உள்ளதால் இது இறால்குளம் எனப்படுகின்றது. இறால் குளத்தைச்சார்ந்த பகுதி இறால்குளப்பகுதி எனப்படுகின்றது. சாம்பல்தீவு கடல்நீர் ஏரியில் இருந்து நீர் இவ் ஏரிக்கு ஏறுவதால் இது உவர்நீர் ஏரியாக காணப்படுகின்றது. இவ் ஏரியில் இறால், மீன் என்பவற்றை மக்கள் பிடிப்பர். இப்பகுதியில் பனைமரங்கள் வளர்கின்றன.

**ஐயன்குடா :**

மாங்கணாய்க்கும் செம்பாட்டுபகுதிக்கும் அருகிலுள்ள ஒருபகுதி ஐயன்குடா எனப்படுகின்றது. ஐயனார் எனப்படும் தெய்வத்தை இப்பகுதியில் வைத்து மக்கள் வழிபட்டதாலும் கிராமத்தின் ஒரு மூலையாக இருப்பதாலும் இப்பகுதி ஐயன்குடா எனப்படுகின்றது. இங்கு ஒரு குளமும் வயல் நிலங்களும் காணப்படுகின்றன. இக்குளம் மாங்கணாய்குளம் எனப்படுகின்றது. நெற்செய்கையும், விலங்குவளர்ப்பும் இப்பகுதியில் முக்கியம் பெற்றுள்ளது. இப்பகுதியில் பல குடும்பங்கள் வாழ்கின்றன.

**ஆத்திமோட்டை :**

செம்பாட்டுப்பகுதிக்கும், நிலாவெளி வீதிக்கும் கோணேசபுரிக்கும் இடைப்பட்டதாக ஆத்திமோட்டைப்பகுதி அமைந்துள்ளது. ஆத்தி என்பது ஒரு வகை மரம் மோட்டை என்பது சிறிய நீர்நிலை (குட்டை) இவ்விரு சொற்களையும் ஒன்றிணைத்ததாகவே ஆத்திமோட்டை என்ற சொல்காணப்படுகின்றது. ஆத்திமரத்தையும் குட்டையையும் கொண்டிருந்ததால் இப்பகுதி ஆத்திமோட்டை எனப்படுகின்றது. இப்பகுதி காடாகக்காணப்பட்டது. 1950ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம் ஆண்டுவரையிலும் மக்கள் குடியேற்றம் இங்கும் இடம் பெற்றது. சாம்பல்தீவின் ஏனைய சிலபகுதியைச் சேர்ந்த மக்களும் வெளியூர் மக்களும் இப்பகுதியில் குடியேறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திமோட்டையின் சில பகுதிகள் தாழ்ந்த நிலமாக மழைகாலத்தில் வெள்ளம் தேங்கும் பகுதியாக காணப்பட்டது. நெற்செய்கை, மேட்டு நிலப்பயிர்ச் செய்கை, விலங்கு வளர்ப்பு என்பவை இப்பகுதியில் முக்கியம் பெற்றுள்ளன. இப்பகுதியில் விவசாயசேவை நிலையம், ஐயப்பன் ஆலயம், லக்ஷ்மி நாராயணர் ஆலயம், தி/ ஆத்திமோட்டை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் என்பவை அமைந்துள்ளன.

**கோணேசபுரி :**

சாம்பல்தீவு கிராமத்தின் கிழக்கு - மேற்கில் அமைந்துள்ள ஒரு நீண்ட மலைத்தொடர்ப்பகுதியே கோணேசபுரி எனப்படுகின்றது. இப்பகுதி நீண்டகாலமாக காட்டுப்பகுதியாக காணப்பட்டது. சாம்பல்தீவு மக்கள் விறகு பெறும்பகுதியாகவும், மரம், கம்பு, தடி என்பவற்றைப் பெறும் காட்டுப்பகுதியாகவும் இது காணப்பட்டது. 1973ஆம் ஆண்டில் இக்காட்டுப்பகுதியை மக்கள் அழித்து சின்ன வெண்காயச் செய்கையில் ஈடுபட்டனர். அப்போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களின் ஆட்சி நிலவியது. இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டு உள்ளூர் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்தால் சின்ன வெண்காயச்செய்கை முக்கியம் பெற்றது. இம்மலைப்பகுதி முழுவது வெண்காயச் செய்கை இடம் பெற்றது சாம்பல்தீவு மக்களும் நகரப்பகுதியைச் சேர்ந்த மக்கள் சிலரும் இங்கு வெண்காயச் செய்கையில் ஈடுபட்டனர். சில வருடங்களில் வெங்காயச்செய்கை கைவிடப்பட்டு இப்பகுதி தரிசுநிலமாக காணப்பட்டது.

2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமிப்பேரலை அனர்த்தத்தின் பின்பு மீண்டும் இப்பகுதி முக்கியம்பெற்று மக்கள் குடியிருப்புக் கொண்ட பகுதியாக மாறியது. (நிலாவெளிவீதியின் 6ஆம் கட்டைப்பகுதியிலிந்து அடுக்குப்பார் வரை) இம்மலையின் அடிவாரத்தில் நிலாவெளி வீதியில் இருந்து அடுக்குப்பார் வரை ஒரு வீதி காணப்படுகின்றது. இது கோணேசபுரி வீதி எனப்படுகின்றது. 1973ஆம் ஆண்டில் இப்பகுதிக்கு கோணேசபுரி என்றும் இவ்வீதிக்கு கோணேசபுரி வீதி என்றும் அப்போதைய அரச அதிபர் திஸ்ஸ தெய்வேந்திர அவர்களின் அனுமதியுடன் பெயர்சூட்டப்பட்டது. கோணேசப்பெருமானின் பெயரைக்கொண்டே இப்பெயர் சூட்டப்பட்டது.

சுனாமிப்பேரலையின் போது பாதிக்கப்பட்ட கரையோரக்கிராம மக்கள் கோணேசபுரியில் 2006ஆம் ஆண்டில் குடியேற்றப்பட்டனர். சீனக்குடா, மட்கோ, பாலையூற்று, லிங்கநகர், பூம்புகார், உவர்மலை, தில்லைநகர், மனையாவெளி, பட்டினத்தெரு, திருக்கடலூர், முருகாபுரி, உப்புவெளி, சல்லி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுனாமியியால் பாதிக்கப்பட்டு வீடிழந்த மக்களே இங்கு குடியேற்றப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு அரசார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடனும், சணச வங்கியின் நிதியுதவியுடனும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 372 வீடுகள் இப்பகுதியில் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. இது சுனாமி வீடமைப்புத்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் சொல்லப்படுகின்றது. இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக காணப்படுவது கடற்தொழிலாகும். கூலித்தொழில் செய்வோரும், அரச தொழில் புரிவோரும் இங்கு உள்ளனர். சுனாமி பாதிப்பு அல்லாது யுத்த இடப்பெயர்வு காரணமாகவும் மூதூர்பகுதியைச் சேர்ந்த சில குடும்பங்கள் கோணேசபுரியின் முற்பகுதியில் குடியேறியுள்ளனர். பல்வேறு கிராம மக்கள் சங்கமமான ஒரு பகுதியாக கோணேசபுரி காணப்படுகின்றது.

சாம்பல்தீவு கிராமத்தினுள்ளும் கோணேசபுரி என்னும் பகுதி அமைந்துள்ளது. கோணேசபுரியின் ஒருபகுதி நிலாவெளிக்கிராமத்துடனும் இணைந்துள்ளது. இப்பகுதியிலேயே திருகோணமலை பல்கலைக்கழ வளாகம் அமைந்துள்ளது.

**அடுக்குப்பார் :**

மாங்கணாய், கோணேபுரி, கிழக்குப்பகுதி கடல் என்பவற்றை சார்ந்த ஒடுங்கிய ஒரு சிறுபகுதியே அடுக்குப்பார் எனப்படுகின்றது. சாம்பல்தீவு கிராமத்தின் வடக்கு மூலைப்பகுதியாக இப்பகுதி காணப்படுகின்றது. இப்பகுதியின் கடற்பகுதியில் கரையைச் சார்ந்து சுண்ணக்கற்பாறை அடுக்காகக் காணப்படுவதால் இப்பகுதி அடுக்குப்பார் எனப்பட்டது. முன்பு இப்பகுதியில் சுண்ணாம்பு சுடும் சூளைகள் சில இயங்கின. இங்கு காணப்படும் சுணக்கற் பாறைகளைப் பயன்படுத்தி சுண்ணாம்பு உற்பத்தி செய்யப்பட்டது. அத்துடன் சல்லிப்பகுதியை சேர்ந்த மக்கள் சிலர் இங்கு மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர். தற்போது கோணேசபுரியைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் இங்கு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இப்பகுதியில் இறையியல் கல்லூரி ஒன்றும், மீன்வளர்ப்பு நிலையம் ஒன்றும் இயங்குகின்றது. இப்பகுதியில் குடியிருப்புக்கள் இல்லை, பனை மரங்கள் உள்ளன.

**புலவு பகுதி :**

சாம்பல்தீவின் பிரதான வீதிக்கும் செம்பாட்டுப்பகுதிக்கும், ஆத்திமோட்டைக்கும் இடைப்பட்ட ஒருபகுதி புலவு எனப்படுகின்றது. "புலவு" என்பது தோட்டம் என்று பொருள்படும். சாம்பல்தீவு மக்கள் பயன்படுத்திய நிலம் இப்பகுதியில் காணப்பட்டதால் இப்பகுதி புலவு எனப்பட்டது. சில குடும்பங்கள் இப்பகுதியில் வாழ்கின்றன. பனை மரங்கள், நெல்வயல் என்பவை இப்பகுதியில் உண்டு.

**இலுப்பை குளப்பகுதி :**

நிலாவெளி வீதியின் இடப்புறமாக கிராமத்தின் மேற்கில் அமைந்துள்ள மலைத்தொடர், சிறுப்பிட்டி, சாளம்பமோட்டை, ஆத்திமோட்டை ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்டதாக அமைந்த பகுதி இலுப்பைகுளம் எனப்படுகின்றது. இலுப்பை என்பது ஒரு வகை மரம். இப்பகுதியில் உள்ள ஒரு சிறு குளத்தை சார்ந்து இலுப்பை மரங்கள் காணப்பட்டதால் இப்பகுதி இலுப்பைகுளம் எனப்படுகின்றது. 1970 ஆண்டளவில் இப்பகுதியின் காடுகள் அழிக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம் விருத்தி செய்யப்பட்டது. படித்த இளைஞர்களுக்கு 25 ஏக்கர்நிலம் மேட்டு நிலப்பயிர்ச்செய்கைக்கென 1973 ஆண்டில் அரசாங்கத்தினால் இப்பகுதியில் குளத்தை அண்மித்து வழங்கப்பட்டது. இந்நிலம் விருத்தி செய்யப்பட்டு உப உணவுப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. 1973இன் பின்பு இப்பகுதியில் சில குடும்பங்கள் குடியேறத்தொடங்கின. தற்போது ஆத்திமோட்டைப்பகுதியைச் சேர்ந்த மக்களும், கன்னியாவைச் சேர்ந்த மக்களும் பலர் இங்கு குடியேறியுள்ளனர். நெல் விவசாயம், மேட்டு நிலப்பயிர்ச்செய்கை, விலங்குவளர்ப்பு என்பவை இப்பகுதியில் முக்கியம் பெற்றுள்ளன.

**சிறுப்பிட்டி** :

கன்னியாய், சாளம்பமோட்டை, மேற்கு மலைத்தொடர் என்பவற்றிற்கு இடைப்பட்டதாக அமைந்துள்ள ஒருபகுதியே சிறுப்பிட்டி எனப்படுகின்றது. சிறிய கிறவல் குன்றுகள் இப்பகுதியில் அமைந்துள்ளமையால் இப்பகுதி சிறுப்பிட்டி எனப்படுகின்றது. புட்டி அல்லது பிட்டி என்பது பேச்சு வழக்கில் சிறிய குன்றுகளை குறிக்கும். இப்பகுதியில் பெருமளவில் வயல்நிலங்களும் காடுகளும் இருந்தன இப்போது காட்டுநிலங்கள் அழிக்கப்பட்டு அங்கு 32 குடும்பங்கள் 2007 ஆம் ஆண்டில் குடியமர்த்தப்பட்டுள்ளன. 1824ஆம் ஆண்டில் இப்பகுதியில் 10பேர் வாழ்ந்ததாக அப்போதைய குடித்தொகை கணிப்பீட்டு அறிக்கையில் குறிபிடப்பட்டுள்ளது. நெல்விவசாயமே இங்கு முக்கியம் பெற்றுள்ளது. 120 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்யக்கூடிய ஒரு குளம் இங்கு உள்ளது. இக்குளம் சிறுப்பிட்டிக்குளம் எனப்படுகின்றது. இங்குள்ள வயல் நிலங்கள் செம்பாடு, சல்லி, மாங்கணாய் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு உரியவையாகும். இங்கு குடியேறியுள்ள 32 குடும்பங்கள் கூலித்தொழில், விறகு விற்பனை, விலங்கு வளர்ப்பு என்பவற்றில் ஈடுபடுகின்றனர்.

**சாளம்பமோட்டை** :

சிறுப்பிட்டி, இலுப்பைக்குளம் கரைச்சி ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட ஒரு வயல் நிலப்பகுதியே சாளம்பமோட்டை எனப்படுகின்றது. இங்கு குடியிருப்புக்கள் இல்லை. 90 ஏக்கர்வயல் நிலப்பரப்பு இப்பகுதியில் உண்டு. செம்பாடு, மாங்கணாய் ஆகிய பகுதிக்குரிய மக்களின் வயல் நிலங்களாக இவை காணப்படுகின்றன. "சாளம்பை" என்பது ஒருவகை மரம் "மோட்டை" என்பது சிறிய நீர்க்குட்டை சாளம்பை மரங்களும் அதனைச்சார்ந்து சிறிய நீர்க்குட்டையும் அமைந்திருந்தமையால் இப்பகுதி சாளம்பமோட்டை எனப்படுகின்றது.

**நாவல்மோட்டைப்பகுதி** :


செம்பாடு மாங்கணாய் ஆகிய பகுதிகளைச் சார்ந்த ஒரு சிறிய பகுதியே நாவல்மோட்டை பகுதி எனப்படுகின்றது. நாவல்மரமும் நீர்க்குட்டையும் அமைந்திருந்தமையால் இப்பகுதி நாவல்மோட்டைபகுதி எனப்பட்டது. இப்பகுதியில் வயல்நிலம், தென்னந்தோட்டம், மேட்டுநிலம் என்பவையுண்டு, தற்போது கிராமசேவை உத்தியோகத்தரின் அலுவலகம் இயங்கும் பலநோக்குக்கட்டிடம் இப்பகுதியிலேயே அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலியார் தரைப்பகுதி :**

புலவுப்பகுதிக்கும், ஆத்தடிப்பகுதிக்கும், சாம்பல்தீவு சந்திக்கும் இடைப்பட்ட ஒரு சிறுபகுதியே முதலியார் தரைப்பகுதி எனப்படுகின்றது. இப்பகுதியில் தென்னந்தோட்டங்கள் அமைந்துள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமசேவகர் பிரிவுகள்

முன்பு சாம்பல்தீவானது சல்லி முதல் சிறுப்பிட்டிவரை ஒரு கிராமசேவகர்பிரிவாக காணப்பட்டது. கிராமத்தின் பகுதிகள் விரிவடைந்து மக்கள் தொகை அதிகரித்திருப்பதாலும். நிருவாக வசதியின் பொருட்டும் சாம்பல்தீவு கிராமமானது சல்லி, சாம்பல்தீவு, இலுப்பைக்குளம் என மூன்று கிராமசேவகர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சாம்பல்தீவானது கிராமசபை நிருவாகமுறையின் கீழ் 08 வட்டாரப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. சல்லி எனப்படும் தற்போதைய கிராமசேவகர் பிரிவானது 01ஆம், 02ஆம், 05ஆம், 07ஆம் வட்டாரங்களை உள்ளடக்கியதாகவுள்ளது. கிராமத்தின் பகுதிகளாக பார்க்கும் போது ஆத்தடி, சல்லி, இறால் குளப்பகுதி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

சாம்பல்தீவு கிராமசேவகர் பிரிவானது 03ஆம், 04ஆம், 06ஆம் வட்டாரப் பிரிவுகளை கொண்டுள்ளது. கிராமத்தின் பகுதிகளில் மாங்கணாய், செம்பாடு, ஐயன்குடா, ஆத்திமோட்டையின் கிழக்குப்பகுதி, கோணேசபுரி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. இலுப்பைக்குளம் கிராமசேவகர் பிரிவானது 08ஆம் வட்டாரத்தை உள்ளடக்கியுள்ளது. கிராமத்தின் பகுதிகளான புலவுப்பகுதி, ஆத்திமோட்டையின் மேற்குப்பகுதி, இலுப்பைகுளம், சிறுப்பிட்டி, சாளம்பமோட்டை ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிராமத்தின் வட்டார பிரிவுகள்**

1. முதலாம் வட்டாரம்
2. இரண்டாம் வட்டாரம்
3. மூன்றாம் வட்டாரம்
4. நான்காம் வட்டாரம்
5. ஐந்தாம் வட்டாரம்
6. ஆறாம் வட்டாரம்
7. ஏழாம் வட்டாரம்
8. எட்டாம் வட்டாரம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமசேவகர் பிரிவுகளின் அடிப்படை தகவல்கள்

| விடயம் | சல்லி கிராம சேவகர் பிரிவு | சாம்பல்தீவு கிராமசேவகர் பிரிவு | இலுப்பைக்குளம் கிராமசேவகர் பிரிவு | சாம்பல்தீவு கிராமத்தின் மொத்தம் |
|---|---|---|---|---|
| குடும்பங்கள் | 616 | 633 | 376 | 1625 |
| மொத்தமக்கள் தொகை | 2020 | 2542 | 1427 | 5989 |
| ஆண்கள் | 971 | 1238 | 702 . | 2911 |
| பெண்கள் | 1040 | 1304 | 725 | 3069 |
| யுத்தத்தால் கணவனை, இழந்தவர்கள் | 12 | 33 | 03 | 48 |
| இயற்கை மரணத்தால் கணவரை இழந்தவர்கள் | 20 | 43 | 09 | 72 |
| நிலப்பரப்பு | 4.5 ச.கி.மீ | 5.2 ச.கி.மீ | 5.3 ச.கி.மீ | 15 ச.கி.மீ |
| பாடசாலை | 02 | - | 01 | 03 |
| முன்பள்ளி | 03 | 01 | 01 | 05 |
| நிரந்தர வீடுகள் | 420 | 555 | 307 | 1282 |
| தற்காலிக வீடுகளும், அரை நிரந்தர வீடுகளும் | 364 | 59 | 14 | 437 |
| பொதுக்கிணறுகள் | 05 | 05 | 13 | 23 |
| பலநோக்கு கட்டிடம் | 01 | 01 | 01 | 03 |
| இயலாதோர் | 12 | 08 | 07 | 27 |
| சமுர்த்தி மானியம் பெறுவோர் | 259 | 303 | 185 | 747 |
| உதவிமானியம் பெறுவோர் | 59 | 91 | 26 | 176 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கை

நெற்செய்கையில் ஈடுபடுத்தக்கூடிய தரை அமைப்பும், மண்வளமும் குளங்களும் சாம்பல்தீவில் காணப்படுவதால் இங்கு விவசாயத்தில் நெற்செய்கையும் முக்கியம் பெற்றுள்ளது. சிறுப்பிட்டி குளம், இலுப்பைக்குளம், மாங்கணாய்குளம் ஆகிய மூன்று குளங்கள் இங்குள்ளன. இங்கு நெற்செய்கை நடைபெறும் பகுதிகளாக சிறுப்பிட்டி, இலுப்பைக்குளம், சாளம்பைமோட்டை, ஆத்திமோட்டை, ஐயன்குடா (மாங்கணாய்) ஆகிய பகுதிகள் காணப்படுகின்றன. சிறுப்பிட்டியில் 120 ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப்படுகின்றது. இந்த 120 ஏக்கர் நிலத்திற்கும் பெரும் போகத்தில் நீர்ப்பாசனம் சிறுப்பிட்டிக்குளத்தின் மூலம் கிடைக்கின்றது. 15 விவசாயிகள் இங்கு நெற்செய்கையில் ஈடுபடுகின்றனர். இங்கு விவசாயிகளின் நிலவுடமை 2 தொடக்கம் 20 ஏக்கர் வரை காணப்படுகின்றது. சிறுப்பிட்டி குளத்தின் மூலம் 90 ஏக்கர் நிலப்பரப்பிற்கு சிறுபோகத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கின்றது.

இலுப்பைக்குளப்பகுதியில் 90 ஏக்கர் நிலப் பகுதியில் நெல் பயிரிடப்படுகின்றது. மானாவாரிச் செய்கையாகவே இச்செய்கை காணப்படுகின்றது. இந்நிலப்பரப்பில் 12 ஏக்கர் மானாவாரிச் செய்கைக்கு மழையற்ற காலத்தில் இலுப்பைக்குளத்தினால் நீர் பாய்ச்சப்படுகின்றது. 36 விவசாயிகள் இப்பகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். சாளம்பைமோட்டைப் பகுதியில் 45 விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். 70 ஏக்கர் நிலப்பரப்பில் மானாவாரிச்செய்கையாக இங்கு நெற்செய்கை நடைபெறுகின்றது. குளத்து நீர்ப்பாசன வசதி இப்பகுதிக்கு இல்லை.

ஆத்திமோட்டைப்பகுதியில் 40 விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுகின்றனர். இங்கு 40 ஏக்கரில் மானாவாரிச்செய்கையாக இச் செய்கை நடைபெறுகின்றது இங்கும் நீர்ப்பாசன வசதி இல்லை. ஐயன்குடாப்பகுதியில் (மாங்கணாய்) 60 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்படுகின்து. 55 விவசாயிகள் இங்கு நெற்செய்கையில் ஈடுபடுகின்றனர். இங்குள்ள நெற்செய்கையின் ஒருபகுதிக்கு மாங்கணாய் குளத்தின் மூலம் நீர்ப்பாசனம் கிடைக்கின்றது. இக்குளத்தின் மூலம் 10 ஏக்கருக்கு சிறுபோக நெற்செய்கைக்கும் நீர்ப்பாசனம் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நெல் பயிரிடப்படும் பகுதிகள் | மொத்த நெற்செய்கை நிலப்பரப்பு (ஏக்கரில்) | நீர்ப்பாசனவசதி கிடைக்கும் நிலப்பரப்பு (ஏக்கரில்) | சிறுபோகம் செய்யப்படும் நிலப்பரப்பு (ஏக்கரில்) | நெல் விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிறுப்பிட்டி | 120 | 120 | 90 | 15 |
| இலுப்பைக்குளம் | 80 | 12 | - | 36 |
| சாளம்பமோட்டை | 90 | - | - | 45 |
| ஆத்திமோட்டை | 40 | - | - | 40 |
| ஐயன்குடா (மாங்கணாய்) | 60 | 20 | 10 | 55 |
| | 390 | 152 | 100 | 191 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப உணவும் பயிர்ச்செய்கை

உப உணவுப் பயிர்ச்செய்கை செய்வதற்குரிய நிலவளமும் ஓரளவு நீர் வசதியும் சாம்பல்தீவில் காணப்படுவதால் உப உணவுப் பயிர்ச்செய்கையும் இங்கு நடைபெறுகின்றது. இங்கு நடைபெறும் உப உணவுப்பயிர்களும் பயிரிடப்படும் ஏக்கர் அளவும் வருமாறு.

| பயிர் வகை | ஏக்கர் அளவு |
|---|---|
| சின்ன வெண்காயம் | 20 |
| மரவள்ளி | 67 |
| மிளகாய் | 18 |
| பயறு | 05 |
| உழுந்து | 07 |
| நிலக்கடலை (கச்சான்) | 25 |
| மரக்கறி | 33 |
| சோளம் | 22 |
| மொத்தம் | 197 |

மரக்கறி செய்கையில் கத்தரி, தக்காளி, வெண்டி, புடோல், கீரைவகை என்பவை பயிரிடப்படுகின்றன. மரவள்ளிச்செய்கை ஆரம்பத்தில் செம்பாட்டுப்பகுதியிலேயே முக்கியம் பெற்றிருந்தது. செம்பாட்டு மண் மரவள்ளிச்செய்கைக்குச் சிறந்ததாக காணப்பட்டதாலும், இப்பகுதியில் நீர்வளம் இன்மையால், மழையை நம்பி இப்பயிரை செய்யக்கூடியதாக இருந்தாலும். செம்பாட்டுப்பகுதியில் ஒரு வருடப்பயிராக மரவள்ளி பயிரிடப்பட்டது. இப்பகுதியில் மரவள்ளி நல்ல விளைச்சலைக் கொடுத்தது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட மரவள்ளிக்கிழங்கு அப்போது கூடிய அளவில் கிண்ணியாவிற்கு எடுத்துச்செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. செம்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த சிலர் மாட்டுவண்டிகளில் மரவள்ளிக்கிழங்கை கிண்ணியாவிற்கு எடுத்துச்சென்று விற்பனை செய்வர். கிண்ணியா மக்களின் வேண்டுகோளின் பேரில் இவர்கள் மரவள்ளித்தடிகளையும் கிண்ணியாவிற்கு எடுத்துச்சென்று கொடுத்தனர். அதன்பின்பே கிண்ணியாவிலும் மரவள்ளிச்செய்கை விருத்தியடைந்தது. கிண்ணியாவிற்கு மரவெள்ளிச் செய்கையை அறிமுகப்படுத்தியவர்கள் சாம்பல்தீவு மக்களேயாவர். தற்போது சாம்பல்தீவில் உப உணவுப்பயிர்ச் செய்கையானது, மாங்கணாய், ஆத்திமோட்டை, இலுப்பைக்குளம் ஆகிய பகுதிகளில் முக்கியம் பெற்றுள்ளது. செம்பாட்டுப்பகுதியில் மரவள்ளிச் செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழச்செய்கை

சாம்பல்தீவில் பழச்செய்கையும் நடைபெற்று வருகின்றது. மா, பலா, வாழை, பப்பாசி ஆகிய பழச்செய்கை இடம்பெறுகின்றது. சாம்பல்தீவு என்றால் மாம்பழம், பாலாப்பழம் என்பவற்றிற்கு முக்கியம் பெற்ற பகுதியென்று திருமலையின் பல பகுதிகளுக்கும் தெரியும். சாம்பல்தீவின் மாம்பழம், பலாப்பழம் சுவைமிக்கவை அதனால் இவ்வூரின் மாம்பழம், பலாப்பழம் என்பவற்றிற்கு நல்ல மவுசு முன்பு செம்பாட்டுப்பகுதியிலேயே மா, பலாசெய்கை முக்கியம் பெற்றிருந்தது. இப்பகுதி நீர்வளம் குறைந்த பகுதியாக இருப்பதால் வான்பயிர்களான மா, பலா என்பவற்றை செம்பாட்டுப்பகுதி மக்கள் பயிரிட்டனர். செம்பாட்டுமண்ணில் மா, பலா என்பவை நன்றாக வளர்ந்து கூடிய விளைச்சலை தருவதுடன் செம்பாட்டு மண்ணில் வரண்ட நிலத்தில் விளையும் இப்பழங்கள் மிகவும் சுவையானவை.

மா, பலா என்பவை நீர்ப்பாசனம் இன்றி மழையை மட்டும் நம்பி நிலைத்திருக்கக்கூடிய பயிர்கள் எனினும் பயிர் வளரும் காலத்தில் அதற்கு நீர் வழங்கப்படவேண்டும். செம்பாட்டுப்பகுதி நீர்வளம் குறைந்த பகுதி என்பதால் இப்பகுதி மக்கள் மா, பலா என்பவற்றை வளர்க்கும் போது தூர இடங்களில் இருந்தே நீர் கொண்டுவந்து சிரமப்பட்டு இவற்றை வளர்த்துள்ளனர். சிலர் மாட்டுவண்டியில் பரல்களைக் கட்டி ஏறக்குறைய $1^1/_2$ கிலோமீற்றர் தொலைவிலுள்ள கேணிக்கிணற்றில் இருந்து நீர்கொண்டுவந்து இப்பயிர்களை வளர்த்தனர்.

நகரப்பகுதியைச்சேர்ந்த வியாபாரிகள் சிலர் சாம்பல்தீவிற்கு வந்து மாம்பழம், பலாப்பழம் என்பவற்றை கொள்வனவு செய்வர். சாம்பல்தீவைச் சேர்ந்த பெண்கள் சிலரும் இவற்றை நகர சந்தைக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்வர். செம்பாட்டுப்பகுதி மக்களின் நிலப்பரப்பு ஒவ்வொருவருக்கும் 02 ஏக்கராக காணப்பட்டது. எனவே ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் அளவுடைய மா, பலா தோட்டங்கள் இப்பகுதியில் காணப்பட்டன. இங்கு, வெள்ளைக்கொழும்பான், கறுத்தக்கொழும்பான், அம்பலவி, விலாட் ஆகிய மாவினங்கள் பயிரிடப்பட்டிருந்தன. பலாவில் வரிக்கன், கூழன் என இரண்டு இனங்களை பயிரிட்டிருந்தனர். கறிப்பலாக்காய் எனவும் ஒருவகை இருந்தது. பலாக்கனி மரத்துக்கு மரம் வேறுபட்ட சுவையைக் கொண்டதாகவும் காணப்பட்டது.

செம்பாட்டுப்பகுதியைச் சேர்ந்த மக்களில் பெரும் பாலானோர் யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்து சென்றமையால் மா, பலா தோட்டங்கள் பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. விலங்குகள் பறவைகள் என்பவை மா, பலா என்பவற்றின் உற்பத்தியை அழிக்கின்றன. மாமரச் செய்கை தற்போது ஆத்திமோட்டை, இலுப்பைக்குளம் ஆகிய பகுதிகளில் முக்கியம் பெற்றுள்ளது. மா, பலா செய்கையைவிட பப்பாசி, வாழை ஆகிய பழச்செய்கைகளும் சாம்பல்தீவில் நடைபெறுகின்றது. இப்பழச் செய்கைகள் மாங்கணாய், இலுப்பைக்குளம், ஆத்திமோட்டை, சாளம்பமோட்டை, சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளில் முக்கியம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெங்குச்செய்கை

தெங்குச் செய்கைக்குரிய மண்வளமும், நிலவளமும் சாம்பல்தீவில் காணப்படுவதால் தெங்குச் செய்கையும் இங்கு முக்கயம் பெற்றுள்ளது. தெங்குப்பயிர்ச்செய்கைக்கு மணல்மண்ணே பொருத்தமானதாக காணப்படுகின்றது. சாம்பல்தீவின் கரையோரங்களில் மணல் மண்காணப்படுவதுடன் தென்னை பெற்றுக்கொள்ளக்கூடிய தரைக்கீழ் நீரும் காணப்படுவதால் கரையோரப்பகுதிகளில் தெங்குப்பயிர்ச்செய்கை முக்கியம் பெற்றுள்ளது. ஆத்தடி, சல்லி, மாங்கணாய் ஆகிய பகுதிகள் தென்னை பயிரிடும் பகுதிகளாகக் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் தென்னை நன்கு செழித்து வளர்வதுடன் நல்ல பயனையும் தருகின்றன. இங்கு சிறுதோட்டங்கள் முதல் 144 ஏக்கர் விஸ்தீரணம் வரையான தென்னந்தோட்டங்கள் காணப்பட்டன.

மாங்கணாயில் அடுக்குப்பார் பகுதியைச்சார்ந்து திருக்கோணமலையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான திரு.மாணிக்கராசா அவர்களின் குடும்பத்திற்குரியதாக 144 ஏக்கர் தென்னந்தோட்டம் உண்டு. இது "பாலச்சந்திராஸ் எஸ்டேற்" எனப்பெயரிடப்பட்டிருந்தது. "ஐயா தோட்டம்" என்றும் சொல்லப்பட்டது. இப்போது "சேர்ஜன" தோட்டம் என்று சொல்லப்படுகின்றது. இத்தோட்டம் உருவாக்கப்பட்டபோது திரு நாகமணி என்பவர் மேற்பார்வையாளராகக் கடமையாற்றினார். காடாக இருந்த நிலம் அழிக்கப்பட்டு தென்னந்தோட்டம் உருவாக்கப்பட்டது. நாக மணியவர்கள் 40 ஆண்டுகள் வரை இத்தோட்டத்திற்கு மேற்பார்வையாளராகக் கடமையாற்றினார். அவரது மறைவின் பின்பு அவரது மகனான முன்நாள் கிராமசபைத்தலைவர் வ.நா.தம்பிராசா அவர்கள் 32 ஆண்டுகள் 1985 ஆம் ஆண்டுவரை மேற்பார்வையாளராக இத்தோட்டத்தில் கடமையாற்றினார்.

சல்லிப்பகுதியில் வாழ்ந்த இரட்ணசபாபதிப்பிள்ளை குடும்பத்தினருக்கும் பெரிய அளவான நிலப்பரப்புக்கொண்ட தென்னந்தோட்டங்கள் சல்லி, அடுக்குப்பார் ஆகிய பகுதிகளில் காணப்பட்டன. தென்னையை அடிப்படையாகக் கொண்டு பலருக்கு வேலை வாய்ப்பும் வருமானமும் கிடைத்தது. கிடுகு, தென்னை மட்டை, தேங்காய் மட்டை என்பவை சாம்பல்தீவில் இருந்து பெருமளவில் நகரப்பகுதிக்கு விநியோகிக்கப்பட்டது. சிலர் மாட்டு வண்டிகளில் இவற்றை எடுத்துச்சென்று நகரப்பகுதிக்கு விற்பனை செய்வதை தொழிலாகக் கொண்டிருந்தனர். 1964ஆண்டில் திருகோணமலையை ஒரு பயங்கரமான சூறாவளி தாக்கியது. அப்போது சாம்பலதீவு கிராமத்தின் தென்னைச் செய்கையும் பெருமளவில் அழிந்தது. அதன்பின் பல தோட்டங்களில் உரிய அளவில் தென்னைமரங்கள் இல்லாத நிலை காணப்பட்டது. சூறாவளியின் பின்பு நீண்டகாலமாக தென்னை மீள்நடுகையில் மக்கள் பூரணமாக ஈடுபடவில்லை ஓரளவில் ஈடுபட்டனர். யுத்தம் முடிவடைந்ததன் பின்பு மேலும் சில இடங்களில் தெங்கு மீள்நடுகை நடைபெற்றுவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைவளம்

தானாகவே வளர்ந்து பயன்தரும் பயிராக பனை காணப்படுகின்றது. வரண்டபகுதியில் மழையை நம்பி பராமரிப்பின்றி பனை வளர்ந்து பயன் தருகின்றது. மணல் மண், செம்மண் ஆகிய மண்ணுள்ளபகுதியில் பனை வளரக்கூடியது. சாம்பல்தீவிலும் மணல் மண், செம்மண் ஆகியவை காணப்படும் இடங்களில் பனை வளம் காணப்படுகின்றது. ஆத்தடி, இறால்குளப்பகுதி, சல்லி, மாங்கணாய், அடுக்குப்பார் சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளில் அதிக பனைவளம் உண்டு. இங்குள்ள மக்கள் பனைவளத்தை ஓரளவிற்கு பயன்படுத்துகின்றனர். தற்காலிக கொட்டில்கள் அமைப்பதற்கு மனை ஓலையைப் பயன்படுத்துகின்றனர். பனைமரத்தைபிழந்து வீட்டுக்கூரைகளுக்கான மரமாக பயன்படுத்துகின்றனர். பனங்கிழங்கையும் அதிலிருந்து ஒடியலையும் உற்பத்தி செய்கின்றனர். பனைமட்டைகளை வேலிகளை அடைப்பதற்கு பயன்படுத்துகின்றனர்.

திருகோணமலை நகரசந்தைக்கு பனங்கிழங்கு அதிகஅளவில் இக்கிராமத்தில் இருந்தும் வருகின்றது. இக்கிராமத்துப் பெண்கள் பனங்கிழங்குகளை அவித்த கிழங்காகவும், பச்சைக் கிழங்காகவும் சந்தையில் விற்பனை செய்கின்றனர். பனம்பழச்சாற்றைப் பயன்படுத்தி பனங்கயாய் பலகாரம் எனப்படும் பலகார வகையை இங்கு மக்கள் தயாரித்து உண்ணுகின்றனர். பனையோலைப்பொருட்களையும் மக்கள் உற்பத்தி செய்கின்றனர். பனங்கள்ளும் ஓரளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. நகரப்பகுதியிலிருந்தும் சிலர் விடுமுறை நாட்களில் பனங்கள் குடிப்பதற்கு இங்கு வருவதுண்டு, பனங்கள் உற்பத்தி சில பாதிப்புக்களையும் கிராமத்திற்கு ஏற்படுத்துகின்றது.

இங்கு பனைவளம் இருப்பதால் பனையோலைப் பொருட்கள் உற்பத்தி பயிற்சி நிலையம் ஒன்று இயக்கியது. அது தற்போது மூடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை போன்று இங்கு பனைவளம் சிறப்பாக பயன்படுத்தப்டவில்லை. திருமலை நகரத்தில் கடைகளில் விற்பனை செய்யப்படும், பனங்கட்டி, ஒடியல் என்பவை யாழ்ப்பாணத்தில் இருந்தே எடுத்துவரப்படுகின்றன. ஏன் இவை பனைவளமுள்ள இக்கிராமத்திலிருந்து உற்பத்தி செய்து நகரசந்தைக்கு வழங்கப்படுவதில்லை என்பது சிந்திக்கப்பட வேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குவளர்ப்பு

இக்கிராமத்தின் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகளில் ஒன்றாக விலங்கு வளர்ப்பும் காணப்படுகின்றது. இங்கு விலங்கு வளர்ப்பில் மாடு, ஆடு, கோழி என்பன இடம்பெறுகின்றன. விலங்கு வளர்ப்பை மேற்கொள்வதற்கு தேவையான மேய்ச்சல்தரை, இடவசதி, இத்துறையில் ஈடுபடுவதற்கு போதிய நேரம் என்பன கிராம மக்களுக்கு கிடைக்கின்றமை, உபவருமானத்தைப் பெறவேண்டிய தேவை என்பனவே இங்கு விலங்கு வளர்ப்பிற்கு தூண்டுதலாகவுள்ளது. இங்கு விலங்கு வளர்பானது பாரிய பண்ணை அடிப்படையில் இடம்பெறவில்லையாயினும் வீட்டு வளர்ப்பாக இது முக்கியம் பெறுகின்றது. அதிகமான மக்கள் தமது வீடுகளில் இவ்வளர்ப்பினை மேற்கொள்கின்றனர். இங்கு மாட்டு வளர்ப்பு முக்கியமாகப் பாலைப் பெறும் நோக்குடனேயே இடம்பெறுகின்றது. மாட்டெரு, இறைச்சி என்பனவற்றையும் ஓரளவிற்கு இது அழிப்பதாகவுள்ளது. ஆடு, இறைச்சித் தேவை கருதியே இங்கு வளர்க்கப்படுகின்றது. ஆடு, மாடுகள் என்பன இங்கு பழைய முறைகளைப் பின்பற்றியே வளர்க்கப்படுகின்றன.

ஆடு, மாடு என்பன இங்கு உள்ளூர் இனங்களாகவே காணப்படுகின்றன. புதிய இனங்கள் வெளிநாட்டு இனங்கள் என்பன இங்கு காணப்படவில்லை. மாடுகள், பால் பெறப்பட்டதன் பின்பு காலை நேரத்தில் பட்டிகளில் இருந்து திறந்துவிடப்படுகின்றன. அவை தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக கிராமத்தின் வெற்று நிலங்களுக்கும், கிராமத்திற்கு வெளியேயும் சென்று திரும்புகின்றன. மாலையில் இவை தாமாகவே தமது பட்டிகளுக்கு வந்து சேர்கின்றன. ஆட்டு வளர்ப்பானது இவ்விதம் அல்லாமல் மனிதரின் கட்டுப்பாட்டின் கீழ் இடம்பெறுகின்றது. வீடுகளில் ஒருசில ஆடுகளை வளர்ப்பவர்கள் அவற்றைக் கட்டி வைத்து இலை, குழை என்பனவற்றையும் வேறு தீனிக்களையும் போட்டு வளர்க்கின்றனர். கூடிய தொகையான ஆடுகளை பட்டிகளாக வைத்து வளர்ப்பவர்கள் அவைகளை மேய்ச்சலுக்காக கிராமத்தின் தரிசு நிலங்களுக்கு கொண்டு செல்கின்றனர். காலையில் எடுத்துச் சென்று மாலையில் பட்டிகளுக்குத் திரும்புகின்றனர்.

இங்கு மாட்டுப்பட்டிகள், ஆட்டுப்பட்டிகள் என்பன சிறியனவாகக் காணப்படுகின்றன. இவை இத்துறையில் ஈடுபட்டள்ள மக்களுக்கு நிரந்தர வருமானத்தைக் கொடுப்பனவாக இருக்கின்றன. சில குடும்பங்கள் மாட்டு வளர்ப்பினை மேற்கொண்டு அவற்றின் மூலம் பெறப்படும் பாலை விற்பனை செய்து அன்றாட வாழ்க்கைச் செலவிற்குத் தேவையான வருமானத்தின் ஒருபகுதியினை பெற்றுக்கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு விலங்கு வளர்ப்பில் கோழி வளர்ப்பும் முக்கியம் பெறுகின்றது. இங்கு கோழி வளர்ப்பானது பண்ணையடிப்படையில் இடம்பெறாமல் வீட்டு வளர்பாகவே இடம்பெறுகின்றது. இங்குள்ள அதிகமான வீடுகளில் கோழி வளர்க்கப்படுகின்றது. பழைய முறைகளைப் பின்பற்றியே இங்கு கோழி வளர்ப்பு இடம்பெறுகின்றது. இங்கு வளர்க்கப்படும் இனமாக நாட்டுக்கோழிகளே காணப்படுகின்றன. இவை திறந்த வளர்ப்பு முறைமூலமே வளர்க்கப்படுகின்றன. இராக்காலங்களில் கூடுகளில் அடைத்து வைக்கப்பட்டு பகல் நேரங்களில் திறந்து விடப்படுகின்றன. பகல் நேரங்களில் அவை தமது உணவைத் தாமே தேடிக்கொள்கின்றன. வளர்ப்போர் தீனி போடுதல் குறைவாகவேயுள்ளது. சிலர் தமது வீட்டுக்கழிவு உணவுகளை தீனியாகப் போடுகின்றனர். இங்கு கோழிவளர்ப்பில் பெண்களே அக்கறையுள்ளவர்களாகவும் ஈடுபடுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

தமது வீட்டுப் பாவனைக்கு முட்டைத்தேவை கருதியும் உபவருமானத்தை உழைக்கும் நோக்கம் கருதியும் பெண்கள் கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். இதன்மூலம் வீட்டுப் பெண்கள் தாமாக சேமிப்பைச் செய்யக்கூடியவர்களாகவோ அல்லது அன்றாட செலவிற்குத் தேவையான பணத்தின் ஒருபகுதியைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவோ இருக்கின்றனர். அத்துடன் இத்துறையின்மூலம் தமது குடும்பங்களுக்கு போசாக்குள்ள உணவினை பெற்றுக்கொடுப்பவர்களாக பெண்கள் காணப்படுகின்றனர்.

பொதுவாக நோக்கின் இக்கிராமத்தின் விலங்கு வளர்ப்பானது இலகுவான பொருளாதார நடவடிக்கையாகவும் செலவு குறைந்த ஒன்றாகவும் காணப்படுகின்றது. இதை பகுதிநேரதொழிலாகப்பலர் செய்யக்கூடியதாகவுள்ளது. இத்துறையின் மூலம் கிராமத்தில் பலர் நிரந்தர உப வருமானத்தைப் பெறுவதுடன் போசாக்குள்ள உணவையும் பெறுகின்றனர். இக்கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் பால் நேரடியாகவே நகரப்பகுதிக்கு இங்குள்ள சிலரால் எடுத்துச்செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகைத்தொழில்

யுத்தகாலத்திற்கு முன்பு சாம்பல்தீவு கிராமத்தில் ஓரளவு சிறுகைத்தொழில்கள் காணப்பட்டன. மரவேலை, பனையோலைப் பொருள் உற்பத்தி, நெல்குற்றுதல், செங்கல் உற்பத்தி, சுண்ணாம்பு சூளைகள், கைத்தறிநெசவு, பாண் உற்பத்தி, கிடுகு பின்னுதல், கருவாடு உற்பத்தி ஆகிய சிறுகைத்தொழில்கள் காணப்பட்டன. அரச நிறுவனங்களால் இயக்கப்பட்ட ஒரு கைத்தறி நெசவு நிலையமும், பனையோலைப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பயிற்சியளிக்கும் நிலையமும் இங்கு காணப்பட்டது. தற்போது இந்நிலையங்கள் இயங்குவதில்லை மூடப்பட்டுள்ளன. மக்களின் இடப்பெயர்வு காரணமாக சிறுகைத்தொழில்கள் பாதிப்படைந்துள்ளன. முன்பு இயங்கிய சிறுகைத்தொழில்கள் பல இப்போது இயங்காது உள்ளன. இறக்குமதிக்கு கட்டுப்பாடு இருந்து சீனிக்கு தட்டுப்பாடு காணப்பட்ட காலப்பகுதியான 1970 - 1977 காலப்பகுதியில் தென்னங்கருப்பட்டி உற்பத்திசெய்யும் தொழிற்சாலை ஒன்று இங்கு இயங்கியது. தென்னைவளம் இங்கு இருப்பதால் தென்னையை அடிப்படையாகக்கொண்டு இக்கைத்தொழில் நடைபெற்றது.

தற்போது பாண்போறணை, மிளகாய், உழுந்து, அரிசி என்பவற்றை அரைக்கும் ஆலைகள், மரத்தளபாட உற்பத்தி நிலையங்கள், பைகள் (Bags) உற்பத்தி நிலையம், கிடுகு பின்னுதல், கருவாடு தயாரித்தல், பனை ஓலை பொருட்கள் உற்பத்தி ஆகிய கைத்தொழில்கள் இக்கிராமத்தில் நடைபெறும் சிறுகைத்தொழில்களாக உள்ளன. இங்கு இயங்கும் பைகள் உற்பத்தி நிலையம் துணிகளில் பைகளை தயாரித்து அவற்றில் வர்த்தக நிலையங்களின் பெயர்களை அச்சிட்டு விநியோகம் செய்கின்றது. திருமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கு இவர்கள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துகின்றனர். இவர்கள் கண்ணாடி, குவளைகள், தட்டுக்கள் (Plates) ஆகியவற்றிலும் அச்சிடும் வேலையையும் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரம்

சாம்பல்தீவு மக்கள் சிறுவியாபாரத்தையும் தமது ஜீவனோபாய நடவடிக்கையாகக் கொண்டுள்ளனர். பெரும்பாலும் இக்கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்கி நகரப்பகுதியில் விற்பனை செய்வதாகவும். நகரப்பகுதிக்கடைகளில் இருந்து பொருட்களை பெற்றுவந்து சிறுகடைகள் மூலம் விற்பனை செய்வதும், சில சேவைகள் வழங்குவதும் இங்குள்ள வியாபார நடவடிக்கையாக காணப்படுகின்றது. சிலர் பால் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். கிராமத்தில் உற்பத்திசெய்யப்படும் பாலைப்பெற்று நகரப்பகுதிக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்கின்றனர்.

கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் பழங்கள், மரக்கறி வகைகள் என்பவற்றை சிலர் கொள்வனவு செய்து நகரப்பகுதியில் விற்பனை செய்கின்றனர். சிலர் மீன் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளனர். சல்லிப்பகுதியில் மீனை கொள்வனவு செய்து சாம்பல்தீவு சந்தையில் விற்பனை செய்கின்றனர். சிலர் நடமாடும் வியாபாரிகளாக வீடுகளுக்கு விற்பனை செய்கின்றனர். குளிரூட்டப்பட்ட லொறிகள் (Coolar) மூலம் மீனை நகரத்தின் மொத்த மீன் விற்பனைச்சந்தைக்கு கொண்டுசென்று விற்பனை செய்கின்றனர். தென்னோலைகளை வாங்கி கிடுகுகளாக்கி விற்பனை செய்வதிலும் உற்பத்தி செய்த கிடுகுகளை வாங்கி விற்பனை செய்வதிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

பேரூந்து, ஆட்டோ, வான் (Van) உழவியந்திரம் என்பவற்றின் மூலம் சேவை வியாபாரத்தை செய்கின்றனர். சல்லிப்பகுதியைச் சேர்ந்த சிலர் அயற்கிராமமான அலஸ்தோட்டத்தில் இருந்து உல்லாசப்பயணிகளை புறாமலைக்கு எடுத்துச்செல்லும் படகு சேவையை (Boat Service) வழங்குகின்றனர். பலர் கிராமத்தினுள் சிறுகடைகள் வைத்து வியாபாரம் செய்கின்றனர். வாகனங்கள் திருத்துதல், சைக்கிள் திருத்துதல் போன்ற சேவைகளையும் சிலர் வழங்குகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாசப் பயணத்தொழில்

திருகோணமலையில் நகரத்திலும், நகரத்திற்கு வடக்கிலுள்ள கரையோரக்கிராமங்களிலும் உல்லாசப்பயணத்தொழில் நடைபெறுகின்றது. சாம்பல்தீவு கிராமத்தில் சிறிய அளவிலேயே உல்லாசபயணத்தொழில் நடைபெறுகின்றது. இங்கு நீண்டகடற்கரை உள்ளபோதிலும் உல்லாச பயணத்தொழில் அதிகம் முக்கியம் பெறவில்லை. முன்பு மாங்கணாய் மாரி அம்மன் ஆலயத்தை அண்மித்த பகுதியில் வெளிநாட்டவர்கள் 02 வீடுகளை அமைத்து அதில் வாழ்ந்து வந்தனர். யுத்த சூழ்நிலையால் அவர்கள் அவ்வீடுகளை விட்டுச்சென்றுள்ளனர்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்பு உல்லாச பயணத்தொழில் இக்கிராமத்தில் ஓரளவில் நடைபெறுகின்றது. தற்போது சல்லிப்பகுதியில் 02 சிறிய கோட்டல்களும், சாம்பல்தீவுப்பகுதியில் 02 கோட்டல்களும் இயங்குகின்றன. மேலும் சில கோட்டல்களை அடுக்குப்பார் பகுதியில் அமைப்பதற்கு தனியாரும், கம்பனிகளும் முயற்சி செய்து வருகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்தொழில்

கடற்தொழிலானது சல்லி, அடுக்குப்பார் ஆகிய இடங்களில் நடைபெறுகின்றது. சல்லிப்பகுதியிலேயே கூடிய அளவில் கடற்தொழில் நடைபெறுகின்றது. 412 குடும்பங்கள் இங்கு மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதி மக்கள் இழுவைப்படகுகள் 02, வெளியிணைப்பு மோட்டார் படங்குகள் (பிளாஸ்ரிக் படகுகள்) 250, வள்ளங்கள் 10, கரைவலை 01 என்பவற்றை மீன்பிடிக்கு பயன்படுத்துகின்றனர். இவற்றைவிட 50 பேர் வரை வீச்சு வலை மூலம் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இங்கு கரையோர மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடி என்பவை இடம் பெறுகின்றன. கடல்நீர் ஏரியில் இறால், நண்டு என்பவை பிடிக்கப்படுகின்றன.

இங்கு உற்பத்தி செய்யப்படும் மீன்கள் உள்ளூரில் வைத்து சிறுவியாபாரிகளுக்கும் திருகோணமலையிலுள்ள மொத்த மீன் விற்பனைச் சந்தைக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. 40வீத மீனை சிறு வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றனர். இம்மீனை சாம்பல்தீவு கிராமத்திலும் ஏனைய பகுதிகளுக்கும் விற்பனை செய்கின்றனர். 60வீத மீன்கள் திருகோணமலையின் மொத்த மீன்விற்பனைச் சந்தைக்கு கொண்டுசெல்லப்படுகின்றது. இதில் ஒரு பகுதி நேரடியாக கடலில் இருந்து வள்ளங்கள் மூலமாக அங்கு கொண்டு செல்லப்படுகின்றது. மிகுதி உள்ளூரில் உள்ள வியாபாரிகளால் குளிரூட்டப்பட்ட லொறிகள் (Coolar) மூலம் அங்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இவ்வாறு பயன்படுத்தப்படும் 04 லொறிகள் (Coolar) உள்ளூரில் உள்ளன. இங்கு பிடிக்கப்படும் மீன்களில் சிறுபகுதி கருவாடு உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

அடுக்குப்பார் பகுதியில் கோணேசபுரியைச் சேர்ந்த 15 குடும்பங்கள் வரையில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். கோணேசபுரியில் குடியேறியுள்ள மக்களில் பெரும்பாலானோர் கடற்தொழிலாளர்கள் எனினும் இவர்கள் தாம் முன்பு வாழ்ந்த கிராமங்களுக்கு சென்று மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இவர்களில் அடுக்குப்பார் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுவோர் வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகளை (பிளாஸ்ரிக் படகுகளைப்) பயன்படுத்துகின்றனர். இவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் சிறுவியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்கணாய் மாரியம்மன் ஆலயம்

இவ்வாலயம் சாம்பல்தீவில் மாங்கணாய் பகுதியில் அமைந்துள்ளது. 150 வருடங்களுக்கு முன்பு இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளது. மாங்கணாய்ப் பகுதியில் வாழ்ந்த தாண்டவியார் என்பவரால் அமைக்கப்பட்டது. தாண்டவியாரின் கனவில் அம்பாள் தோன்றி தன்னை ஆதரிக்கும்படி கூறியதனால் தாண்டவியார் சிறிய ஒரு கொட்டில் ஆலயத்தை மாங்கணாயில் அமைத்து பூஜை செய்து வழிபட்டு வந்தார். இவரின் பின்பு இவரது மகன் காத்தார் இவ்வாலயத்திற்கு பூஜை செய்து பராமரித்து வந்தார். காத்தார் திருமணம் முடித்து மனைவிக்கு முதல் பிரசவம் கிடைக்கவிருக்கும் காலத்தில் காத்தருக்கு கனவில் அம்பாள் தோன்றி நீ உனது வீட்டை கட்டுவதற்கு கல்லும் மண்ணும் சேர்த்து வைத்திருக்கின்றாய். நீ வழிபடும் ஆலயத்தைக் கட்டிவிடு உனது மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை சுகமாகவே பிறக்கும் என்று கூறினாராம் அவ்வாறே காத்தாரின் மனைவி ஆண்பிள்ளை ஒன்றை சுகமாகவே பெற்றெடுத்தார். அக்குழந்தைக்குப் பொன்னம்பலம் எனப்பெயரிட்டனர். தான் வீடுகட்ட வைத்தருந்த கல், மண் என்பவற்றைக் கொண்டு சிறிய கற்கோயிலாக அம்பாள் ஆலயத்தை மான்றியமைத்தார் காத்தார்.

பொன்னம்பலம் அவர்கள் பெரியவராகி ஊர்மக்களின் உதவியைப் பெற்று அம்பாள் ஆலயத்தை பெருப்பித்து 1942ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். தனது தந்தையாரான காத்தாருக்கு பின்பு பொன்னம்பலமே இவ்வாலயத்திற்கு பூசை செய்து ஆலயத்தைப் பராமரித்து வந்தார். இவர் "பூசாரி பொன்னம்பலம்" என அழைக்கப்பட்டார். இருபது வருடங்களின் பின் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களின் ஆசியும் அனுசரணையும் கிடைக்கப்பெற்று மீண்டும் ஆலய திருப்பணிகள் செய்யப்பட்டு 1962ஆம் ஆண்டில் இரண்டாவது கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. பொன்னம்பலம் பூசாரியின் பின்பு அவரது புதல்வர்கள் பூசைசெய்து பராமரித்துவந்தனர். பொது மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கொண்டு இவ்வாலயம் பெருப்பிக்கப்பட்டு நடைபெற்று வந்ததால் பொதுமக்களைக் கொண்ட நிருவாக சபை அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து தோன்றியது அதன்படி 1989ஆம் ஆண்டில் ஆலய நிருவாகசபை அமைக்கப்பட்டு 1993 ஆம் ஆண்டில் இந்து கலாச்சார அமைச்சில் இவ்வாலயம் பதிவு செய்யப்பட்டது. நிருவாகசபை அமைக்கப்படுவதற்கு முன்பு திரு சுப்பிரமணியம் விதானையார் மணியகாரராக நியமிக்கப்பட்டு செயற்பட்டார். பின்பு அவரது மகன் திரு.அழகரத்தினம் மணியகாராக செயற்பட்டார்.

தற்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிருவாகசபையே ஆலயத்தை பரிபாலிக்கின்றது. நிருவாகசபையால் நியமிக்கப்பட்டு வேதனம் வழங்கப்படும் பூசகர்களே தற்போது ஆலயத்திற்கு பூசை செய்து வருகின்றனர். நிருவாகசபை அமைக்கப்பட்டதில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் செயற்பட்டனர் திரு.வே.நாகேந்திரம், திரு.க.வேலாயுதம், திரு.பொ.நடராசா, திரு.செ.நவரெட்ணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் தலைவர்களாக செயற்பட்டனர். 03.12.2008 அன்று இவ்வாலயத்திற்கு மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெற்றது. தற்போது இயங்கும் நிருவாக சபை 2010ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டது திரு.ஸ்ரீஸ்கந்தராசா தலைவராகவும், திரு.ச.தியாகேந்திரன் செயலாளராகவும் திரு.அ.திருநாவுக்கரசு பொருளாளராகவும் தற்போதைய நிருவாகசபையில் செயற்பட்டு வருகின்றனர்.

நித்திய பூசை, வருடாந்த மஹோற்சவம் என்பவை நடைபெறுவதுடன் மாதந்தோறும் அம்பாளுக்குரிய தினங்கள், பௌர்ணமி தினங்கள், சங்காபிஷேகதினம், நவராத்திரி தினங்கள், திருவம்பாவை, பூப்புனித நீராட்டுதினம் ஆகிய இவ்வாறான தினங்களிலும் பூசைகள் நடைபெறுகின்றன. இப்பூசைகளை ஒவ்வொரு உபயகாரர்கள் பொறுப்பெடுத்து செய்துவருகின்றனர். இவ்வாலயம் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், வசந்த மண்டபம், மகா மண்டபம், எழுந்தருளி மண்டபம், மணிக்கோபுரம் என்பவற்றையும் முருகன், பிள்ளையார், நாகதம்பிரான், வைரவர் ஆகிய பரிவாரமூர்த்திகளையும் கொண்டு அமைந்துள்ளது. அன்னதான மடம் அமைப்பதற்குரிய அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் வருடாந்த மகாஹோற்சவம் சித்திரை மாதம் வளர்பிறை ஆறாம் நாள் தொடக்கம் சித்திரை பௌர்ணமி வரையில் நடைபெறுகின்றது. ஒவ்வொரு திருவிழாவிற்கும் ஊர்மக்கள் ஒவ்வொருவர் உபயக்காரராக பொறுப்பெடுத்து திருவிழாவை நடாத்துகின்றனர். 11ஆம் நாள் திருவிழா இளைஞர் திருவிழா எனப்படுகின்றது. இது ஊர் இளைஞர்களின் ஒத்துழைப்புடன் கோலாகலமாக நடைபெறுகின்றது. இசைநிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், மேளக்கச்சேரி ஆகியவை மேடையேற்றப்பட்டு இத்திருவிழா சிறப்பாக நடைபெறும். 11ஆவது நாள் மாலையில் இத்திருவிழா நடைபெறுகின்றது. 10ஆவது நாள் காலையில் தீர்த்தோற்சவம் இடம்பெறுகின்றது. அம்பாள் பக்தர்கள் புடைசூழ அண்மையிலுள்ள கடற்கரைக்குச் சென்று சமுத்திர தீர்த்தம் ஆடுவார். தீர்த்த தினத்தன்று இரவு அன்ன ஊஞ்சல் நடைபெறுகின்றது. 09ஆம் நாள் திருவிழா கும்பத்திருவிழா எனப்படுகிறது. திருமலை நகரத்திலுள்ள மடத்தடி மாரி அம்மன் கோவிலில் இருந்து கும்பம், காவடி, கரகம், பாற்செம்பு, துலாக்காவடி என்பவற்றை மக்கள் நேர்த்திக்கடனாகக்கொண்டு நடைபவனியாக வந்து அம்பாள் சந்நிதானத்தை அடைவர்.

முன்பு கும்பத்திருவிழா வேறுவிதமாக இருந்தது. அம்பாள் ஆலயத்தில் இருந்து பக்தர்கள் கும்பம், காவடி, கரகம் என்பவற்றுடன் 09ஆம் நாள் திருவிழா அன்று இரவு ஊர்சுற்றிவருவர் ஊரின் முக்கியமான வீதிகளில் எல்லாம் இக் கும்ப ஊர்வலம் இடம்பெறும். அதிகாலை வரையில் இவ்வூர்வலம் இடம்பெற்று அதன்பின்பே பக்தர்கள் ஆலயத்திற்கு திரும்பி தமது கும்பம், கரகம், காவடி என்பவற்றை இறக்குவர். கும்ப ஊர்வலம் வரும்போது மக்கள் தமது வீட்டு வாசல்களில் நிறைகுடம் வைத்து கும்பத்தை வரவேற்பதுடன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பக்தியையும் வெளிப்படுதுவர். கும்பஊர்வலம் வரும்போது பறைமேளம், உடுக்கை என்பவையும் ஒலித்து வரும், உடுக்கை ஒலிப்போர் அம்பாள் மீதான பாடல்களையும் பாடிவருவர். பறை, உடுக்கை என்பவற்றின் ஒலிக்கும் பாடலுக்கும் கும்பம், கரகம், காவடி என்பவற்றை தாங்கியிருக்கும் பக்தர்கள் முக்கியமான இடங்களில் ஆடுவர். சிலர் உருக்கொண்டு ஆடுவர்.

கும்ப ஊர்வலம் நிறுத்தப்பட்டு அம்பாள் ஊர்வலம் வரும் முறை இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. பங்குனி உத்தரத்தில் அம்பாள் ஊர்வலம் வருகின்றார். ஊர்வலம் செல்லும் அம்பாள் ஆத்திமோட்டையிலுள்ள புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் அன்றிரவு தங்கியிருப்பார். மறுநாள் புறப்பட்டு தனது ஆலயத்தை வந்தடைந்த பின்பு ஆலயத்தில் பக்தர்களுக்கு குளிர்த்தி வழங்கும் நிகழ்வு இடம் பெறும்.

மஹோற்சவகாலத்தில் 11தினங்களுக்கு திருவிழா இவ்வாலயத்தில் நடைபெறுகின்றது. இராக்காலத்தில் அம்பாள் சிங்கவாகனம், குதிரைவாகனம் என்பவற்றில் வெளிவீதி உலாவருவார். முன்பு இவ்வாறான உலாவரும் போது மாமியார் மூலையைச் சார்ந்து சுவாமி நிறுத்தப்பட்டிக்கும் போது சுவாமிக்கு முன்பாக கம்படி, சிலம்படி, தீப்பந்தம் சுழற்றுதல் போன்ற விளையாட்டுக்களை இளைஞர்கள் செய்யும் வழக்கம் இருந்தது. தற்போது இவ்வாறான நேரத்தில் சிறுவர்கள் நடனமாடும் நிகழ்வு இடம்பெறுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்லி முத்துமாரி அம்மன் ஆலயம்

சல்லிப்பகுதியில் கடலுக்கும் கடல்நீர் ஏரியின் முகத்துவாரத்திற்கும் அருகாமையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ் ஆலய முன்றலில் இருந்து பார்க்கும் போது திருக்கோணமலை கோணேசர் ஆலயத்தைக் காணக்கூடியதாக உள்ளது. அதே போல் கோணேசர் ஆலயத்தில் இருந்து பார்க்கும்போத சல்லியம்மாள் ஆலயத்தைக் காணக்கூடியதாகவுள்ளது. இற்றைக்கு ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன்பு சல்லியில் வாழ்ந்த திரு.சின்னத்தம்பி என்பவருக்கு அம்பாள் காட்சிகொடுத்து இந்த ஊரின் நன்மைக்காக இவ்விடத்தில் தன்னை ஆதரிக்கும்படி அருள்வாக்குக் கொடுத்தாராம். இவ்வூரில் வாழ்கின்ற சைவமக்களின் சுபீட்சத்திற்காகவும் கடற்தொழில் செய்பவர்களின் வழிபாட்டிற்காகவும் திரு சின்னத்தம்பி அவர்கள் சிறு கொட்டிலமைத்து அம்பாளை வைத்து வழிபாடு செய்துவந்தார். இவருக்குப் பின் திரு.கார்த்திகேசு என்பவர் அம்பாளை ஆதரித்துவந்தார். அப்போது வேலுப்பிள்ளை என்பவர் ஆலயத்திற்கு பூசகராக இருந்து பூசைகளை நடாத்திவந்தார். காரத்திகேசு அவர்களுக்கு பின்பு அவரது மகன் திரு.இரட்ணசபாபதிப்பிள்ளை அவர்கள் இவ்வாலயத்தை ஆதரித்து வந்தார்.

1927ஆம் ஆண்டில் இக்கோயிலை கல்லினால் கட்டுவதற்குரிய திருப்பணியை ஆரம்பித்தனர். திரு.இரட்ணசபாபதிப்பிள்ளையவர்கள் திருப்பணியினை நிறைவு செய்து 1933இல் கும்பாபிஷேகம் செய்வித்தார். இரட்ணசபாபதிப்பிள்ளையவர்கள் மணியகாரராக இருந்து ஆலயத்தை நடாத்திவரும் காலத்தில் ஆலயபரிபாலனத்தைச் செய்வதற்காக பன்னிரண்டு பேர் கொண்ட பரிபாலனசபையொன்றை மணியகாரனுக்கு உதவியாக அமைத்தார்கள். இவ்வாலயத்தின் இரண்டாவது கும்பாபிஷேகம் 1979இல் நடாத்தப்பட்டது. அதன்பின்பு பரம்பரை பூசர்கள் பூசை செய்யும் முறை கைவிடப்பட்டு சங்கமக்குருக்கள்மாரைக் கொண்டு பூசை நடாத்தப்படுகின்றது. 2010 ஆண்டில் கடைசியான கும்பாபிஷேகம் நடைபெற்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிருவாகசபையே ஆலய நிருவாகத்தை கவனித்துவருகின்றது. தற்போதைய நிருவாகசபையின் தலைவராக கு.வரதராஜா அவர்களும், செயலாளராக இ.சிதம்பரநாதன் அவர்களும் பொருளாளராக சு.வரதராசா அவர்களும் கடமையாற்றி வருகின்றனர்.

இவ் ஆலயம் கரப்பகிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், சபை மண்டபம், ஸ்னபன மண்டபம், வசந்த மண்டபம், அலங்கார மண்டபம் ஆகிய மண்டபங்களைக் கொண்டுள்ளது. மணிக்கோபுரம், களுமரம் என்பவையும் உண்டு. பிள்ளையார், முருகன், லக்ஷ்மி, சரஸ்வதி, நாகாம்பாள், காத்தவராயர், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய பரிவார மூரத்திகளும் இவ் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ளனர். அன்னதான மண்டபமும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. திருவிழாக்காலங்களிலும், தைப்பூசத்திலும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது. ஆலயத்திற்கான கல்யாண மண்டபம் அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் நித்தியபூசை, தைப்பூசம், சங்காபிஷேகதினம், ஆடிப்பூரம், நவராத்திரி, திருவம்பாவை ஆகிய பூசைகள் நடைபெறுகின்றன. வருடாந்த மஹோற்சவம் வைகாசி மாதத்தில் நடைபெறுகின்றது. கும்பம் வைத்து திருவிழா ஆரம்பிக்கப்படுகின்றது. 11 நாட்களுக்கு திருவிழா நடைபெறுகின்றது. ஐந்தாம் நாள் திருவிழா கற்பூரத்திருவிழா எனப்படுகின்றது. அன்று பெண்கள் கற்பூரச்சட்டி ஏந்தி நேரத்திகடன் செய்வர். ஏழாம் நாள் திருவிழா பாண்டிவேட்டை திருவிழாவாக நடைபெறுகின்றது. 09ஆம் நாள் ஆலயத்தில் பொங்கல் நடைபெறுவதால் அது பொங்கல்திருவிழா என்று சொல்லப்படுகின்றது. அன்று காலை திருகோணமலை மடத்தடியிலுள்ள மாரியம்மன் ஆலயத்தில் இருந்து வளந்துப்பானை எடுத்துவந்து ஆலயத்தில் பொங்கல் இடம்பெறும். அன்றைய தினம் கும்பம், கரகம், காவடி, துலாக்காவடி, பாற்செம்பு ஆகிய நேர்த்திக்கடன்களை பெரும்பாலான மக்கள் சல்லியம்பாளுக்கு நிறைவேற்றுவர்.

திருகோணமலை மடத்தடிமாரி அம்மன் கோவில், படுக்கை, உப்புவெளி, செல்வநாயகபுரம் ஆகிய பல இடங்களிலுள்ள ஆலயங்களிலுமிருந்து பக்தர்கள் தமது நேரத்திகடனுடன் கால் நடையாக சல்லி அம்பாள் ஆலயத்திற்கு வருவர். மாலையிலிருந்து நள்ளிரவு வரை நேர்த்திகடன் செய்வோரும் அவர்களுடன் ஏனைய பக்தர்களும் கூட்டம் கூட்டமாகச் செல்வர். நகரத்திலிருந்து சல்லிக்கோவில் வரையான வீதி முழுவதும் பக்திக் கோலமாகக் காணப்படும். அன்றைய தினம் இரவு திருகோணமலை மாவட்டத்தின் பல கிராமங்களிலிருந்தும் திருமலை நகரத்திலிருந்தும் மக்கள் சாரை சாரையாக சல்லி அம்பாள் ஆலயத்திற்கு வந்து சேர்வர். மக்களையும், வாகனங்களையும் கட்டுப்படுத்துவது, ஒழுங்குபடுத்துவது பெரும் சிரமமான பணியாக அன்று காணப்படும். இப்பணியில் பொலிஸாரும் சல்லிப்பகுதி தொண்டர்களும் ஈடுபட்டிருப்பர்.


கோவிலில் இருந்து ஏறக்குறைய 3/4 கிலோமீற்றர் தொலைவு வரையில் கடற்கரை ஓரம் முழுவதும் பக்தர்கள் நிறைந்து காணப்படுவர். நாட்டின் நாலா பாகங்களிலும் இருந்து வரும் வியாபாரிகள் கோவில் வாசலில் இருந்து வீதியின் இருபுறமும் ஏறக்குறைய 300 மீற்றர் தூரத்திற்கு கடைகள் அமைத்து பொருட்களை பரப்பியிருப்பர். கடற்கரை வீதியில் பல புட்டுக்கடைகள் இயங்கும். இவர்கள் சுடச்சுட புட்டும் பலாப்பழமும் விற்பனை செய்வர். முன்பு சாம்பல்தீவின் மிகச்சுவையான பலாப்பழங்களே இங்கு புட்டுடன் விற்பனை செய்யப்பட்டது. தற்போது சாம்பல்தீவில் பலாப்பழம் குறைவடைந்துள்ளமையால் வேறிடத்து பலாப்பழங்களும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. புட்டும் பலாப்பழமும், மணல் கொண்ட கடற்கரை, பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள், கடல்நீர் ஏரி, கடல் ஆகிய இயற்கைக்காட்சி, அம்பாள் மீதான நம்பிக்கை என்பவை இத்தினத்தில் பெருந்தொகை மக்களை ஆலயத்தின்பால் ஈர்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் தினத்தன்று அதிகாலையில் களுமரத்தில் சேவலை குத்தும் ஒருசடங்கு நடைபெறும். இதனை இவ்வாலயத்தின் பரம்பரைப் பூசாரிகளே செய்கின்றனர். களுவில் குத்தியபின் இச்சேவலை பறக்கவிடுவர். அது பறந்து சென்று அயலில் நின்று கூவும். இதை ஒரு அற்புத சம்பவமாக மக்கள் பார்க்கின்றனர். 10ஆவது நாள் அம்பாள் பக்தர்கள் புடைசூழ காலையில் ஆலயத்தின் முன்புள்ள கடலில் தீர்த்தமாடுவார் அன்றிரவு ஆலயத்தில் அன்ன ஊஞ்சல் இடம்பெறும் 11ஆம் நாள் இரவு பூங்காவனத்திருவிழா இடம்பெறும். திருவிழா நாட்களில் அம்பாள் ஆலயத்தைச்சுற்றி குதிரைவாகனம், சிங்க வாகனம், அன்னவாகனம், புலி வாகனம், சர்ப்ப வாகனம் என்பவற்றில் வலம் வருகின்றார். ஆலயத்தின் அருகாமையில் ஆலயத்தின் முன்பக்கமாக வலப்புறத்தில் கடல்நீர் ஏரியின் முகத்துவாரத்தை சார்ந்து ஒரு கல்மலை அமைந்துள்ளது. இது கருங்கல் மலை அல்ல. அதனால் இம்மலை வெள்ளைமலை எனப்படுகின்றது. இம்மலையின் உச்சியில் காளியும், அடிவாரத்தில் முனியப்பரும் நிறுவப்பட்டுள்ளனர். திருவிழாக்காலங்களில் இத்தெய்வங்களுக்கும் பூசை நடைபெறுகின்றது.

பொங்கல் திருவிழா முடிந்து 08ஆவது நாள் 08ஆம் மடை என்னும் ஒரு விழா செய்யப்படுகின்றது. அன்றையதினமும் நகரத்திலிருந்தும், அயற்பகுதியிலுமிருந்தும் கணிசமான அளவில் கும்பம், கரகம், காவடி, துலாக்காவடி, பால்செம்பு ஆகிய நேர்த்திக்கடன்கள் நடைபவனியாக ஆலயத்தை வந்தடைகின்றன. அன்றைய இரவு ஆலயத்தில் தீ மிதித்தல் மாவிளக்கு எடுத்தல் என்னும் சடங்குகள் நடைபெறுகின்றன. ஆண்கள் வெள்ளை மலையில் இருந்து மாவிளக்கு எடுத்துவருவர். நகரத்திலிருந்தும், அயற்பகுதியிலிருந்தும் ஏராளவான பக்தர்கள் 08ஆம் மடையிலும் கலந்து கொள்வர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்


சல்லியின் கடற்கரையில் சல்லி அம்பாள் ஆலயத்திலிருந்து 1/2 கிலோமீற்றர் தொலைவில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. திரு.இ.உகந்தராசா என்பவர் இவ்வாலயத்தை அமைத்து பராமரித்து அதன் தர்மகர்த்தாவாக இருந்து வருகின்றார். 1980ஆம் ஆண்டில் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. உகந்தராசா அவர்களின் மனைவி கண்நோயால் பாதிக்கப்பட்டு நோயின் வேதனைகாரணமாக ஒரு நாள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். அன்றிரவு பத்திரகாளி அம்பாள் உகந்தராசாவின் கனவில் தோன்றி தன்னை வழிபடுமாறு கூறினார். அதன்பின் உகந்தராசா அவர்கள் தனது காணியின் ஒரு பகுதியில் சூலம் ஒன்றை வைத்து பத்திரகாளியை வழிபட்டு பூசை செய்து வந்தார் மனைவியின் கண்நோயும் குறைவடைந்துவரத் தொடங்கியது.

2004ஆம் ஆண்டில் உகந்தராசாவும் மனைவியும் இந்தியா சென்றபோது மனைவியின் கண்நோயை முற்றாக குணப்படுத்தலாம் என்று அங்குள்ள சிலர் கூறினர். இந்தியாவில் உள்ள மருத்துவமனைக்கு மனைவி அழைத்துச் செல்லப்பட்டு ஒரு கண்ணுக்குப் பதிலாக வேறொருகண் மாற்றப்பட்டு அவரது கண் சுகமாகியது. 2004ஆம் ஆண்டில் சுனாமியின் காரணமாக உகந்தராசாவின் வீடு முழுவதும் நீர் நிறைந்தது. உகந்தராசாவின் மனைவி மட்டும் அப்போது வீட்டில் இருந்தார். வெள்ளம் அவரை இழுத்துச்சென்று வேறு இடத்தில் சேர்த்தது. திருமதி.உகந்தராசா இவ் ஆபத்திலிருந்தும் காப்பாற்றப்பட்டார். இதற்கும் தமக்கு பத்திரகாளியே உதவியதாக உகந்தராசா நம்புகின்றார். சிறிதுகாலத்தின் பின்பு மீண்டும் திருமதி.உகந்தராசாவின் கண்பார்வை குறைந்தது அவர் மீண்டும் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு கண் சுகமாகியது.

உகந்தராசாவின் பிள்ளைகள் மூவர் இங்கிலாந்தில் வாழ்கின்றனர். பத்திரகாளி அம்மனுக்கு கோவில் அமைக்கவேண்டும் என்றும் அதற்கான நிதியுதவி தருமாறும் உகந்தராசா தனது பிள்ளைகளிடம் கோரியதன் பேரில் அவர்கள் நிதி வழங்கினர். 2005ஆம் ஆண்டில் இக்கோயில் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு ஆகம முறைப்படி கோவில் கட்டப்பட்டு 2009ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதிலிருந்து கோவிலின் பூசைகளைச் செய்வதற்கு ஒரு குருக்கள் நியமிக்கப்பட்டு அவர்மூலமே பூசைகள் நடைபெறுகின்றது. குருக்களுக்கு வேதனம் வழங்குவதற்கு ஆலயவருமானம் போதுமானதாக இல்லை. அதனால் உகந்தராசா தனது சொந்த வருமானத்தின் மூலமே குருக்களுக்கு வேதனம் வழங்கி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் கர்ப்பகிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் ஆகிய மண்டபங்களை கொண்டுள்ளது. மகாமண்டபம் மேலும் விருத்தி செய்து கட்டப்படவேண்டியுள்ளது. நித்தியபூசை, நவராத்திரிபூசை, கேதாரகௌரி காப்பு பூசை, கார்த்திகை விளக்கீட்டு பூசை, திருவம்பாவைப்பூசை, தைப்பொங்கல், சித்திரா பௌர்ணமி, வருடப்பிறப்பு, தீபாவளி ஆகிய தினங்களுக்குரிய பூசைகள் இவ் ஆலயத்தில் நடைபெறுகின்றது. வருடாந்த மஹோற்சவம் ஆடிமாதத்தில் நடைபெறுகின்றது. இத்திருவிழா 11 நாட்கள் நடைபெறுகின்றது. 10வது நாள் ஆடி பௌர்ணமி தினத்தன்று காலையில் தீர்த்தம் நடைபெறுகின்றது. ஆலயத்தின் முன்பாகவுள்ள சமுத்திரத்தில் அம்பாளும் பக்தர்களும் தீர்த்தமாடுகின்றனர். அன்று இரவு அன்ன ஊஞ்சல் நடைபெறுகின்றது. 11ஆவது நாள் தெற்பத்திருவிழா நடைபெறுகின்றது. திருவிழாக்கள் முடிந்து 08ஆம் நாளில் எட்டாம்மடை நடைபெறுகின்றது. அன்று ஆலயத்தில் தீமிதிப்பும் இடம் பெறுகின்றது. பூசைகள், திருவிழாக்கள் ஒவ்வொன்றும் பக்தர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றினாலும் பொறுப்பெடுக்கப்பட்டு அவர்களின் செலவில் நடைபெறுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலிப்பிள்ளையார் ஆலயம்

சாம்பல்தீவு பிரதான வீதியிலிருந்து சல்லிக்குச் செல்லும் முதலாவது வீதியில் 200 மீற்றர் தொலைவில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. "வடலி" என்பது பனைமரக்கன்றுகள், பனை மரங்கள் உள்ள இப்பகுதியை இப்பகுதி மக்கள் துப்பரவு செய்தபோது வடலிகளுக்கிடையில் ஒரு பிள்ளையார் சிலை கண்டெடுக்கப்பட்டது. மக்கள் அவ்விடத்தில் ஒரு சிறிய கொட்டில் ஆலயம் அமைத்து இப் பிள்ளையார் விக்கிரகத்தை வைத்து வழிபட்டுவந்தனர். வடலிகளுக்கு இடையில் இருந்து கிடைத்த பிள்ளையார் என்பதால் இவ்வாலயம் வடலிப்பிள்ளையார் எனப்படுகின்றது. வடலிகளை துப்பரவு செய்யப்பயன்படுத்திய ஆயுதங்களில் அடிபட்டதால் பிள்ளையார் விக்கிரகத்தின் கையொன்று பாதிப்பிற்குள்ளாகி இருந்தது.

செம்பிமலைச்சுவாமி என்று சொல்லப்பட்ட சோமேஸ்வரானந்தகிரி என்னும் ஒரு துறவி சாம்பல்தீவு கிராமத்தில் தங்கியிருந்தார். இச்சுவாமியின் பெரு முயற்சியாலும், மக்களுடைய ஒத்துழைப்புடனும் இவ் ஆலயம் ஆகமுறைப்படியான கற்கோவிலாக கட்டப்பட்டு 1936ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இக்கும்பாவிஷேகத்தின் போது சாம்பல்தீவு வாலையம்மன் கோவிலில் இருந்த பிள்ளையார் விக்கிரகம் எடுத்துவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இங்கிருந்த கை பாதிப்படைந்த பிள்ளையார் விக்கிரகம் தீர்த்தக்கடற்கரை கோவிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு ஸ்தாபிக்கப்பட்டது. இரண்டாவது உலக மகா யுத்தத்தை அடுத்து இவ்வாலயம் பராமரிப்பற்று வழிபாடுகள் இடம்பெறாதிருந்து வந்தது. இவ்வாலயத்தை புனரமைக்கவேண்டும் என்று இங்குள்ளமக்கள் முயன்று வந்தார்கள். ஆலயத்தை புனரமைப்பதற்கு ஒரு புனருத்தாபனசபை அமைக்கப்பட்டது. இச்சபையின் தலைவராக த.சண்முகநாதன் அவர்களும் செயலாளராக திரு.வ.தங்கராசா அவர்களும் கடமையாற்றினார்கள். சைவ அன்பர்களின் ஒத்துழைப்புடன் புனருத்தாபனசபை புனரமைப்பு பணியில் ஈடுபட்டது. திருப்பணி நிறைவேறி 07.06.1979 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. புனருத்தாபன பணிக்கு செயலாளர் திரு.தங்கராசா அவர்களின் முயற்சி பெரும்பங்காக காணப்பட்டது.

இவ்வாலயத்திற்கு மீண்டும் மூன்றாவது தடவையாக 11.02.2008 அன்று கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அப்போது திரு.ஐ.சித்திரவேலாயுதம் அவர்கள் நிருவாகசபைத் தலைவராக கடமையாற்றினார். புனருத்தாபனத்திற்கும் கும்பாபிஷேகத்திற்கும் இவரது பங்களிப்பு முக்கியமானதாக காணப்பட்டது. இவ் ஆலயத்தில் நித்திய பூசை, விநாயகர் சதுர்த்தி, திருவம்பாவை ஆகிய பூசைகள் நடைபெறுகின்றன. இவ் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ஆடி மாதத்தில் நடைபெறுகின்றது. 09 நாட்களுக்கு உற்சவம் நடைபெறுகின்றது. 10வது நாள் ஆடி அமாவாசை அன்று தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. மறுநாள் பூங்காவனத்திருவிழா நடைபெறுகின்றது. இவ்வாலயத்தின் பரிபாலனசபைத் தலைவராக தற்போது திரு.சு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கடமையாற்றுகின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேசபுரி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

புதிதாக குடியேறிய கோணேசபுரி மக்கள் ஒரு முத்துமாரி அம்மன் ஆலயத்தை அமைத்து வழிபட்டு வருகின்றனர். 2010 ஆண்டில் பாலகிருஷ்ணன் என்பவர் ஒரு வேம்புமரத்தின்கீழ் ஒரு கல் வைத்து இவ் ஆலயத்தை ஆரம்பித்தார். தற்போது கர்ப்பக்கிரகத்தையும், ஒரு திறந்த மண்டபத்தையும் கொண்டதாக இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளது. கோணேசபுரியில் சுனாமிக்குடியிருப்புக்களின் முடிவுப்பகுதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. வ.சகிலேந்திரன் என்பவர் தற்போது இவ்வாலயத்திற்கு பூசை செய்து வருகின்றார். கருவறையிலும், வெளிப்புறத்திலுமாக 10 தெய்வங்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஞாயிறு, வெள்ளி, செவ்வாய் ஆகிய தினங்களில் இவ் ஆலயத்தில் பூசை நடைபெறுகின்றது. அவற்றைவிட தீபாவளி, சித்திரை வருடப்பிறப்பு, தைப்பொங்கல் ஆகிய தினங்களிலும் பூசை நடைபெறுகின்றது. நவராத்திரிவிழாவும் இங்கு நடைபெறுகின்றது. வைகாசி மாதத்தில் பத்து நாட்கள் இவ்வாலயத்தில் திருவிழா நடைபெறுகின்றது. 10 ஆவது நாள் அடுக்குப்பார் கடலில் தீர்த்தம் நடைபெறுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திமோட்டை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்

நிலாவெளி வீதி 06ஆம் கட்டையில் வீதியின் வலப்புறமாக ஆத்திமோட்டைப்பகுதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. 2002ஆம் ஆண்டு 08ஆம் மாதம் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. திரு.ஐ.பரஞ்சோதி, திரு.ஐ.குகநேசன், திரு.இ.பிரதீபன் ஆகியோராலேயே இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது. கருவறை, மண்டபம் என்பவற்றைக்கொண்டு கல்லால் கட்டப்பட்ட ஆலயமாக இது காணப்படுகின்றது. இவ்வாலயத்திற்கான நிலம் அப்போதைய அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டது. இவ்வாலயத்திற்குரிய மின்னிணைப்பு பொதுமக்களின் உதவியுடன் செய்யப்பட்டது. நீரிணைப்பு திரு.ஐ.பரஞ்சோதி அவர்களின் உதவியில் பெறப்பட்டது.

திரு.சோதிநாதன் அவர்கள் இவ்வாலயத்திற்கு பூசகராக கடமையாற்றுகின்றார். இவருக்கான வேதனத்தை ஐ.பரஞ்சோதி அவர்கள் வழங்கி வந்தார். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் விசேட பூசையும் அன்னதானமும் நடைபெறுகின்றது. இதனை நாடாத்தும் பக்தர்களே தற்போது மாதாந்த வேதனத்தை பூசகருக்கு வழங்கிவருகின்றனர். நவராத்திரி கால கும்பத்திருவிழாவும் இவ் ஆலயத்தில் நடைபெறுகின்றது. பங்குனி உத்தரத்தில் ஊர்வலம் வரும் மாங்கணாய் மாரி அம்மன் ஆலயத்தின் சுவாமி ஒருநாள் இரவு இவ் ஆலயத்தில் தங்கிச் செல்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் கட்டை விநாயகர் ஆலயம்

சாம்பல்தீவு கிராமத்தில் புராதன பெரிய கோவில்கள் சில உள்ள போதிலும் மக்கள் ஆங்காங்கே தாம் வாழும் பகுதிகளில் சிறிய ஆலயங்களையும் அமைத்து வழிபட்டு வருகின்றனர். அந்த வகையில் அமைக்கப்பட்ட ஒரு ஆலயமே ஆறாம்கட்டை விநாயகர் ஆலயம் சாம்பல்தீவில் இலுப்பைக்குளப்பகுதியில் நிலாவெளி செல்லும் பாதையில் 6வது மைல்கல்பகுதியில் சிறிய மலையின் அடிவாரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் 1964ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இவ்வாலயம் அமைந்துள்ள இடத்திற்கு அண்மையாக வாழ்ந்த பெருந்தெருக்கள் திணைக்களத்தில் மேற்பார்வையாளராக கடமையாற்றிய திரு.தம்பையா அவர்களும் அவரின் மகனான திரு.சத்தியமூர்த்தி அவர்களும் இணைந்து இவ்வாலயத்தை அமைத்தனர்.

சிறுகொட்டிலாக ஆரம்பிக்கப்பட்டு இவ்வாலயத்தில் வழிபாடு நடைபெற்று வந்தவேளையில் பெருந்தெருக்கள் திணைக்கள ஊழியர்களின் உதவியுடன் சற்று விருத்தி செய்யப்பட்டது. தற்போது இவ்வாலயம் கருவறை, தூபி, சிறிய மண்டபம் என்பவற்றைக்கொண்டு விளங்குகின்றது. இந்த நிலைக்கு இவ்வாலயத்தை சுவாமி தந்திரதேவா அவர்கள் விருத்திசெய்தார். தந்திரதேவா சுவாமி அவர்கள் அமெரிக்க நாட்டைச்சேர்ந்த ஒரு வெள்ளைக்காரர். இவர் இந்து சமயக்கொள்கையால் ஈர்க்கப்பட்டு இந்து துறவியாக வாழ்ந்து இலங்கையின் பல இடங்களிலும் இந்து சமயப்பணியை ஆற்றிவந்தார். இவர் சாம்பல்தீவிலும் சிறிது காலம் வாழ்ந்தவர். அப்போது இந்துமத சிறிய ஆலயங்களைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டார். அந்த வகையில் இவ்வாலயம் அவரால் தற்போதைய நிலைக்கு புனரமைக்கப்பட்டது. இவரை மக்கள் வெள்ளைக்காரசாமி என்றும் கூறுவர்.

இவ்வாலயத்தின் பூசகராக திரு கிருஷ்ணபிள்ளை அவர்கள் தொண்டு செய்து கொண்டிருந்தார். தற்போது இதன் பூசகராக திரு.சோதிநாதன் அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். இவருக்கான வேதனம் திரு.ஐ.பரம்சோதி அவர்களால் வழங்கப்படுகின்றது. இவ்வாலயத்திற்கான காணி பார்வதிப்பிள்ளை அவர்களால் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷ்மி நாராயணர் ஆலயம்

இவ்வாலயம் ஆத்திமோட்டைப்பகுதியில் நிலாவெளி வீதியின் இடப்புறமாக அமைந்துள்ளது. தூரத்தில் இருந்து பார்க்கும்போது பொன்னிற கோபுரங்களைக் கொண்டு பொற்கோவில்போல் காட்சியளிக்கின்றது. இவ்வாலயத்தின் மேற்பகுதி பொன்னிறமாகவும் கீழ்ப்பகுதி நீலநிறமாகவும் வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. திருக்கோணமலை நகரத்தில் வாழும் ஒரு நாராயணபக்தரால் இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளது. 07 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாலயம் அமைந்துள்ளது. 2007ஆம் ஆண்டில் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு 2011ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இலங்கையிலுள்ள ஒரேயொரு வைஷ்ணவ ஆலயம் இதுவாகும். திருகோணமலையிலுள்ள ஆலயங்களுள் மிகப்பெரிய ஆலயம் இதுவாகும் வைஷ்ணவ சமய முறைப்படி இவ் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.


இவ் ஆலயமானது லக்ஷ்மி நாராயணரினின் ஒரு மீள்பிரவேசமாகுமென இவ் ஆலயத்தை அமைத்த நாராயணபக்தர் கூறுகின்றார். ஏனெனில் முன்பொருகாலத்தில் திருகோணமலையில் நாராயணர் ஆலயம் இருந்திருக்கின்றதென்றும். அவ் ஆலயத்தின் நாராயணர் சிலை அண்மைக்காலத்தில் கண்டெடுக்கப்பட்டதாகவும் இவர் கூறுகின்றார். கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய மண்டபங்கள் இவ் ஆலயத்தில் அமைந்துள்ளன. பெரிய மணிக்கோபுரமும் கொடிக்கம்பமும் ஆலயத்தின் முன்பு அதன் வெளிப்புறத்தில் அமைந்துள்ளன. உள்வீதி, மாடவீதி, தேரடிவீதி ஆகிய வீதிகள் இவ்வாலயத்தில் அமைந்துள்ளன. பெரியதொரு அன்னதான மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது.

தினந்தோறும் ஐந்துகாலபூசை இவ் ஆலயத்தில் நடைபெறுகின்றது. கோபூசை, காலைப்பூசை, உச்சிக்காலப்பூசை, சாயரட்சபூசை, சயனபூசை என்பவையே அவையாகும். தினமும் காலை 10.00 மணிக்கு சகஷ்ர நாம பூசை நடைபெறுகின்றது. ஆலயத்தின் பூசைகள் வைஷ்ணவ பட்டாச்சாரியர்களாலேயே செய்யப்படுகின்றது. மாதத்தில் பத்து நாட்கள் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகின்றது. ஞாயிற்றுக்கிழமைகளில் அன்னதானம் நடைபெறுகின்றது. பக்தர்கள் 11 சனிக்கிழமைகளில் விளக்கெரித்து வழிபாடு செய்தால் எதிர்பார்க்கும் நல்லகாரியங்கள் நடைபெறுகின்றதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆலயத்தில் வருடாந்த மகா உற்சவம் ஆனி மாதத்தில் 11 நாட்கள் நடைபெறுகின்றது. 09ஆம் நாள் ஆனி உத்தரத்தன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. 11ஆவது நாள் தீர்த்தம் ஆலயத்தின் வளவிலேயே இடம் பெறுகின்றது. உள்ளூர் மக்கள் மட்டுமல்லாது வெளியூர் மக்கள், சிங்கள மக்கள், வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் ஆகியோர் இவ் ஆலயத்தால் கவரப்பட்டு ஆலயத்தை தரிசிக்கின்றனர். பூசகர்கள், உதவியாளர்கள், கணக்காளர், களஞ்சியப்பொறுப்பாளர் ஆகியோரை உள்ளடக்கிய நிரந்தர ஊழியர் குழுவையும் இவ்வாலயம் கொண்டுள்ளது. வருடத்தில் ஒருதடவை இவ் ஆலயத்தின் வடக்கு வாசல் வைகுண்ட ஏகாதசி அன்று திறக்கப்பட்டு இவ்வாயிலூடாக நாராயண சுவாமி வெளிவந்து வீதி உலா வருவார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சல்லி முத்துமாரி அம்மன் ஆலயம்



ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்



மாங்கணாய் மாரி அம்மன் ஆலயம்



ஆறாம் கட்டை விநாயகர் ஆலயம்



தூய திருமுழுக்கு யோவான் ஆலயம்




கோணேசபுரி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ ஆலயங்கள்

சாம்பல்தீவு கிராமத்தில் 03 கிறிஸ்தவ ஆலயங்கள் உள்ளன. கேணியடிச் சந்தியைசார்ந்து ஒரு பெரிய தேவாலயம் அமைந்துள்ளது. இது டச்சுக்காரருடைய காலத்தில் கட்டப்பட்டது. இது தூய திருமுழுக்கு யோவான் ஆலயம் என பெயரிடப்பட்டுள்ளது. இவ் ஆலயத்திற்கே சாம்பல்தீவைச் சேர்ந்த அனைத்து கிறிஸ்தவ மக்களும் முன்பு வழிபாட்டிற்கு வந்தனர். பின்பு சாம்பல்தீவின் செம்பாட்டுப்பகுதியில் ஒரு சிறிய கிறிஸ்தவ ஆலயம் அமைக்கப்பட்டு அதன் அயலிலுள்ள மக்கள் அவ் ஆலயத்தில் தமது வழிபாட்டை நிகழ்த்துகின்றனர். ஆத்திமோட்டைப்பகுதியில் கிறிஸ்தவ குடும்பங்கள் பலர் வாழ்ந்து வருவதால் ஆத்திமோட்டைப்பகுதியிலும் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேவாலயம் நிலாவெளி வீதி 6ஆம் கட்டைப்பகுதியில் வீதியைச்சார்ந்து மலைப்பகுதியில் அமைந்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தின் சிறப்பியல்புகள்

இக்கிராமம் பல சிறப்பியல்புகளைக்கொண்டுள்ளது. கடல், கடல்நீர் ஏரி, குன்று, குளம் என்பவற்றை எல்லைகளாகக்கொண்டு தனித்த ஒரு பகுதியாகவுள்ளது. திருகோணமலையின் பிரதான நகரத்திற்கு அண்மையாக அமைந்துள்ளமையும் ஒரு சிறப்பம்சமாகவுள்ளது. இதனால் நகரத்தின் கல்வி வசதி, சந்தைவாய்ப்பு, சேவை வசதிகள், தொழில்வாய்ப்பு என்பவற்றை இலகுவாகப் பெறக்கூடியதாகவுள்ளது. கிராமத்தில் இருந்து சிறிது நேரத்தில் நகரத்தை அடைந்துவிடலாம். துவிச்சக்கர வண்டியில்கூட நகரத்திற்கு சென்று திரும்பலாம். முன்பு கால்நடையாகக்கூட சிலர் நகரத்திற்கு சென்று வருவதுண்டு.

தென்னை, பனை, மா, பலா, சிறுபயிர்கள், நெல் போன்ற பயிர்கள் வளர்வதற்குரிய மண்வளத்தை இக்கிராமம் கொண்டுள்ளது. மணல் மண், செங்கபிலமண், வண்டல்மண் ஆகிய பயிர்ச்செய்கைக்கேற்ற மண்வளம் இங்கு உண்டு. இதனால் பல்வேறு பயிர்களும் இங்கு வளர்கின்றன.

இங்கு உற்பத்தியாகும், பனங்கிழங்கு, தேங்காய், பலாப்பழம், மாம்பழம், மரவள்ளிக்கிழக்கு என்பவற்றிற்கு நல்லமதிப்புண்டு நகரப்பகுதி மக்கள் கிராமத்தில் விளையும் இப்பொருட்களை மிகவும் விரும்பி வாங்குவர். இச்சிறப்புக்கருதி சாம்பல்தீவு மாம்பழம், சாம்பல்தீவு பலாப்பழம், சாம்பல்தீவு தேங்காய், சாம்பல்தீவு மரவள்ளிக்கிழங்கு என்று வியாபாரிகள் ஊர்ப்பெயர் சொல்லி இப்பொருட்களை திருகோணமலைச்சந்தையில் விற்பனை செய்யும் நிலையும் காணப்பட்டது. நகரப்பகுதியைச் சேர்ந்த சிலர் விடுமுறை தினங்களில் இப்பொருட்களை வாங்கிச்செல்வதற்காக இங்கு வருவதுண்டு.

சுவையான கடல் உணவினையும் மலிவான விலையில் இக்கிராமத்தில் பெறக்கூடியதாகவுள்ளது. ஒரு புறம் கடலையும் மறுபுறம் கடல்நீர் ஏரியையும் இக்கிராமம் கொண்டுள்ளமையால் கடல் உணவும் இங்கு உற்பத்திசெய்யப்படுகின்றது. சல்லிப்பகுதி மக்கள் கடலுணவை உற்பத்தி செய்கின்றனர். மீன், இறால், நண்டு, கணவாய், சிங்கறால், மட்டி போன்ற சகலவகையான கடல் உணவும் உற்பத்தி செய்யப்படுகின்றது. சிறிய மீன்வகை தொடக்கம் பெரிய மீன்வகைகள் வரை சுவையான மீன்வகைகளை இங்கு பெறக்கூயடிதாகவுள்ளது.

ஒரு இனம்மட்டும் வாழும் கிராமமாக இக்கிராமம் இருப்பதும் ஒரு சிறப்பம்சமாகும். தமிழ் மக்கள் மட்டுமே இக்கிராமத்தில் வாழ்கின்றனர். சைவமும் தமிழும் நிலைத்திருக்கும் இடமாக காணப்படுகின்றது. இங்கு வாழும் மக்களில் 80வீதத்திற்கு மேற்பட்டவர்கள் இந்துக்களாவர். சிறுபகுதியினரே கிறிஸ்தவர்களாவர். கிறிஸ்தவர்களும் இந்துக்களும் நட்புறவோடு வாழ்கின்றனர். இந்துக்களின் பூதவுடல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்போது கிறிஸ்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தை அணுகியவுடன் மேளம், சங்கு, சேமக்கலம் போன்ற இந்துமத வாத்தியங்களின் ஒலியை நிறுத்தி கிறிஸ்தவ ஆலயத்திற்கு மதிப்பளித்துச் செல்லும் மரபும் இங்கு காணப்பட்டது.

இங்கு வாழும் மக்கள் இனமத கலாசார பண்புகளைப் பேணிப் பாதுகாப்பவர்களாக உள்ளனர். இம் மக்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாண சமூகத்தின் வழித்தோன்றல்களாவர். அதனால் யாழ்ப்பாண சமூக, கலாசார பண்புகளைக் கொண்டவர்களாகவும் அவற்றைப் பேணுபவர்களாகவும் காணப்படுகின்றனர். தமது இனம், மதம், குலம் என்பவற்றைப் பாதுகாப்பவர்களாகவும் அதிலிருந்து விலக விரும்பாதவர்களாகவும் உள்ளனர். தமது இனம், மதம், குலம் என்பவற்றினுள்ளேயே தமது திருமண உறவுகளைப் பேணுவதில் அக்கறையுள்ளவர்கள். வீரம் நிறைந்த மனப்பாங்கு உள்ளவர்கள், அரசியல் ரீதியாக தமிழ்மக்களின் பிரதான அரசியல் நீரோட்டத்துடனேயே பெரும்பாலானோர் இணைந்திருப்பர்.

இக்கிராமத்து இளைஞர்கள் ஓய்வுக்காலத்தில் கரப்பந்து, கிளித்தட்டு, கால்பந்து, எல்லே, மாபிள் குண்டுகள் அடித்தல் ஆகிய விளையாட்டுக்களில் ஈடுபடுவர். சல்லிப்பகுதியில் "உதய சூரியன் விளையாட்டுக்கழகம்" உள்ளது. இக்கழகம் வேறு இடங்களிலுள்ள கழகங்களையும் அழைத்து கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளை நடாத்துவதுடன் வேறு இடங்களில் நடைபெறும், சுற்றுப்போட்டிகளிலும் கலந்துகொள்ளும்.

கோடைகாலத்தில் சில மாதங்களில் ஒடியற்கூழ் சமைத்து உண்ணும் வழக்கமும் இம்மக்களிடம் காணப்படுகின்றது. ஒடியல்மா, இறால், நண்டு, மீன், கருவாடு, பலாக்காய் சுளைகள், பலாக்காய் விதை, மரவள்ளிக்கிழங்கு, பயற்றங்காய், பழப்புளி, செத்தல் மிளகாய்வெட்டுத்தூள் என்பவை சேர்ந்து இவ் ஒடியற்கூழ் தயாரிக்கப்படும். இது காரமானதாகவும் சுவையானதாகவும் காணப்படும். தேவையான மூலப்பொருட்கள் அனைத்தும் உள்ளூரில் பெறக்கூடியதாக இருப்பதால் இவ்வாறு கூழ் சமைத்துச் சுவைக்கும் வழக்கம் இக்கிராம மக்களிடம் உண்டு.

வடக்குகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக சிறிதுகாலம் கடமையாற்றியவர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜனாப் மன்சூர் அவர்கள். அவர் திருகோணமலையில் பிரதம கல்வி அதிகாரியாக இருந்தபோது சாம்பல்தீவு மகாவித்தியாலத்தின் விளையாட்டு போட்டி ஒன்றிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அவர் இதில் உரையாற்றும்போது சாம்பல்தீவு கிராமம் குட்டி யாழ்ப்பாணம் என்று குறிப்பிட்டார். தமிழ் மக்கள் மட்டும் வாழுகின்றமை, யாழ்ப்பாண வழித்தோன்றல்களாக இவர்கள் உள்ளமை, பனை மரங்கள் இங்கு சிலபகுதிகளில் செறிந்து காணப்படுகின்றமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர் இக்கருத்தைக் கூறியிருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பின்னணி

மன்னற்கு தன்னூரில் சிறப்பு "கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" "கல்வி அழகே அழகு" "கல்வி ஏழுபிறப்பிற்கும் உதவும்" என்றெல்லாம் கல்வியின் சிறப்புப்பற்றி கூறுவார்கள். கிராமத்திற்கும் கல்வி முக்கியம். அங்கும் கல்வி வளர வேண்டும். அந்த வகையில் சாம்பல்தீவு கிராமத்தின் கல்விப்பின்னணியை நோக்குவோம்.

இக்கிராமம் நல்லதொரு கல்விப்பின்னணியைக் கொண்டுள்ள கிராமம் என்றே நோக்கவேண்டும். அரசசேவையில் இணைந்துகொள்ளும் அளவில் கல்வி மட்டத்தை பெற்றவர்கள் 90 ஆண்டுகளுக்கு முன்பே இந்தக் கிராமத்திலிருந்து உருவாகியுள்ளனர். 1983 ஆண்டில் இருந்து இக்கிராமத்தில் பட்டதாரிகள் உருவாகத்தொடங்கினர். அதிலிருந்து பெரும்பாலும் வருடத்திற்கு ஒன்று, இரண்டு என்ற அடிப்படையில் இக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றனர். ஏறத்தாழ 40 இற்கு மேற்பட்டவர்கள் பல்கலைக்கழக கல்வியைப் பெற்றவர்களாகவுள்ளனர். ஆசிரியர்கள், பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அதிபர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலதரப்பட்ட பதவிகளிலும் இக்கிராமத்தவர்கள் 150 வரையானோர் கடமையாற்றுகின்றனர். இவ்வாறான நிலைக்கு இக்கிராமத்தின் கல்வி முன்னேற்றமே காரணமாகும். ஏனைய கிராம மக்களுடன் ஒப்பிடுகையில் இது ஒரு முன்னேற்றகரமான நிலையாகும்.

இக்கிராமம் நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ளமை, தொழில்வாய்ப்பு குறைவாக இருப்பதால் கல்வி மூலமான தொழில் வாய்ப்புக்களை பெறவேண்டும் என்னும் எண்ணம், பரம்பரை ரீதியான கல்வி ஈடுபாடு, கல்வியில் முன்னேற்றமடையக்கூடிய மக்களின் உள்ளார்ந்த வளம் என்பவை இங்குள்ள கல்வி முன்னேற்றத்திற்கு காரணமாகவுள்ளது. இக்கிராமத்துமக்கள் முன்பு தங்கள் பிள்ளைகளை யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகள், வந்தாறுமூலை மகாவித்தியாலயம் நகரப்பகுதி பாடசாலைகள் என்பவற்றிற்கும் அனுப்பி கல்வி கற்பித்துள்ளனர். அண்மைக்காலத்தில் கிராமத்தினுள் அமைந்துள்ள பாடசாலைகள், நகரப்பகுதி பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றின் மூலம் கல்வியைப்பெறுகின்றனர். கிராமத்தினுள்ளே சல்லி அம்பாள் மகாவித்தியாலயம், சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம், ஆத்திமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்பவை அமைந்துள்ளன. இக்கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் பலர் நகரப்பகுதிப் பாடசாலையில் சேர்ந்து கல்விகற்று முன்னணி மாணவர்களாகத் திகழ்ந்து கணிதப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு என்பவற்றில் மாவட்ட மட்டத்தில் 2ஆம், 3ஆம் நிலைகளைப்கூட பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த பாதிப்பு

1983ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆண்டு வரை நாட்டில் இடம்பெற்ற யுத்தம் தமிழ்க் கிராமங்களைப் பெரிதும் பாதித்தது என்பது யாவரும் அறிந்ததே. அவ்வாறான பாதிப்புக்கு சாம்பல்தீவு கிராமமும் உட்பட்டுள்ளது. உயிரழிவு, பொருளாதாரப்பாதிப்பு, சமூககட்டமைப்பு குலைவு, இடப்பெயர்வு, வீடுகள் அழிக்கப்பட்டமை என்பவை இக்கிராமத்தின் யுத்த பாதிப்புக்களாக காணப்படுகின்றன. 50 பேர்வரையில் இறந்துள்ளனர். யுத்தத்தின் காரணமாக இராணுவத்தின் செயற்பாடு, போராட்டக்குழுக்களின் செயற்பாடு, போராட்டத்தில் ஈடுபட்டமை போன்ற காரணங்களால் இவர்கள் உயிரிழந்தனர்.

யுத்த சூழ்நிலை காரணமாக 1990இன் பின் இக்கிராமத்திலிருந்து மக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயரத்தொடங்கினர். இராணுவம் கிராமத்தில் நிலை கொண்டமை. அடிக்கடி இராணுவ சுற்றிவளைப்பு இடம்பெற்றமை, பலர் கொல்லப்பட்டமை ஆகிய காரணங்களால் மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள், திருமலை நகரப்பகுதி, நிலாவெளி வீதியில் 3ஆம் கட்டையைச்சார்ந்து அமைந்துள்ள புளியங்குளம் ஆகிய பகுதிகளில் குடியேறினர். மேலும்பலர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். வெளிநாடு சென்றவர்கள் கனடா, சுவிற்சிலாந்து, இத்தாலி, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர். வெளிநாடுகளில் வாழ்பவர்கள் சிலரால் கிராமத்தில் உள்ள தமது உறவினர்களுக்கு நிதியுதவியும் கிடைப்பதுண்டு. நகரப்பகுதியில் குடியேறியவர்களில் பெரும்பாலானோர் அரச உத்தியோகத்தர்களாகவும் சிலர் வர்த்தகத்தில் ஈடுபடுவோராகவும் உள்ளனர். நகரப்பகுதியில் குடியேறியோர் நகரத்திற்குரிய வாழ்க்கை வசதியுடன் வாழ்கின்றனர். இவர்களில் சிலர் தமது கிராமத்தின் பாடசாலை, ஆலயம் என்பவற்றின் வளர்ச்சிக்கு உதவிகளும் வழங்கியுள்ளனர். சிலர் இடம்பெயர்ந்து சென்று இந்திய தமிழ்நாட்டின் அகதிகள் முகாமிலும் தங்கியிருந்து கிராமத்திற்கு திரும்பியுள்ளனர்.

யுத்த சூழ்நிலையின் காரணமாக தொழில்கள் பாதிப்படைந்துள்ளன. நெல் விவசாய நிலங்கள் குடியிருப்புப்பகுதியிலிருந்து தொலைவில் அமைந்துள்ள சாளம்பமோட்டை, சிறுப்பிட்டி, மாங்கணாய் ஆகிய பகுதிகளில் அமைந்திருப்பதால் விவசாய நடவடிக்கையின் பொருட்டு மக்கள் இப்பகுதிகளுக்குச் செல்லமுடியாத நிலைகாணப்பட்டது. அத்துடன் விவசாயச் செய்கையின் முன்னோடிகள் பலர் கிராமத்தைவிட்டு நகரத்திற்கு இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர். இக்காரணங்களால் விவசாயச்செய்கை பாதிப்படைந்தது குறிப்பாக நெற்செய்கை பெரிதும் பாதிப்படைந்தது யுத்தம் முடிவடைந்ததன் காரணமாக தற்போது நெற்செய்கை விருத்தியடைந்து வருகின்றது. போதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்காணிப்பு, பராமரிப்பு என்பவை இன்மையால் மா, பலா செய்கை பாதிப்படைந்துள்ளது. மரவள்ளிச் செய்கையும் பாதிப்படைந்துள்ளது.

யுத்த சூழ்நிலையில் மீன்பிடித்தொழிலும் மிகவும் பாதிப்படைந்திருந்தது. மீன்பிடிக்க மீனவர்கள் கடலுக்குச் செல்லமுடியாத நிலை இருந்ததால் மீன்பிடி பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. யுத்தம் முடிவடைந்தபின்பு மீன்பிடித்தொழில் மீண்டும் வளர்ச்சியடைந்து வருகின்றது.

யுத்தத்தால் சமூகக்கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது. கிராமத்தின் முன்னோடிகள் பலர் கிராமத்தில் இல்லை அவர்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்கின்றனர். கலப்புத்திருமணங்கள், கலாச்சாரம் பிறழ்வுகள் என்பனவும் ஓரளவில் ஏற்பட்டுள்ளது. யுத்த பாதிப்பினால் கிராமத்தின் நிலை பின் தள்ளப்பட்டுள்ளது. கிராமம் முன்னைய செழிப்பின்றிக்காணப்படுகின்றது. யுத்த பாதிப்பினை வெற்றிகொண்டு கிராமம் பழையநிலைக்குத்திரும்ப மேலும் பல வருடங்கள் தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கான சேவைகள்

மக்கள் வாழும் ஒரு பிரதேசத்தில் அவர்களுக்குத் தேவையான சேவைகள் கிடைக்கப்பெறுவது அவசியமானதாகும். அரச நிறுவனங்கள், தனியார், கூட்டுறவுச்சங்கங்கள் என்பவற்றின் மூலம் சேவை வழங்கப்படுகின்றது. இக்கிராமத்திற்கும் மேற்கூறிய மூன்று வகையினராலும் தேவையான சேவைகள் வழங்கப்படுகின்றது.

**மருத்துவசேவை :**

இக்கிராமத்தினுள் 03 மருத்துவமனைகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு மருத்துவசேவைகள் வழங்கப்படுகின்றன. இதில் ஒரு ஆயுர்வேத மருத்துவமனை செம்பாட்டு பகுதியில் பிரதானவீதியைச்சார்ந்து அமைந்துள்ளது. இம்மருத்துவமனை உப்புவெளி பிரதேசபையினால் இயக்கப்படுகின்றது. மற்றொரு அரச மருத்துவமனை (ஆங்கில மருத்துவம்) செம்பாட்டுபகுதியில் பிரதான வீதியைச்சார்ந்து அமைந்துள்ளது. சித்தமருத்துவ போதனா வைத்தியசாலையொன்று அண்மைக்காலத்தில் (2015இல்) ஆத்திமோட்டையில் நிலாவெளி வீதி 06ஆம் கட்டையைச்சார்ந்து அமைந்துள்ளது. கோணேசபுரியில் அமைந்துள்ள திருகோணமலை பல்கலைக்கழக வளாகத்தின் சித்த மருத்துவபீட மாணவர்கள் பயிற்சிபெறும் மருத்துவமனையாகவும் இது அமைந்துள்ளது.

**கூட்டுறவுச்சங்கங்கள் :**

சாம்பல்தீவு கிராமத்தினுள் இரண்டு கூட்டுறவுச்சங்க கடைகள் அமைந்துள்ளன. ஒன்று சல்லிப்பகுதியிலும், மற்றொன்று செம்பாட்டுப்பகுதியில் பிரதான வீதியைச்சார்ந்தும் அமைந்துள்ளது. இக்கடைகள் திருக்கோணமலை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கீழ் வருகின்றன. முன்பு கூட்டுறவுச்சங்கக்கிளைகள் பயனுள்ள பலசேவைகளை வழங்கிவந்தன. இப்போது உலருணவுப் பொருட்களையும் ஏனைய சில பொருட்களையம் விற்பனை செய்யும் நிலையங்களாக மட்டும் காணப்படுகின்றன. முன்பு சாம்பல்தீவு கூட்டுறவுச்சங்கக் கிளையானது. விவசாயத்திற்கான கடன்வழங்குதல், நெல்கொள்வனவு செய்தல், துணி விற்பனை செய்தல் பசளை, களைநாசினி, கிருமிநாசினி என்பவை விற்பனை செய்தல் முத்திரைக்கான உணவுப்பொருள் விநியோகம் என்பவற்றிலும் ஈடுபட்டது.

தற்போது சிறப்புச்சேவையாக சல்லிக்கிளை மண்ணெண்ணை விற்பனையில் ஈடுபட்டுள்ளது. சாம்பல்தீவு, சல்லி கிளைகள் பிரதேச செயலகத்தால் கர்ப்பிணித்தாய்மாருக்கு வழங்கப்படும் 10 மாதங்களுக்கான ரூபா. 2000 பெறுமதியான போசாக்கு உணவு வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளன. தற்போது இங்கு 65 பேருக்கு இவ்உதவி வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தபால் சேவை :**

கிராமம் முழுவதற்கும் தபால்சேவையை வழங்குவதாக ஒரு உபதபால் அலுவலகம் பிரதான வீதியைச் சார்ந்து நீண்டகாலமாக இயங்கிவருகின்றது. இத்தபால் அலுவலகமே அயற்கிராமமான அலஸ்தோட்டம், துவரங்காடு ஆகிய பகுதிகளுக்கும் தபால் விநியோகத்தைச் செய்கின்றது. அத்துடன் ஏழைகளுக்கான மானியக்கொடுப்பனவையும் இவ்வலுவலகம் வழங்குகின்றது.

**விவசாய சேவை நிலையம் :**

விவசாய சேவை நிலையமொன்று ஆத்திமோட்டைப்பகுதியில் நீண்டகாலமாக இயங்கிவருகின்றது. விவசாயத்திற்குத் தேவையான பல சேவைகளையும் இந்நிலையம் வழங்கிவருகின்றது. இந்நிலையத்தின் சேவைகளாவன

* விதை நெல்வழங்குதல்.
* மானிய விலையில் உரம் வழங்குதல்.
* கிருமிநாசினி, களை நாசினி என்பவற்றை விற்பனை செய்தல்.
* தவணை அடிப்படையிலான கட்டுப்பணத்திற்கு விவசாயிகளுக்கு
* உழவியந்திரம் வழங்குதல்.
* விவசாய வரி அறவிடல்.
* சிறுகுளங்கள் திருத்துதலும் பராமரித்தலும்.
* சேதனப்பசளை பாவனை தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு செய்தல்.
* விசேட திட்டங்களின் கீழ் பயிர்விதை பைக்கற்றுக்களை வழங்குதல்.

விவசாய விரிவாக்கல் திணைக்களத்தின் விவசாய போதனாசிரியர் ஒருவரும் இந்நிலையத்திற்கு வருகைதந்து விவசாயிகளுக்குத் தேவையான சேவைகளை வழங்குகின்றார்.

**பிரதேச சபையின் உப அலுவலகம் :**

இவ் அலுவலகம் சாம்பல்தீவின் பிரதான வீதியைச்சார்ந்து அமைந்துள்ளது. உப்புவெளி பிரதேச சபையின் சேவைகள் சிலவற்றை இக்கிராமத்திற்கு இவ் அலுவலகம் வழங்குகின்றது. ஒரு நூலகத்தையும் இயக்குகின்றது நூலகத்தில் செய்தித்தாள் வாசிப்பறை, நூல் வாசிப்பு பகுதி என்பவை காணப்படுகின்றன. பிரதேச சபையின் மூலம் அமைக்கப்பட்ட சிறிய மீன், மரக்கறிச்சந்தை ஒன்று கேணியடியைச் சார்ந்து இயங்குகின்றது.

**தனியார் துறையின் சேவைகள் :**

தனியார் துறையினராலும் இங்கு சில சேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. பஸ், ஆட்டோ, போக்குவரத்துச் சேவையை வழங்குகின்றனர். சல்லியில் இருந்து நகரத்திற்கு தனியார் பேரூந்து சேவையே நடைபெறுகின்றது. இலங்கைப்போக்குவரத்து பேரூந்து சேவை இப்போது இங்கு இடம்பெறுவதில்லை. கிராம மக்களுக்குத் தேவையான உழவியந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையையும் இங்குள்ள மக்களே வழங்குகின்றனர். 10 உழவியந்திரங்கள் இங்குண்டு. மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள் என்பவை திருத்தும் நிலையங்களும் இங்கு காணப்படுகின்றன. தச்சுவேலை செய்வோர், மேசன்வேலை செய்வோர், மின் இணைப்புச்செய்வோர், நீர்க்குழாய் பொருத்துவோர் ஆகியோரும் இங்குள்ளனர் இவர்களது சேவையும் இக்கிராமத்திலுண்டு

உழவியந்திரங்கள் - 10
தனியார் பேரூந்து - 02
ஆட்டோ - 25
வான் (Van) - 02
வாகனங்கள் திருத்தும் நிலையங்கள் - 02
சைக்கிள் திருத்தும் நிலையங்கள் - 02
ஹாட்வெயார் ஸ்டோர் - 02
அரைக்கும் ஆலைகள் (Granding mills) - 03

என்பவை இக்கிராமத்தில் தனியாருக்கு உரியதாக இருந்து இங்குள்ள மக்களுக்கு சேவை வழங்குகின்றன.

**கல்விச்சேவை :**

மூன்று அரச பாடசாலைகள் இக்கிராமத்தில் அமைந்துள்ளன. இவற்றில் 02 மகாவித்தியாலயங்களாகவும் 01 வித்தியாலயமாகவும் காணப்படுகின்றது. சல்லி, செம்பாடு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகள் மகாவித்தியாலயங்களாகவும், ஆத்திமோட்டையில் அமைந்துள்ள பாடசாலை வித்தியாலயமாகவும் காணப்படுகின்றது. இப்பாடசாலைகள் ஊடாக அரசாங்கத்தின் கல்வி வழங்கல் இடம் பெறுகின்றது. தனியாரால் முன்பள்ளிக்கல்வி நிலையங்கள் 05 நடாத்தப்படுகின்றன. இவற்றில் 02 சல்லியிலும் 01 சாம்பல்தீவிலும், 01, இலுப்பைக்குளத்திலும், 01 கோணேசபுரியிலும் இயங்குகின்றது. தனியார் கல்வி நிலையங்கள் சில பிரத்தியேகக் கல்வியை வழங்குகின்றன. அடுக்குப்பார் பகுதியில் ஒரு இறையியல்கல்லூரியும், கட்டடவேலை பயிற்சி நிலையமும் அமைந்துள்ளன. இவை தேசிய நிலையில் கல்வியை வழங்கும் நிலையங்களாக உள்ளன.

**நீரும், மின்சாரமும் :**

நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சேவையும் இங்கு கிடைக்கின்றது. சல்லி, சாம்பல்தீவு, ஆத்திமோட்டை, இலுப்பைகுளம் ஆகிய பகுதிகளின் குறிப்பிட்ட இடங்களுக்கு குழாய் நீர் இச்சபையால் வழங்கப்படுகின்றது. ஏறக்குறைய 2000பேர் வரையில் குழாய் நீர்மூலம் நீர்வசதியைப் பெறுகின்றனர். இலங்கை மின்சார சபையின் சேவையும் இக்கிராமத்திற்கு கிடைக்கின்றது பெரும்பாலும் பிரதான வீதிகளைச் சார்ந்துள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகள், அலுவலகங்கள், பாடசாலைகள், கோவில்கள், தொழில் நிலையங்கள் என்பவற்றிற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**மயானங்கள் :**


கிராமத்தில் இரண்டு மயானங்கள் உள்ளன. ஒன்று இந்துமயானம் மற்றொன்று கிறிஸ்தவமயானம். இவை இரண்டுமே சாம்பல்தீவு கடற்கரையைச்சார்ந்து அருகருகே அமைந்துள்ளன. இங்குள்ள மயானங்களில் உடல்களைப்புதைக்கும் வழங்கமேயுள்ளது. உடல்களை எரிக்கும் வழக்கம் இல்லை. இந்துமக்களாயினும் கிறிஸ்தவ மக்களாயினும் இங்கு தத்ததமது மயானங்களில் பூதவுடல்களைப் புதைக்கின்றனர். 3ஆம் கட்டை, நகரம் ஆகிய பகுதியில் வாழ்ந்து உயிரிழந்த இவ்வூர்மக்கள் சிலரின் பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு இங்கு அடக்கம் செய்யப்பட்டது.


**பொதுநோக்கு மண்டபங்கள் :**

இங்கு 03 பொதுநோக்கு மண்டபங்கள் உள்ளன. இவை சல்லி, சாம்பல்தீவு, இலுப்பைக்குளம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் ஒவ்வொன்றாக அமைந்துள்ளன. கிராமசேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்நிலையங்களில் இருந்து தமது கடமைகளைச் செய்கின்றனர். மக்கள் இந்நிலையங்களுக்கு வந்து இவ்வுத்தியோகத்தர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பல்தீவு கடல்நீர் ஏரி

நிலப்பரப்பினுள் கடல்நீர் தேங்கி ஏரியாகக் காணப்படும் பகுதியே கடல்நீர் ஏரி எனப்படுகின்றது. கடல்நீர் ஏரிகள் ஒடுங்கிய பகுதியால் கடலுடன் இணைந்திருக்கும். நிலப்பரப்பின் தாழ்ந்த பகுதிகளில் கடல்நீர் உட்புகுந்து தேங்குவதன் மூலமே கடல்நீர் ஏரிகள் தோன்றுகின்றன. இலங்கையின் கரையோரங்களில் இவ்வாறான கடல்நீர் ஏரிகள் காணப்படுகின்றன. சாம்பல்தீவு கடல்நீர் ஏரியானது சல்லிக்கோவிலுக்கு அருகாமையில் தோற்றம் பெற்று சாளம்பமோட்டை என்னும் பகுதிவரை பரந்துள்ளது. சாம்பல்தீவு பாலம்வரை இக்கடல்நீர் ஏரி ஒடுங்கியதாக காணப்பட்டு பாலத்தை கடந்ததும் பரந்து அமைந்துள்ளது.

இக்கடல்நீர் ஏரியானது சாம்பல்தீவு கிராமத்தின் கிழக்கு தெற்கு எல்லையாக அமைந்திருப்பதுடன் அலஸ்தோட்டம், துவரங்காடு ஆகிய கிராமங்களை சாம்பல்தீவு கிராமத்தில் இருந்து பிரிப்பதாக காணப்படுகின்றது. இக்கடல்நீர் ஏரியை இங்குள்ள மக்கள் ஆறு என்று கூறுவர். இதனால் இவ் வொடுங்கிய பகுதியை சார்ந்த சாம்பல்தீவின் நிலப்பகுதியை "ஆற்றடி" என அழைப்பர். கடல்நீர் ஏரியின் பரந்த பகுதியை இங்குள்ள மக்கள் பிள்ளைகுளம் என்பர். பிள்ளைகுளம் கடல்நீர் ஏரியின் பகுதியில் கண்டல் தாவரங்கள் வளர்கின்றன.


இக்கடல்நீர் ஏரியானது பொருளாதார முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது. மீன்கள், நண்டு, இறால், மட்டி என்பவை கடல்நீர் ஏரியில் வளர்கின்றன. மக்கள் இவற்றை பிடித்து தமது உணவிற்கு பயன்படுத்துடன் விற்பனை செய்து வருமானத்தையும் பெறுகின்றனர். இறால், கருநண்டு, மட்டி என்பவை கடல்நீர் ஏரியின் பரந்த பகுதியில் பிடிக்கப்படுகின்றது. துவரங்காடு, ஆத்திமோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இவற்றை பிடிக்கின்றனர். கடல்நீர் ஏரியின் ஒடுங்கிய பகுதியில் மீன்கள் வாழ்கின்றன. சல்லிப்பகுதிமக்கள், வீச்சுவலை, கட்டுவலை, கூடு என்பவற்றின் மூலம் இப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். சல்லியைச்சார்ந்த இவ்வேரிப்பகுதியை சல்லி மக்கள் தமது மீன்பிடிப்படகுகளைக் கட்டிவைப்பதற்கும் பயன்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள தென்னோலைகளை மக்கள் கிடுகுகளாக மாற்றி தமது தேவைக்கு பயன்படுத்துவதுடன் விற்பனை செய்தும்வந்தனர். தென்னோலைகளை கிடுகுகளாக மாற்றுவதற்கு அவற்றை ஊறவைப்பதற்குப் பொருத்தமான இடமாக இக்கடல் நீரேரிகாணப்பட்டது. மக்கள் இதனை இத்தேவைக்கும் பயன்படுத்தினர். முன்பு திருமலை நகரத்திற்கு தேவையான கிடுகின் ஒருபகுதி சாம்பல்தீவில் இருந்து வழங்கப்பட்டது.

கடல்நீர் ஏரியின் பரந்தபகுதியைச்சார்ந்து பரந்த ஒரு உவர்மண் வெளி உள்ளது. இதனை மக்கள் கரச்சி என்பர். ஆண்டாங்குளம், செம்பியனாறு, சிறுப்பிட்டி, சாளம்பமோட்டை ஆகிய நெல்வயற்பகுதிக்குச் செல்லும் மக்கள் இக்கரச்சியினூடாகவே பயணஞ் செய்வர். மாரிகாலத்தில் இக்கரச்சி வெள்ள நீரால் நிறைந்திருக்கும். நிலாவெளிவீதி, கடல்நீர் ஏரியைக்கடக்குமிடத்தில் சாம்பல்தீவு சந்தியைச் சார்ந்து ஒரு பாலம் அமைந்துள்ளது. இப்பாலத்தை இக்கிராம மக்கள் பிள்ளைகுளப் பாலம் என்பர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேணிக்கிணறு

இக்கிராமத்தின் மாங்கணாய் பகுதியைச்சார்ந்து அம்மன்கோவிலுக்கு அண்மையில் ஒரு பெரிய பொதுக்கிணறு உள்ளது. இதுவே கேணிக்கிணறு எனப்படுகின்றது. இக்கிணற்றின் அயல் பகுதி கேணியடி என்று சொல்லப்படுகின்றது. இக்கிணற்றுக்கு அண்மையிலேயே முன்பு சாம்பல்தீவின் பஸ் நிலையம் அமைந்திருந்தது. இக்கிணறு வற்றாத நீர்வளத்தைக் கொண்டுள்ளது. இரண்டு மூன்று நீர்ப்பம்பிகளைப் பயன்படுத்தி இறைத்தாலும் வற்றவைக்க முடியாத அளவு நீரூற்று இக்கிணற்றிற்கு காணப்படுகின்றது. இப்பகுதி தரையினுள் பரந்த சுண்ணக்கற்பாறையைக் கொண்டிருப்பதே நீர்வளத்திற்கு காரணமாகும்.

இக்கிணற்றைச்சார்ந்து ஒரு பெரிய நீர்த்தொட்டி கட்டப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள கால்நடைகள் நீர்குடிப்பதற்காக இத்தொட்டி கட்டப்பட்டது. இக்கிணற்றிற்கு நீர்பெறவரும் மக்கள் இத்தொட்டியில் நீரை நிறைத்துவிடுவர். தங்கள் வீடுகளில் கிணறில்லாத மக்களும், நீர் பெறமுடியாத உயர்நிலப்பகுதி மக்களும் இக்கிணற்று நீரைப்பயன்படுத்துவர். கோடை காலத்தில் செம்பாட்டுப்பகுதி கிணறுகள் வற்றிவிடுவதால் அப்பகுதி மக்கள் இக்கிணற்றைப் பயன்படுத்துவர். செம்பாட்டுப்பகுதி மக்கள் இக்கிணற்றிலிருந்து மாட்டு வண்டியில் பொருத்தப்பட்ட பெரியதாங்கிகள் மூலம் நீர் எடுத்துச்சென்று மா, பலா ஆகிய பயிர்களை அப்பகுதியில் வளர்த்துள்ளனர்.

கேணிக்கிணற்றுக்கு அண்மையில் சுமைதாங்கி என்று ஒரு ஆள் உயரக்கட்டு கட்டப்பட்டுள்ளது. இது இரண்டு மட்ட உயரங்களைக் கொண்டுள்ளது. ஒன்று தோள்மட்ட உயரத்தையும் ஒன்று தலைமட்ட உயரத்தையும் கொண்டதாகக்காணப்படுகின்றது. இக்கட்டு சுமைதாங்கியென்று சொல்லப்பட்டது. கிராமத்துப் பெரியவர் ஒருவர் தனது உயிர்நீத்த மனைவியின் ஞாபகார்த்தமாக இதனை அமைத்திருந்தார். முற்காலத்தில் கிராமங்களில் சுமைதாங்கி அமைக்கும் வழக்கம் காணப்பட்டுள்ளது. மக்கள் சுமைகளை (பொருட்களை) தோளில் அல்லது தலையில் சுமந்துசெல்லும் வழக்கம் இருந்தது. இவ்வாறு இச்சுமைகளை நீண்டதூரம் சுமந்து வருபவர்கள் தமது சுமைகளை இறக்கிவைத்து சற்று இளைப்பாறி பின் சுமந்து செல்லும் நோக்கில் இவ்வாறான சுமைதாங்கிகள் அமைக்கப்பட்டன. மக்கள் சுமந்துவரும் சுமைகளை தரைக்கு இறக்குவதும் மீண்டும் தோளுக்கோ, தலைக்கோ ஏற்றுவதும் சிரமம் என்பதால் இவ்வாறான சுமைதாங்கிகள் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரப்பகுதி மக்களின் நிலங்கள்

யுத்த சூழ்நிலையால் திருக்கோணமலை மாவட்டத்தின் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நகரப்பகுதிக்கும். ஏனைய இடங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றமை ஒரு பொதுவான இயல்பாகும். இந்தநிலை சாம்பல்தீவு கிராமத்திற்கும் ஏற்பட்டுள்ளது. இதனால் கிராமம் ஒரு உறங்கிய நிலையில் உள்ளது. எமது மக்களில் பலர் எமது கிராமத்தை விட்டுச்சென்றுவிட்டனரே என தற்போது அங்குள்ள மக்கள் வேதனைப்படுவதும் உண்டு. இது யுத்தத்தின் விளைவாகும். யுத்தத்தின் முன்பு இக்கிராமமக்கள் இக்கிராமத்தைவிட்டுச் செல்வதில்லை. அங்கேயே வாழ்வதையே விரும்பினர். நகரப்பகுதி மக்கள் பலர் இக்கிராமத்தில் நிலம் வாங்கி தமது சொத்தையும் வருமானத்தையும் பெருக்குவதற்கு பயன்படுத்தினர்.

நகரத்தின் முன்னணி குடும்பங்கள் பலவற்றிற்குரிய, தென்னந்தோட்டங்களும் வயல் நிலங்களும் இக்கிராமத்திலுண்டு இப்போது இவை பயன்தரும் நிலங்களாக அல்லாது உள்ளன. திருக்கோணமலை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.மாணிக்கராசா அவர்களது குடும்பத்திற்கு மாங்கணாய்ப்பகுதியில் 144 ஏக்கர் விஷ்தீரணமான தென்னந்தோட்ட நிலமுண்டு இதனை பெரியபுலவு என்றும், ஐயா தோட்டம் என்றும் இக்கிராம மக்கள் கூறுவர். நகரசபைத் தலைவியாக இருந்த சரஸ்வதி சுவாமிநாதன் அவர்கள் குடும்பத்தினருக்கும், நகரப்பகுதியில் இருந்த டாக்டர் அருள்ராமலிங்கம் குடும்பத்தினருக்கும் சாம்பல்தீவு சந்தியில் இருந்து சற்று தொலைவில் சாம்பல்தீவினுள் செல்லும் பிரதான வீதியைச்சார்ந்து தென்னந்தோட்டநிலம் இருந்தது. இந்நிலப்பகுதிகளைச் சார்ந்து ஒரு பெரிய நெல்நிலப்பரப்பு திருக்கோணமலையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.நேமிநாதன் அவர்களின் குடும்பத்திற்குரியதாக உள்ளது.

ஆத்திமோட்டைப் பகுதியிலும் சில வயல்நிலங்களும், குடியிருப்பு நிலங்களும் நகரப்பகுதி மக்களுக்கு உரியதாகவுள்ளது. கரச்சியை சார்ந்து ஒரு பெரிய நிலப்பரப்பு ஜெகநாதன் கம்பனி உரிமையாளருக்கு உரியதாக இருந்தது. இவற்றைவிட ஆங்காங்கே பல இடங்களிலும் நகரப்பகுதி மக்களுக்கு தென்னைப்பயிர்ச் செய்கை நிலமும் வயல் நிலங்களும் உண்டு. நகரப்பகுதி மக்கள் பலர் இக்கிராமத்தில் நிலம் வாங்கி குடியிருந்த நிலையும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம்

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மெதடிஸ்தமிஷன் எனப்படும் சமயநிறுவனத்தினால் திருகோணமலை மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் பாடசாலைகள் அமைக்கப்பட்டு கல்வி புகட்டப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றே சாம்பல்தீவு மகாவித்தியாலயமும் ஆகும். இப்பாடசாலையானது சாம்பல்தீவு சந்தியிலிருந்து $1^1/_2$ கிலோமீற்றர் தொலைவில் பிரதானவீதி ஓரமாக செம்பாடு என்னும் பகுதியைச்சார்ந்து அமைந்துள்ளது. இப்பாடசாலை 1880 ஆண்டில் ஓலைக்கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 50 இற்கும் குறைவான பிள்ளைகளே இப்பாடசாலையில் கல்விகற்றனர். பின் இப்பாடசாலை படிப்படியாக உயர்வடைந்து மகாவித்தியாலயம் என்னும் தரத்தை அடைந்து 1C தரப்பாடசாலையாக விளங்குகின்றது. அதாவது க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவுவரை கொண்ட பாடசாலையாக விளங்குகின்றது. மெதடிஸ்த மிஷனுக்குரிய பாடசாலையாக இருந்த இப்பாடசாலையை 1960 ஆண்டு அரசு பொறுப்பேற்றுக்கொண்டது. 1970 ஆண்டளவில் இப்பாடசாலையில் க.பொ.த சாதாரணதரம் ஆரம்பிக்கப்பட்டது. 01.02.1977இல் இருந்து இப்பாடசாலை மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது.

இப்பாடசாலையில் கணனி கற்கைநிலையம், பல்லூடக நிலையம், நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடம், சமூக கற்கை நிலையம், சிறிய மைதானம் ஒன்று கூடல் மண்டபம், சரஸ்வதி ஆலயம் ஆகிய வசதிகள் உண்டு. மாணவர் பாடவிதான செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர். 2014 இல் 05 மாணவர்களும் 2015 இல் 06 மாணவர்களும் உதவிமானியம் பெறும் மாணவர்களாக சித்தியடைந்துள்ளனர். க.பொ.த சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல மாணவர்கள் க.பொ.த. உயர்தரத்திற்குச் செல்கின்றனர். உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கும் செல்கின்றனர்.

இப்பாடசாலை பல சிறந்த கல்விமான்களை உருவாக்கியுள்ளது. இங்கு கற்றவர்கள் பலர் உயர் தரவகுப்புக்களில் நகரப்பகுதி பாடசாலைகளில் இணைந்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் சென்று பட்டதாரிகளாகவும், டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும் உருவாகியுள்ளனர். க.பொ.த உயர் தரம், கல்வியியற்கல்லூரி டிப்ளோமா ஆகிய தகுதியுடனும் பல பழைய மாணவர்கள் சிறந்த தொழில்களில் உள்ளனர். ஆசிரிய சேவையில் இணைந்த சிலர் அதிபர்சேவை தரம் பெற்றும் உள்ளனர். இவ்வாறான ஒரு சிறந்த பழைய மாணவர் பரம்பரையை இப்பாடசாலை கொண்டுள்ளது. இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர் ஈடுபடுத்தப்படுகின்றனர். விளையாட்டுப்போட்டி, தமிழ்மொழித்தினம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலதினம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி வலயமட்டவெற்றிகளையும் பெற்றுள்ளனர். கீழ்வருவோர் இப்பாடசாலையில் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.

1. திரு.S.கணபதிப்பிள்ளை
2. திரு.S.சின்னத்தம்பி - 1910 - 1930
3. திரு.N.காசிநாதர் - 1934 - 1935
4. திரு.D. V.கந்தவனம் - 1935 - 1936
5. திரு.K.கெஜரட்ணம் - 1936 - 1940
6. திரு.J.ஜோன் முத்தையா 1941 - 1948
7. திரு.S.K.செல்வநயினார் - 1949 - 1955
8. திரு.S.கந்தையா - 1956 - 1959
9. திரு.D.V.கந்தவனம் - 1960 - 1963
10. திருமதி.S.காசிநாதர் - 1964 - 1965
11. திரு.V.குமாரசாமி - 1966 - 1968
12. திரு.P.பொன்னையா - 1969 - 1970
13. திரு.S.தம்பிப்பிள்ளை - 1970 - 1971
14. திரு.K.வேலுப்பிள்ளை - 1972 - 1976
15. திரு.S.செல்லத்துரை - 1977 - 1990
16. திரு.S.சிவப்பிரகாசம் - 1990 - 1996
17. திரு.T.சிதம்பரப்பிள்ளை - 1997 - 2003
18. திரு.K.யோகானந்தன் - 2004 - 2010
19. திரு.V.மகேஸ்வரன் - 2010 - 2013
20. திருமதி.உதயரட்ணம் - 2013 - 2016

திருமதி.M.M.கொட்பிரி அவர்கள் இப்பாடசாலையில் பிரதி அதிபராக கடமையாற்றி வருகின்றார்.

இக்கிராமத்தில் அமைந்துள்ள மூன்று பாடசாலைகளிலிருந்தும் தரம் 5, தரம் 11 ஆகிய வகுப்புக்களுக்குரிய அரச பரீட்சைகளின் பொருட்டு மாணவர்கள் நகரப்பகுதி பாடசாலைக்குச் செல்ல வேண்டியிருந்தது. இச்சிரமத்தை போக்கும் பொருட்டு இப்பாடசாலை 2004ஆம் ஆண்டு முதல் தரம் 5, தரம் 11 ஆகியவற்றின் பொதுப்பரீட்சைக்குரிய நிலையமாக கல்வித்திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்லி அம்பாள் மகாவித்தியாலயம்

இப்பாடசாலை சல்லிப்பகுதியில் கடற்கரையிலிருந்து 1/2 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. சல்லிப்பகுதியில் மக்கள் 19ஆம் நூற்றாண்டில் இருந்து வாழ்ந்து வந்தாலும் 20ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இருந்தே இங்கு ஒரு பாடசாலை இயங்கத்தொடங்கியது. அதுவரை இப்பகுதி மக்கள் சாம்பல்தீவு பாடசாலையிலேயே கல்வி கற்று வந்தனர்.

சல்லிப்பகுதிமக்களின் கல்வித்தேவை கருதி 1949ஆண்டு 7ஆம் மாதம் 1ஆம் திகதி வடிவேல்முத்து என்பவருக்குச் சொந்தமான காணியில் தற்காலிக கட்டிடத்தில் சல்லி அரசினர் பாடசாலை என்னும் பெயரில் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. திரு.ச.செல்வநாயகம் அவர்கள் முதலாவது அதிபராக கடமையாற்றினார். பின்பு மாணவர் தொகை அதிகரிக்கவும், நிரந்தர கட்டிடங்கள் அமைக்கவேண்டிய தேவை ஏற்படவும் நிரந்தரமான காணி இப்பாடசாலைக்குத் தேவைப்பட்டது. இக்கிராமத்தைச்சேரந்த செல்வந்தரான கார்த்திகேசு இரட்ணசபாபதிப்பிள்ளை அவர்கள் தற்போதைய பாடசாலை அமைந்துள்ள காணியை நன்கொடையாக வழங்கினார். 1959ஆம் ஆண்டிலிருந்து அவரால் வழங்கப்பட்ட காணியில் தற்போதைய பாடசாலை இயங்கி வருகின்றது.

சிறியதொரு பாடசாலையாக ஓலைக் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைந்து 1C தரப்பாடசாலையாக க.பொ.த உயர்தர கலைப்பிரிவுவரை வகுப்புக்களைக் கொண்டதாக தி/சல்லி அம்பாள் மகாவித்தியாலயமாக விளங்குகின்றது. 25.08.2001 அன்று இப்பாடசாலையில் க.பொ.த உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டது. 01.06.2002 அன்று இப்பாடசாலை மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது.

கல்விச்செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பல மாணவர்கள் சித்தியடைந்து உதவிமானியத்தையும் பெறுகின்றனர். க.பொ.த சாதாரண தரத்திலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று க.பொ.த உயர்தரத்திலும் பலர் இணைகின்றனர். க.பொ.த உயர்தரம் சித்தியடைந்து பல்கலைக்கழகங்களுக்கும், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிக்கும் செல்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழித்தினம், ஆங்கிலமொழித்தினம், விளையாட்டுபோட்டி சமூக விஞ்ஞான போட்டி, புத்தாக்கப் போட்டி என்பவற்றில் மாணவர்கள் பங்கு கொண்டு வெற்றிகளையும் ஈட்டியுள்ளனர். இப்போட்டிகளில் சிலவற்றில் வலயமட்டத்திலும் சிலவற்றில் மாகாணமட்டத்திலும் சிலவற்றில் தேசிய மட்டத்திலும் வெற்றியீட்டியுள்ளனர்.

இப்பாடசாலையில் 328 மாணவர்கள் கற்கின்றனர். 21 ஆசிரியர்களும் 02 கல்வி சாரா ஊழியர்களும் கடமையாற்றுகின்றனர். பாண்ட் வாத்தியக்குழு, சாரணிய அணி, மாணவ மன்றங்கள் என்பவையும் இப்பாடசாலையில் இயங்குகின்றன. வெவ்வேறு விடயங்களுக்குமான 13 மாணவமன்றங்கள் இங்கு இயங்குகின்றன. நூலகம், சிறிய மைதானம் ஆகிய வசதிகளையும் இப்பாடசாலை கொண்டுள்ளது. கீழ்வருவோர் இப்பாடசாலையில் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.

1. திருமதி.ப.பிள்ளைநார் - 1959 - 1970
2. திரு.S.இரத்தினவேலு - 1970 - 1972
3. திரு.செ.சின்னரெத்தினம் 1972 - 1974
4. திரு.வீ.அருளம்பலம் - 1974 - 1975
5. திரு.மா.பாலசுந்தரம் - 1975 - 1979
6. திரு.சி.வைகுந்தசாமி - 1979
7. திரு.தா.பி.சுப்பிரமணியம் 1979 - 1980
8. திரு.சி.ஜோசப் - 1980
9. திரு.க.சி.நடராசா - 1980 - 1986
10. திரு.வே.இராசதுரை - 1986 - 1989
11. திரு.பி.சுப்பிரமணியம் - 1989 - 1995
12. திரு.க.சந்தியாப்பிள்ளை 1995 - 1997
13. திரு.க.தருமரெட்ணமுதலி 1997 - 1999
14. திரு.வே.ஸ்ரீகந்தராசா - 1999 - 2008
15. திரு.நா.வசீகரன் (பதில் அதிபர்) 2008 - 2010
16. திரு.இ.கருணாகரன் - 2010 - 2012
17. திருமதி.த.ரமணன் (பதில் அதிபர்) 2012 - 2013
18. திரு.ந.பரமேஸ்வரன் - 2013 இல் இருந்து இன்றுவரை

திரு.த.விஜயராஜேந்திரன் அவர்கள் தற்போது இப்பாடசாலையின் பிரதி அதிபராக கடமையாற்றி வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திமோட்டை அரசினர் தமிழ்கலவன் பாடசாலை

ஆத்திமோட்டைப்பகுதிக்கு மக்கள் குடியேறியதன் பின்பு அப்பகுதிக்கு ஒரு பாடசாலை தேவை என்னும் நிலை ஏற்பட்டபது. அதன் விளைவாக 05.06.1961 அன்று இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. திருகோணமலை புல்மோட்டை வீதியில் இருந்து 300 மீற்றர் உள்நோக்கி ஆத்திமோட்டைப் பகுதியில் இப்பாடசாலை அமைந்துள்ளது. அப்போதைய சாம்பல்தீவு கிராமசபைத்தலைவராக இருந்த வ.நா.தம்பிராசா, கிராமசபை உறுப்பினராக இருந்த றே.கோபால், கிராமத்தின் படித்த இளைஞர்களாக இருந்த திரு.வ.தங்கவேல், திரு.வே.இராசதுரை, வ.புஸ்பதேவி, இ.செல்வநாச்சியார் ஆகியோர் இப்பாடசாலை தோற்றம் பெறுவதற்குரிய முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். கல்வித்திணைக்களத்தின் சார்பாக அப்போதைய பாடசாலைப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு.ராஜா அவர்கள் ஒத்துழைப்பினை வழங்கினார்.

இப்பாடசாலை ஆத்திமோட்டைப்பகுதியில் அரசகாணியில் ஒரு ஓலைக் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டது. கிராமசபைத் தலைவர் வ.நா.தம்பிராசா அவர்கள் பாடசாலையை திறந்து வைத்தார். திரு.வ.தங்கவேல், வே.இராசதுரை, இ.செல்வநாச்சியார், வ.புஸ்பதேவி ஆகியோர் ஆரம்பகால ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். இவர்கள் ஆரம்பத்தில் தொண்டராசிரியர்களாகவே கடமையாற்றினர். பின் இவர்கள் அரசசேவைக்கு உள்வாங்கப்பட்டனர். இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்களின் பின்பு ஐ.துரைராசசிங்கம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரே இப்பாடசாலையின் முதலாவது அதிபராவார். இவர் பின் நாளில் திருகோணமலை கல்வி அலுவலகத்தில் வட்டாரக்கல்வி அதிகாரியாகக் கடமையாற்றினார்.

இப்பாடசாலை அமைக்கப்பட்டகாணி ஒரு தாழ்ந்தபகுதியாகவும் மேடும், பள்ளமும் கொண்டதாகவும் காணப்பட்டது. குன்று குழிகளை நிரப்பி பாடசாலைக்காணியை நல்ல நிலைக்கு உருவாக்குவதற்கு, அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் ஆகியோர் கடுமையாக உழைக்கவேண்டியிருந்தது. காணியை விருத்திசெய்யும் தொழில்பாட்டில் கல்வித்திணைக்களத்தின் பங்களிப்பு இன்மையால் பாடசாலையைச் சார்ந்தவர்களே கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. ஒரு சில நாளில் இயந்திரத்தின் மூலம் காணியை மட்டப்படுத்தி ஒரு சில நாளில் மண் நிரப்பி காணிகளை விருத்தி செய்யக்கூடிய வசதி அப்போது இல்லை. அதனால் பலகாலம் முயற்சி செய்து மனிதவலு மூலம் ஆரம்பகாலத்தில் விருத்தி செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அமைந்துள்ள பகுதியில் ஆரம்ப காலத்தில் சரியான வீதி அமைப்பும், வடிகாலமைப்பும் இல்லாமையால் பிள்ளைகளதும், ஆசிரியர்களதும் காலணிகளையும் சிறிய மாணவர்களையும் வெள்ளம் இழுத்துச்செல்லும் நிலை பாடசாலையின் அயற்பகுதிகளில் காணப்பட்டது. பாடசாலைக் காணியிலும் மழைக்காலத்தில் வெள்ளம் நிறைந்து காணப்படும். இத்தகைய இடர்களை வெற்றிகொள்ள வேண்டியவர்களாக ஆரம்பகாலத்தில் இப்பாடசாலைச் சமூகம் காணப்பட்டது.

ஆரம்பக்கல்வியை வழங்கும் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இப்போது இடை நிலைக்கல்வியையும் வழங்கும் பாடசாலையாக வளர்ச்சிபெற்று க.பொ.த. சாதாரண தரம்வரையில் வகுப்புக்களைக் கொண்ட தரம் 2 (Type II) பாடசாலையாக இயங்குகின்றது. தற்போது இப்பாடசாலையில் 335 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 15 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இங்கு விளையாட்டு மைதானம், செயற்பாட்டு அறை, விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம் ஆகிய வசதிகளும் உண்டு. 2014ஆம் ஆண்டில் 22 மாணவர்கள் க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றினர். இவர்களில் 09 மாணவர்கள் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதிபெற்று சென்றுள்ளனர். 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையிலும் பல மாணவர்கள் சித்தயடைந்து. புலமைப்பரிசில் நிதியையும் பெறுகின்றனர். இணைப்பாட விதான செயற்ாடுகளிலும் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். சமூக விஞ்ஞானப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் இப்பாடசாலை மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். கீழ் குறிப்பிடப்படுவோர் இப்பாடசாலையில் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.

திரு.ஐ.துரைராஜசிங்கம்
திரு.செல்லத்துரை
திரு.க.ஜெபரத்தினம்
திரு.N.திருச்செல்வம்
திரு.சோ.சச்சிதானந்தம்

தற்போது திருமதி.S.ஜோன்தேவதாஸ் அவர்கள் அதிபராகவும் திரு.N.சித்திரவேல். பிரதி அதிபராகவும் கடமையாற்றுகின்றனர். திருமதி.க.லக்ஷ்மிப்பிள்ளை, திரு.சி.ஜெயதரன் ஆகியோர் பதில் அதிபர்களாக சிலகாலம் கடமையாற்றியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுக்குப்பார் பால்டேயஸ் இறையியல் கல்லூரி

இக்கல்லூரி அடுக்குப்பாரில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. திருமலை நகரப்பகுதியில் 2000 ஆண்டில் இருந்து இயங்கி வந்த இக்கல்லூரி 2008 ஆண்டிலிருந்து இங்கு இயங்கிவருகின்றது. நகரப்பகுதியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நிலத்தில் இக்கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரி றோமன் கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த (Non RC) போதகர்கள் சிலரைக்கொண்ட ஒரு குழுவினரால் ஆரம்பிக்கப்பட்டு நிருவகிக்கப்படுகின்றது. இக்கல்லூரியில் இறையியல் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறி (Certificate Course), டிப்ளோமா பயிற்சி நெறி, பட்டப்படிப்பு நெறி (B.TH) ஆகிய பயிற்சி நெறிகள் நடாத்தப்படுகின்றன.

இக்கல்லூரியில் தற்போது 17 மாணவர்கள் கற்கின்றனர். 04 பேர் விரிவுரையாளர்களாக கடமையாற்றுகின்றனர். மேலும் 02 விரிவுரையாளர்கள். 03 மாத்திற்கு ஒரு தடவை வெளிநாட்டிலிருந்து வந்து கடமையாற்றுகின்றனர். இக்கல்லூரியானது, வகுப்பறைகள், மாணவர் விடுதி, நூலகம், நிருவாக அலுவலகம், உத்தியோகத்தர்கள் விடுதி, விளையாட்டு தைானம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. வெளிநாட்டைச் சேர்ந்த சமயம் சார்ந்த நிறுவனங்கள் சிலவற்றின் நிதிப்பங்களிப்புடனேயே இக்கல்லூரி இயங்குகின்றது. கல்லூரி விடுமுறைக்காலங்களில் கல்லூரியின் வசதிகள் கிறிஸ்தவ ஆலயங்களினால் நடாத்தப்படும் பயிற்சிகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு அதன்மூலம் பெறப்படும் பணமும் கல்லூரியின் செலவிற்காக பயன்படுத்தப்படுகின்றது.

இக்கல்லூரியில் ஆண், பெண் இருபாலாரும் கற்கின்றனர். இக்கல்லூரியில் சேர்வதற்குரிய விண்ணப்பங்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்து கிறிஸ்தவ தேவாலயங்கள் மூலம் பெறப்படுகின்றது. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர்முகப்பரீட்சையும் நடாத்தப்பட்டு மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். கட்டணங்கள் எதுவும் அறவிடப்படாமல் இலவசக்கல்வி முறையிலேயே இங்கு கல்வி வழங்கப்படுகின்றது. திரு.குத்தின் மனோகரன் என்பவர் இக்கல்லூரியில் அதிபராக கடமையாற்றுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டட தொழிற்பயிற்சி நிலையம்

இக்கல்லூரி அடுக்குப்பாரில் இறையியல் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. 2008ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 16 மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர். இங்கு மேசன் தொழிற்பயிற்சி, தச்சுத்தொழிற்பயிற்சி என்பவை நடாத்தப்படுகின்றன. இவை இரண்டாண்டு காலப் பயிற்சி நெறியாகும். ஆண்கள் மட்டும் இப்பயிற்சி நெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இலங்கையின் எல்லாப்பாகங்களிலிருந்தும் பயிற்சிக்கு இளைஞர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். கிறிஸ்தவ தேவாலயங்கள் மூலமாகவும் பிரதேச செயலகங்கள் மூலமாகவும் விண்ணப்பப்படிவங்கள் திரட்டப்பட்டு பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இக்கல்லூரி தனியார் நிருவாகசபையொன்றினால் இயக்கப்படுகின்றது. உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரஜைகள் இந்நிருவாகசபையில் உறுப்பினராகவுள்ளனர். இங்கு நடாத்தப்படும் பயிற்சி நெறிகள் ஆங்கிலமொழியில் நடாத்தப்படுகின்றன. 03 போதனாசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். க.பொ.த சாதாரணதரம்வரை கல்விகற்றவர்களே இக்கல்லூரிக்கு சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இலங்கை கம்பனிச்சட்டத்தின் கீழ்பதிவு செய்யப்பட்டு, மூன்றாம் நிலை கல்வி, தொழில்கல்வி, ஆணைக்குழுவிலும் பதிவு செய்யப்பட்டு இயங்குகின்றது. சுவிஸ் அலையன்ஸ் கொமிசன் (Swiss Allance Commission) எனப்படும் வெளிநாட்டு நிறுவனமே இக்கல்லூரிக்கு நிதியுதவி செய்கின்றது. மாணவர்களுக்கு கல்வி, தங்குமிடவசதி உணவு ஆகிய அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகின்றது. இனமத வேறுபாட்டின்றி மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆத்திமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை



சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம்




சல்லி அம்பாள் மகாவித்தியாலயம்




கட்டட தொழிற்பயிற்சி நிலையம்



அடுக்குப்பார் பால்டேயஸ் இறையியல் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுக்குப்பார் மீன்வளர்ப்பு நிலையம்

அடுக்குப்பாரில் இறையியல் கல்லூரிக்கு அண்மையாக கடற்கரை ஓரத்தில் ஒரு மீன்வளர்ப்பு நிலையம் அமைந்துள்ளது. நான்கு பேர் பங்காளர்களாக இருந்து இவ் மீன்வளர்ப்பு நிலையத்தை இயக்குகின்றனர். Ocean Impact (ஓசன் இம்பக்ட்) என்னும் கம்பனியின் கீழ் இந்நிலையம் இயங்குகிறது. இந்நிலையத்தின் துணை நிலையம் ஒன்று திருக்கோணமலையில் கொட்பே பகுதியில் இயங்குகின்றது. 04 ஆண்டுகளுக்கு முன்பு இந்நிலையம் இப்பகுதியில் அமைக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் இருந்து கொண்டுவரப்படும் மீன்குஞ்சுகள் இந்நிலையத்தில் கடல்நீர் நிரப்பப்பட்ட தொட்டிகளில் சிறிது காலம் வளர்க்கப்படுகின்றன. 50 - 60 கிராம் நிறை வரை இம் மீன்குஞ்சுகள் வளர்ந்ததும் அவை கொட்பே நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு கடலில் அமைக்கப்பட்ட கூடுகளில் வளர்க்கப்படுகின்றன. 05 கிலோ கிராம் வரையில் இம்மீன்கள் வளர்ந்ததும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உதவியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர், பாதுகாப்பு உத்தியோகத்தர் உட்பட 5 பேர் இந்நிலையத்தில் கடமையாற்றுகின்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தலைவர்கள்

தற்போது கிராமங்களின் நிருவாகம் பிரதேசசபைகளின் கீழ் உள்ளது. கிராமங்கள் பிரதேசசபையின் பகுதிகளாக உள்ளன. முன்பு கிராமங்கள் ஒவ்வொன்றும் கிராமசபை என்னும் தனியான நிருவாக பிரிவின்கீழ் இருந்தன. சாம்பல்தீவும் தனியான ஒரு கிராமசபை நிருவாகத்தின்கீழ் இருந்தது. இது சாம்பல்தீவு கிராமசபை எனப்பட்டது. கிராமசபைகள் தமது வட்டாரப் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். உறுப்பினர்களில் இருந்து ஒருவர் கிராமசபை தலைவராக தெரிவுசெய்யப்பட்டு தொழிற்படுவார். 1975ஆம் ஆண்டுடன் கிராமசபை முறை ஒழிக்கப்பட்டது. கிராமசபை முறை ஒழிக்கப்படும்வரை இங்கு 08 பேர் கிராமசபை தலைவர்களாக கடமையாற்றியுள்ளனர்.

**க.முருகேசு : 1932 – 1950**

இவரது முழுப்பெயர் கந்தர் முருகேசு யாழ்ப்பாணம் சாவகச்சேரிப்பகுதியின் சரசாலைக்கிராமத்தில் பிறந்தவர். சாம்பல்தீவில் ஆத்தடி எனப்படும் 7ஆம் வட்டாரத்தில் வாழ்ந்தவர். கள்ளுக்கடை, சாராயக்கட்டை ஆகிய மதுபானக்கடைகளை குத்தகைக்கு எடுத்து நடாத்தும் வர்த்தகராக இருந்தார். 1932ஆம் ஆண்டு தொடக்கம் 1950ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் கிராம சபைத்தலைவராக 18 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். தான் கடமையாற்றிய காலத்தில் கிராமத்தின் எல்லாப்பகுதிக்கும் மாட்டுவண்டியில் சென்று மக்களுக்காகச் சேவையாற்றினார். இவர் தனது 91வயதில் காலமானார். இவரது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இக்கிராமத்தில் வாழ்கின்றனர்.

**க.கோணாமலை : 1951 – 1955**

இவரது முழுப்பெயர் கந்தையா கோணாமலை. 1901ஆம் ஆண்டில் பிறந்தார். சாம்பல்தீவு 07ஆம் வட்டாரத்தில் ஆத்தடிப்பகுதியில் வாழ்ந்தவர். விவசாயத்தை தொழிலாகக் கொண்டிருந்தார். 1971ஆம் ஆண்டில் காலமானார். இவரது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சாம்பல்தீவிலும் நகரப்பகுதியிலும் வாழ்கின்றனர். நகரத்தில் வாழும் இவரது மகன் ஒருவரின் மகள் கல்விநிருவாகசேவையில் சித்தியடைந்து திருக்கோணமலை வலயக்கல்வி அலுவலகத்தில் திட்டமிடல் உதவிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.

**சி.மயில்வாகனம் : 1956 – 1960**

இவர் சாம்பல்தீவு கிராமத்தில் பிறந்து 6ஆம் வட்டாரத்தில் வாழ்ந்தவர். விவசாயம், விலங்கு வளர்ப்பு என்பவற்றை தொழிலாகக்கொண்டிருந்தார். 1956 - 1960 காலப்பகுதியில் கிராமசபையின் தலைவராக கடமையாற்றினார். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி, கடமை உணர்வு, உண்மை என்பவற்றை பின்பற்றி தனது கடமையைச் செய்தவர். இவர் 10 பிள்ளைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாவார். இவரது பிள்ளைகளில் பலர் ஆசிரியர்களாக கடமையாற்றினர். இவரது மகன் திரு.இராசதுரை அவர்கள் திருக்கோணமலை கல்வி வலயத்தில் விவசாயத்திற்கான உதவிக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றார். பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சாம்பல்தீவிலும், நகரத்திலும் வாழ்கின்றனர். பேரப்பிள்ளைகளும் பலர் பட்டப்படிப்பை முடித்துள்ளனர். பேரன் ஒருவர் பொறியிலளாராகி வெளிநாட்டில் கடமையாற்றுகின்றார்.

**வ.நா.தம்பிராசா : 1960 – 1965**

இவரது முழுப்பெயர் நாகமணி தம்பிராசா. இவரது பெற்றோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இவர் சாம்பல்தீவ செம்பாடு என்னும்பகுதியில் 05.06.1927இல் பிறந்தார். சிறிய வயதில் தனது பெற்றோரை இழந்தமையால் தனது மாமா, மாமியுடன் சாம்பல்தீவு 5ஆம் வட்டாரத்தில் இருந்துவளர்ந்து, திருமணத்தின் பின்பும் 5ஆம் வட்டாரத்திலேயே வாழ்ந்தவர். தொழில் ரீதியாக இவர் ஒரு தோட்ட மேற்பார்வையாளர். இவரது தந்தை மேற்பார்வையாளராக கடமையாற்றிய 144 ஏக்கர் விஸ்தீரணமுடைய "பாலச்சந்திரன் எஸ்டேட்" எனப்படும் தென்னந்தோட்டத்தில் தந்தையாருக்கு பின்பு 32 ஆண்டுகள் மேற்பார்வையாளராக கடமையாற்றினார். 1960 - 195 காலப்பகுதியில் கிராமசபைத் தலைவராக பணியாற்றினார்.

இவர் கிராமசபைத் தலைவராக இருந்தபோது வீதிகளைப் புனரமைத்தல், பாடசாலை அமைத்தல் வட்டாரங்கள் தோறும் குடிநீருக்காக பொதுக்கிணறுகள் அமைத்தல், நூலகம் அமைத்தல், வைத்தியசாலை அமைத்தல், வீதிவிளக்குகளை (மண்ணெண்ணெய் விளக்குகள்) பொருத்துதல் போன்ற கிராமத்தின் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டார். 1964ஆம் ஆண்டு மார்கழியில் இக்கிராமத்தை சூறாவளி தாக்கியபோது கிராமத்தில் பாரிய அழிவு ஏற்பட்டது. அப்போது கிராமத்தின் இளைஞர்களை ஒன்றுதிரட்டி புனரமைப்புப்பணியில் தீவிரமாக ஈடுபட்டார். சாம்பல்தீவிலும், அயற்பகுதியிலும் காணப்பட்ட கல்வெட்டுக்களை தேடிக்கண்டறிந்து கல்வெட்டு ஆராய்ச்சிக்கு பெரிதும் உதவினார். கிராமசபை தலைவர் பதவி முடிவடைந்ததன்பின்பு 1966 - 1975 காலப்பகுதியில் கிராமசபையின் உறுப்பினராக இருந்தார். அப்போதும் கிராமத்திற்காக பல சேவைகளையும் செய்தார். தமிழரசுக்கட்சியின் தீவிர ஆதரவாளர். 1961ஆம் ஆண்டில் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு 6 மாதம் சிறையிலும் இருந்தார்.

இவரது பிள்ளைகள் பலர் அரசசேவையில் கடமையாற்றுகின்றனர். இவரது மகன் விஜயராஜேந்திரன் சல்லியம்பாள் மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றுவதுடன் கிராமத்திற்கான சமூகசேவையிலும் ஈடுபட்டு வருகின்றார். திரு.தம்பிராசா அவர்களின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சாம்பல்தீவு கிராமத்திலும் நகரத்திலும் வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ.தங்கராசா : 1966 – 1970**

இவரது முழுப்பெயர் இரட்ணசபாபதிப்பிள்ளை தங்கராசா சல்லியில் 2ஆம் வட்டாரத்தில் வாழ்ந்தவர். சல்லிப்பகுதியில் பிரபலமானவரும் செல்வந்தருமான இரட்ணசபாபதிப்பிள்ளையின் மூத்தபுல்வராவார். 1966 - 1970 காலப்பகுதியில் கிராமசபைத் தலைவராகக் கடமையாற்றி கிராமத்திற்கு பலசேவைகளை வழங்கினார்.

விவசாயத்தையே தொழிலாக கொண்டிருந்தார் சல்லிக்கல் வர்த்தகத்திலும் ஈடுபட்டார். சாம்பல்தீவின் சிறுபிட்டி, சாளம்பமோட்டை ஆகிய பகுதிகளில் நெற்செய்கையில் ஈடுபட்டார். அத்துடன் இவருக்கு தென்னந்தோட்டங்களும் இருந்தன. இவர் 09 பிள்ளைகளின் தந்தையாவார். இவரது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சல்லிப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர்.

**க.வேலாயுதம் : 1971 – 1975**

இவரது முழுப்பெயர் கந்தையா வேலாயுதம் 23.12.1929 இல் யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் பிறந்தவர். சாம்பல்தீவு 03ஆம் வட்டாரத்தில் வாழ்ந்தவர். சாம்பல்தீவு மகாவித்தியாலத்தில் கல்வி கற்றவர். தனது 07 வயதிலே தாய் தந்தையரை இழந்தமையினால் தனது சகோதரி பாக்கியம் என்பவருடன் இருந்து வளர்ந்தார். 1971 - 1975 காலப்பகுதியில் கிராமசபைத்தலைவராகப் பணியாற்றினார். இக்காலத்தில் சாம்பல்தீவின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். சாம்பல்தீவு பாடசாலையை மகாவித்தியாலயமாக்குவதற்காக பாடுபட்டார். சாம்பல்தீவு மக்களை ஒன்றுதிரட்டி பல சிரமதானப்பணிகளைச் செய்ததுடன், பல்வேறு செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். இவரது காலத்திலேயே சாம்பல்தீவிற்கு மின்சாரவசதி கிடைத்தது. மின்சார கம்பிகளைப் பொருத்துவதற்கு வீதியின் ஒருபுறத்தில் இருந்த மரங்களை வெட்டித்துப்பரவு செய்யவேண்டியிருந்தது. மக்களை ஒன்றுதிரட்டி பாரிய சிரமதானப்பணியொன்றின் மூலம் ஒரு நாளிலேயே சாம்பல்தீவு சந்தியில் இருந்து கேணியடிச்சந்திவரையான 02 கிலோமீற்றர் தூரத்தை துப்பரவு செய்து கொடுத்தார்.

1952ஆம் ஆண்டிலிருந்து அரசியலில் ஈடுபட்டுவந்தார். தமிழரசுக்கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணி என்பவற்றின் தீவிர ஆதரவாளராவார். தமிழர் விடுதலைக்கூட்டணியின் சாம்பல்தீவு கிளைத்தலைவராகவும், மாவட்டக்கிளையினுடைய உபதலைவராகவும் கடமையாற்றினார். அத்துடன் மாங்கணாய் மாரியம்மன் ஆலயத்தின் பரிபாலன சபைத்தலைவர் (1990 - 1995) சாம்பல்தீவு மகாவித்தியாலத்தின் பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர், ஆத்திமோட்டைப்பகுதியின் கிராம அபிவிருத்திச்சபையின் தலைவர் ஆகிய பொறுப்புக்களிலிருந்தும் கடமையாற்றினார். இவருக்கு இரண்டு புதல்வர்கள், மூத்தவர் கும்புறுபிட்டியில் "ஜேர்மன் குரல்" நிறுவனத்தில் கடமையாற்றிய போது இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போனார். இளையமகன் யுத்தத்தின் காரணமாக நகரப்பகுதிக்கு இடம்பெயர்ந்து வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றார். இறுதிக்காலத்தில் தனது மகனுடன் வாழ்ந்து 24.02.2005 அன்று காலமானார். அவரது பூதவுடல் அவர் வளர்ந்த, அவர் சேவையாற்றிய, அவர் நேசித்த கிராமமான சாம்பல்தீவு கிராமத்தின் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமோதய சபைத்தலைவர்கள்

1976இல் கிராமசபை முறை ஒழிக்கப்பட்டு கிராமோதயசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சபை முன்னைய கிராமசபைபோல் அல்லாது ஒரு சிலரைக்கொண்டு இயங்கியது. இதற்கு தலைவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இருவர் இச்சபையின் தலைவர்களாக வெவ்வேறு காலத்தால் செயற்பட்டுள்ளனர்.

### 1. திரு.வ.சண்முகராசா

இவரது முழுப்பெயர் வல்லிபுரம் சண்முகரசா, சாம்பல்தீவு 7ஆம் வட்டாரத்தில் ஆத்தடிப்பகுதியில் பிறந்து வளர்ந்தவர். பின்பு 5ஆம் வட்டாரத்தில் வாழ்ந்தவர். ஆசிரியராக தொழிலில் இணைந்து பின் விவசாய விஞ்ஞான பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றியவர். இவர் அகாலமரணமடைந்தார். இவரது பிள்ளைகள் ஒரு மகனும் ஒரு மகளும் இவர்கள் இருவரும் இவரது மனைவியும் தற்போது கனடாவில் வாழ்ந்து வருகின்றனர்.

### ௨. திரு.வே.நாகேந்திரம்

இவரது முழுப்பெயர் வேலுப்பிள்ளை நாகேந்திரம் திரு.சண்முகராசா அவர்களின் மறைவின் பின்பு கிராமோதயசபை தலைவராக கடமையாற்றினார். இவர் அரச நிலஅளவையாளராக கடமையாற்றியவர். இவர் சாம்பல்தீவு 6ஆம் வட்டாரத்தில் பிறந்து அங்கேயே வாழ்ந்தவர். சாம்பல்தீவு மாரியம்மன் ஆலயத்தின் பரிபாலனசபைத் தலைவராகவும் கடமையாற்றியவர். இவரது பிள்ளைகள் ஒரு மகனும், ஒரு மகளும், மகன் டாக்டராகவும், மகள் பொறியியலாளராகவும் கடமையாற்றுகின்றனர். இவர்கள் இருவரும் திருமலை நகரத்தில் வாழ்கின்றனர்.

### திரு.காந்தரூபன் – பிரதேச சபைத்தலைவர்

சல்லி 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தங்கவேலாயுதம் காந்தரூபன் அவர்கள் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபையின் தலைவராக 2006 - 2010 காலப்பகுதியில் கடமையாற்றினார். சாம்பல்தீவையும் மேலும் பல கிராமங்களையும் உள்ளடக்கிய 27 கிராமசேவகர் பிரிவுகளைக்கொண்டுள்ள ஒரு பிரதேசத்தை நிருவகிக்கின்ற பாரிய பொறுப்பைக் கொண்ட ஒரு பிரதேச சபையின் தலைவராக இருந்த இக்கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் என்னும் வரலாற்றைப்பெறுகின்றார்.

இவர் 05.12.1976 இல் பிறந்தார். சல்லி அம்பாள் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக்கல்வியை பெற்றார். யுத்த சூழ்நிலை காரணமாக 1990ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து சென்று அங்கு பெங்களூரில் கல்வி கற்றார். கடற்தொழிலை தனது சொந்தத் தொழிலாகக் கொண்டிருந்தார். தற்போது கடற்தொழிலுக்கான உபகரணங்களை விற்பனை செய்யும் ஒரு நிலையத்தை சல்லியில் நடாத்தி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பிரதேசசபைத்தலைவராக இருந்த காலத்தில் பின்வரும் அபிவிருத்தித்திட்டங்களை பிரதேச சபையினூடாக செயற்படுத்தினார்.

* ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுடன் பிரதேசசபைக்கு தனியான அலுவலகக் கட்டடத்தை அமைத்தல்.

* மூன்றாம் கட்டைச்சந்தியில் வர்த்தக நிலையங்களுக்கு வாடகைக்கு கொடுக்கக்கூடிய ஒரு கட்டடத்தொகுதியை அமைத்தல்.

* வெளிநாட்டு நிதியில் சர்வோதய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் பல கிராமங்களில் சிறுவர் பூங்காக்களை அமைத்தமை.

* பிரதேசசபையின் எல்லையிலுள் அமைந்துள்ள பிறிமா மா ஆலை, மிட்சுயி சீமெந்து ஆலை, பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்கள் மீதான வரியை 3% இல் இருந்து 6% ஆக உயர்த்தி சபையின் வருமானத்தை உயர்த்தியமை.

* உள்ளூர் வீதிகளை அபிவிருத்தி செய்தமை.

* கடலரிப்பை தடுப்பதற்கு சல்லிக்கடற்கரையில் 600 மீற்றர் நீளமான தடுப்பு அணை அமைத்ததுடன் அப்பகுதியில் கரையோரவீதி ஒன்றையும் அமைத்தமை.

## கிராமத்தின் முன்னோடிகள்

கிராமத்தின் தலைவர்களாக இருந்து செயற்பட்டவர்களை விட அவ்வப்போது கிராமத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் சம்பவங்கள் என்பவற்றிற்கு தலைவர்களாகவும் முன்னோடிகளாகவும் இக்கிராமத்தைச் சேர்ந்த பலர் செயற்பட்டனர். அவ்வாறானவர்களாக கீழ் வருவோரை குறிப்பிடலாம்.

1. செ.மாணிக்கராசா
2. செ.தேவராசா
3. க.சி.தேவராசா
4. செ.நடேசமூர்த்தி
5. இ.சௌந்தரராஜன்
6. சு.சண்முகலிங்கம்
7. வே.முருகையா
8. ஆ.வெள்ளைத்தம்பி
9. கதிர் சித்திரவேல்
10. த.சண்முகநாதன்
11. வே.சண்முகநாதன்
12. வெ.சுரேஷ்குமார்
13. இ.நிஷாந்தன்
14. ஆ.சாந்தகுமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்திலிருந்து உருவாகிய உத்தியோகத்தர்கள்

சாம்பல்தீவு கிராமம் நல்ல கல்விப்பின்னணியை கொண்டிருப்பதாலும். தொழில்வாய்ப்பு குறைவாக இருப்பதாலும் பலர் அரச உத்தியோகங்களிலும் தனியார் துறை நிறுவனங்களின் உத்தியோகங்களிலும் ஏனைய தொழில்களிலும் இணைந்து கொண்டனர். சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பே சிலர் அரசசேவையில் இணைந்துள்ளனர். இவர்கள் ஓய்வு பெற்று காலமாகிவிட்டனர். மாகாணமட்ட உத்தியோகத்தர்கள், மாவட்ட மட்ட உத்தியோகத்தர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் பாடசாலை அதிபர்கள், நிருவாகநிலை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலதரப்பட்ட உத்தியோகத்திலும் இங்குள்ளமக்கள் கடமையாற்றியுள்ளனர், கடமையாற்றுகின்றனர்.

## எண்ணிக்கை அடிப்படையில் உத்தியோகத்தர்கள்

| உத்தியோகத்தர்கள் | எண்ணிக்கை | தற்போதைய நிலை |
|---|---|---|
| மாகாண மட்ட உத்தியோகத்தர்கள் | 4 | ஒருவர் ஓய்வு பெற்று காலமாகிவிட்டார். |
| மாவட்டநிலை உத்தியோகத்தர் | 01 | திருகோணமலை மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் |
| கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் | 02 | ஒருவர் ஓய்வு பெற்றுவிட்டார் |
| டாக்டர்கள் | 10 | இவர்களில் ஒருவர் கண்வைத்திய நிபுணர். ஒருவர் அறுவைச் சிகிச்சை நிபுணர், ஒருவர் பிரதேச சுகாதார அதிகாரி, இருவர் வெளிநாடு சென்றுள்ளனர். ஒருவர் சித்த மருத்துவர். ஒருவர் பல்வைத்தியர் |
| பொறியியலாளர்கள் | 05 | ஒருவர் வெளிநாடு சென்றுள்ளார். |
| சட்டத்தரணி | 01 | இவர் கிளிநொச்சியில் கடமையாற்றினார். |
| தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | இவர் ஓய்வு பெற்றுள்ளார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உத்தியோகத்தர்கள் | எண்ணிக்கை | தற்போதைய நிலை |
|---|---|---|
| பாடத்திற்கான உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் ஆங்கிலம் - 1, விவசாய விஞ்ஞானம் - 1 | 2 | ஆங்கிலம் ஓய்வுபெற்று காலமாகிவிட்டார். விவசாயம் ஓய்வுபெற்றுள்ளார். |
| நில அளவையாளர் | 01 | ஓய்வு பெற்று காலமாகி விட்டார் |
| பாடசாலை அதிபர்கள் | 05 | இவர்களில் ஒருவர் ஓய்வு பெற்று காலமாகிவிட்டார். ஒருவர் ஓய்வு பெற்றுள்ளார். |
| பிரதி அதிபர்கள் | 03 | |
| அதிபர் தரம் பெற்று பாடசாலைகளில் வெவ்வேறு பொறுப்புக்களில் உள்ளவர்கள் | 03 | |
| ஆசிரிய ஆலோசகர்கள் விவசாயம் - 01 முறைசாராக்கல்வி 01 | 02 | விவசாயம் இவர்காலமாகி விட்டார். முறைசாராக்கல்வி இவர் ஓய்வு பெற்றுள்ளார். |
| தபால் அதிபர்கள் | 03 | இம்மூவரும் ஓய்வு பெற்றுள்ளனர். |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 15 | |
| ஏனைய ஆசிரியர்கள் | 25 | இவர்களில் மூவர் ஓய்வு பெற்று காலமாகி விட்டனர். இருவர் ஓய்வு பெற்று வெளிநாடு சென்றுள்ளனர். ஒருவர் ஓய்வு பெற்றுள்ளார். |
| அலுவலக நிருவாக நிலை உத்தியோகத்தர்கள் | 03 | இவர்களில் ஒருவர் ஓய்வுபெற்று இறந்துவிட்டார். இருவர் ஓய்வுபெற்றுள்ளனர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உத்தியோகத்தர்கள் | எண்ணிக்கை | தற்போதைய நிலை |
|---|---|---|
| கிராமசேவை உத்தியோகத்தர்கள் | 07 | இவர்களில் இருவர் ஓய்வு பெற்று காலமாகிவிட்டனர். இருவர் ஓய்வு பெற்றுள்ளனர். |
| அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 07 | |
| தாதி உத்தியோகத்தர்கள் | 05 | இவர்களில் இருவர் வெளிநாடு சென்றுள்ளனர். |
| பொலிஸ் உத்தியோகத்தர் | 01 | இவர் ஓய்வு பெற்று காலமாகி விட்டார். |
| சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 08 | இவர்களில் 02 பேர் வெளிநாடு சென்றுள்ளனர். |
| மருத்துவமனை சிற்றூழியர்கள் | 02 | |
| துறைமுக அதிகாரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் | 12 | இவர்களில் 04 பேர் ஓய்வுபெற்று காலமாகிவிட்டனர். 06 பேர் ஓய்வுபெற்று உள்ளனர். |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 15 | இவர்களில் இருவர் ஓய்வுபெற்றுள்ளனர். |
| டெலிகொம் நிறுவன ஊழியர்கள் | 03 | இவர்களில் இருவர் காலமாகி விட்டனர். |
| கடற்படை சிவில் ஊழியர்கள் | 12 | இவர்களில் 06 பேர் ஓய்வு பெற்றுள்ளனர். 03பேர் காலமாகிவிட்டனர். |
| தபால்நிலைய ஊழியர்கள் | 11 | இவர்களில் 04 பேர் ஓய்வுபெற்றுள்ளனர். |
| கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தர்கள் | 18 | இவர்களில் 05 பேர் ஓய்வு பெற்று காலமாகிவிட்டனர். 06பேர் ஓய்வு பெற்றுள்ளனர்.02 பேர் வெளிநாடு சென்றுள்ளனர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உத்தியோகத்தர்கள் | எண்ணிக்கை | தற்போதைய நிலை |
|---|---|---|
| இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் | 06 | இவர்களில் ஒருவர் ஓய்வு பெற்று காலமாகிவிட்டார். இருவர் ஓய்வு பெற்றுள்ளனர். |
| அரச அலுவலக சிற்றூழியர்கள், சாரதிகள் | 16 | இவர்களில் 03பேர் ஓய்வு பெற்றுள்ளனர். |
| வங்கி உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் | 04 | இவர்களில் ஒருவர் ஓய்வு பெற்றுள்ளார். |
| தனியார் நிதிநிறுவனங்களில் கடமையாற்றுவோர் | 03 | |
| நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் | 05 | இவர்களில் 04 பேர் ஓய்வு பெற்றுள்ளனர். |
| மின்சாரசபை ஊழியர்கள் | 09 | இவர்களில் இருவர் ஓய்வு பெற்றுள்ளனர். |
| ஏனைய வெவ்வேறு பதவிகளில் கடமையாற்றுவோர் | 08 | |

மொத்தம் - 238
காலமாகியோர் - 28
ஓய்வுபெற்றுள்ளோர் - 49
வெளிநாடு சென்றுள்ளோர் - 09
சேவையிலுள்ளோர் - 152



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் நிலையில் உயர்வடைந்தோர்

## க.இராமநாதன்

இவர் சாம்பல்தீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர். சிறுவயதில் தொழில்தேடி கொழும்பிற்குச் சென்றார். அங்கு கடைகளில் வேலை செய்து வியாபார முறைகளைத்தெரிந்து கொண்டார். கொழும்பில் சிறிதுகாலம் சிறுவியாபாரத்தில் ஈடுபட்டு பின் திருகோணமலை திரும்பினார். திரும்பி உப்புவெளிப்பகுதியில் பெரியதொரு மளிகைக்கடையை அமைத்து வியாபாரம் செய்தார். அவ்வாறு இருக்கையில் தனது சொந்தக்கிராமமான சாம்பல்தீவில் திருமணம் செய்து அதன்பின்பு சாம்பல்தீவு திரும்பி இங்கு "ஆதவன் ஸ்ரோஸ்" எனப்பெயர்கொண்ட ஒரு பெரிய மளிகைக்கடையை அமைத்து வியாபாரம் செய்து வந்தார். இவரது வர்த்தகத்தின் பெயரால் இவர் "ஆதவன்" என்றும் "ஆதவன் முதலாளி" என்றும் அழைக்கப்பட்டார். நோய் வாய்ப்பட்டு காலமானார்.

## வே.தணிகாசலம்

இவர் 10.11.1944 இல் சாம்பல்தீவில் பிறந்தார். சாம்பல்தீவு 6ஆம் வட்டாரத்தில் வாழ்ந்தவர். திருகோணமலை கோணேஸ்வராவித்தயாலயத்திலும் யாழ்ப்பாணத்திலும் கல்வி பயின்றார். தனது கல்வியை முடித்துக்கொண்டு அரச தொழிலில் சேர்ந்து சிறிதுகாலம் கடமையாற்றினார். பின் சுயதொழிலில் ஈடுபடத்தொடங்கினார். முதலில் விவசாயத்தொழிலில் ஈடுபட்டார். கன்னியாய், செம்பியனாறு ஆகிய பகுதிகளில் நெல் விவசாயத்தில் ஈடுபட்டார். சில உழவியந்திரங்களையும் உரிமையாக கொண்டிருந்தார். விவசாயிகள் பற்றி அரசாங்கம் செய்த மதிப்பீட்டின்படி முன்னணி விவசாயியாக காணப்பட்டதால் இவருக்கு அரசினால் "விவசாய மன்னன்" பட்டம் வழங்கப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டது. உப்புவெளிப்பகுதியில் திருமணம் முடித்து அதன்பின் அப்பகுதியிலேயே வாழ்ந்துவந்தார். நெல்வியாபாரத்திலும் ஈடுபட்டார். அதன்பின்பு கட்டட ஒப்பந்தகாரராகவும் தொழில்பட்டார். உப்புவெளியிலும், நகரப்பகுதயிலும் நன்கு அறிமுகமானவரானார். 1979ஆம் ஆண்டில் திருக்கோணமலை நகரசபைக்கான தேர்தலில் போட்டியிட்டு நகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

எல்லோருடனும் மிக எளிமையாகவும் இனிமையாகவும் பழகுவார். தனது தொழில்கள் மூலம் செல்வம் சம்பாதித்து சில இடங்களில் நெல்வயல்களையும், வேறு நிலங்களையும் வாங்கினார். 1974ஆம் ஆண்டில் சாம்பல்தீவு அம்மன் கோவிலுக்கு ஒரு மண்டபம் அமைத்துக்கொடுத்தார். பல பாடசாலைகளுக்கு கட்டடங்கள் கட்ட நிதியுதவி செய்தார். பல ஏழைகளுக்கு நிதியுதவி செயததுடன் பல திருமணங்களுக்கும் உதவிபுரிந்துள்ளார். நாட்டின் யுத்த சூழ்நிலை காரணமாக 1985ஆம் ஆண்டில் இந்தியா சென்று அங்கு வாழ்ந்தார். 12.10.1994 ஆம் ஆண்டில் 50ஆவது வயதில் விபத்தொன்றில் இந்தியாவில் காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செ.ஜெகதீசன்

11.02.1963இல் சாம்பல்தீவு 06ஆம் வட்டாரத்தில் பிறந்தார். சாம்பல்தீவு மகாவித்தியாலயத்தில் கல்விகற்றார். திருக்கோணமலை நகரத்தில் இயங்கிய கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றில் 10 வருடங்கள் கடமையாற்றியதன்பின்பு தான் சுயமாக வியாபாரம் ஆரம்பித்தார். யுத்த சூழ்நிலை காரணமாக 1986ஆம் ஆண்டில் தனது பெற்றோர், சகோதரர்களுடன் திருமலை நகரத்திற்கு இடம் பெயர்ந்து அங்கு வாழ்ந்து வருகின்றார். முதலில் "றோயல் சென்ரர்" என்படும் கட்டடப்பொருள் விநியோக நிலையம் ஒன்றை 1990இல் திருகோணமலையில் ஆரம்பித்தார். அதன்பின்பு கட்டட ஒப்பந்த வேலைகளிலும் ஈடுபடத்தொடங்கினார். பின் "றோயல் கொன்ஸ்ரக்ஷன்" என்னும் பெயரில் தனது கட்டட ஒப்பந்த தொழிலை பதிவுசெய்து நடாத்தி வருகின்றார். 100 பேர்வரையில் தொழில்புரிகின்ற ஒரு தொழில் நிறுவனமாக இவரது தொழில் நிறுவனம் கண்டிவீதி, இலிங்கநகர் சந்தி என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது. இவர் திருக்கோணமலையின் முதல்தர கட்டட ஒப்பந்தகார்களில் ஒருவராக உள்ளார். "றோயல் என்ரபிரைஸ்" என்று ஒரு வர்த்தகத்தையும் பதிவுசெய்துள்ளார். கட்டடப்பொருட்கள் விநியோகம் செய்தல், ஹாட்வெயார் ஸ்டோர், காணிகளை வாங்கி விற்பனை செய்தல், பயணிகளுக்கான விடுதி வசதி ஆகிய வியாபாரங்களிலும் ஈடுபட்டு வருகின்றார்.

## செ.செல்வமலர்

இவர் சாம்பல்தீவு 06ஆம் வட்டாரத்தில் 28.08.1959 அன்று பிறந்தார். சாம்பல்தீவு மகாவித்தியாலயம், ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி பேராதனைப்பல்கலைக்கழகம் என்பவற்றில் கல்விகற்றார். இடம்பெயரந்து நகரப்பகுதியில் வாழ்ந்து வருகின்றார். கலைப்பட்டதாரியான இவர் பட்டதாரி ஆசிரியராக கடமையாற்றிவருவதுடன் "அபிராமி" கல்விநிலையம் எனப்படும் ஒரு தனியார் கல்வி நிலையத்தை 1995ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இக்கல்வி நிலையம் 141, கிறீன் வீதி, திருக்கோணமலை என்னும் முகவரியில் இயங்கியது. பின் திருமலை பேச்சி அம்மன் கோவிலடிக்கு இடமாற்றப்பட்டு இயங்கி வருகின்றது. உயர்தர கலைப்பிரிவிற்குரிய பாடங்கள் இங்கு கற்பிக்கப்பட்டன. கலைத்துறையில் கல்விபயின்ற ஏராளமான மாணவர்கள் இக்கல்விநிலையத்தில் தமது மேலதிக பிரத்தியேக கல்வியைப்பெற்றனர். பெரும்பாலானோர் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரி ஆகி அரசதொழில்களில் அமர்ந்துள்ளனர். ஏழை மாணவர்களுக்கும், அனாதை இல்லங்களில் இருக்கும் மாணவர்களுக்கும் கட்டணம் அறவிடாது இங்கு கல்வி வழங்கப்பட்டது. இவர்களிலும் பலர் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரி ஆகி அரச தொழிலில் உள்ளனர். இவர் இக்கல்வி நிலையத்தில் இந்து நாகரிகம் என்னும் பாடத்தை கற்பித்து வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ.சந்திரலிங்கம்**

இவர் சல்லிப்பகுதியைச் சேர்ந்தவர். அங்கேயே வாழ்ந்து வருகின்றார். கடற்தொழிலில் ஈடுபட்டு முன்னணி வகித்தார். இவரது மனைவி ஆசிரியராகக் கடமையாற்றியவர். சந்திரலிங்கம் அவர்கள் 20 ஆண்டுகளாக முன்பு திருக்கோணமலை ஏகாம்பரம் வீதியில் "சந்திரலிங்கம் ரேடர்ஸ்" எனப்படும் ஒரு வர்த்தகநிலையத்தை நடாத்திவருகின்றார். மீன்பிடிக்குத்தேவையான, வலைகள், கயிறு, அவற்றோடு சேர்ந்த பொருட்களை விற்பனை செய்யும் முக்கிய நிலையமாக இவரது வியாபார நிலையம் காணப்படுகின்றது. இவர் தற்போது கடல்தொழிலை விடுத்து இவ்வர்த்க தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்.

**ஐ.சித்திரவேலாயுதம் (மணியம்)**

இவர் சாம்பல்தீவு 7ஆம் வட்டாரத்தைச்சேர்ந்தவர். தனது கல்வியை முடித்த பின்பு 1970 - 1977 காலப்பகுதியில் சாம்பல்தீவில் அரச திணைக்களம் ஒன்றினால் நடாத்தப்பட்ட தென்னங்கருப்பட்டி உற்பத்தி தொழிற்சாலையில் கடமையாற்றினார். அதன் பின்பு விவசாயத்துறையில் ஈடுபட்டு முன்னணிக்கு வந்தார். யுத்த சூழ்நிலை காரணமாக நகரப்பகுதிக்கு இடம்பெயர்ந்து கட்டட ஒப்பந்தக்காரராக பதிவு செய்து கட்டட ஒப்பந்த வேலைகளை செய்து வருகின்றார். சாம்பல்தீவு வடலிப் பிள்ளையார் ஆலயத்தின் பரிபாலனசபையின் தலைவராகவும் இருந்து கடமையாற்றினார்.

**வே.தயாபரன்**

இவர் சாம்பல்தீவின் முன்னாள் கிராமசபைத்தலைவர். திரு.க.வேலாயுதம் அவர்களின் மகனாவார். சாம்பல்தீவு 03ஆம் வட்டாரத்தில் பிறந்து வளர்ந்தவர். சாம்பல்தீவு மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். யுத்தசூழ்நிலை காரணமாக கொழும்பிற்கு சென்று அங்கு வர்த்தகத்துறையில் தொழில்புரிந்து வர்த்தகரீதியான அனுபவத்தையும் பெற்றார். இவ்வனுபவத்தின் அடிப்படையில் 189A, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை என்னும் முகவரியில் "ஈஸ்ற்லிங் கொமியுனிகேஷன்" (East link Communication) என்னும் பெயரில் 1991இல் ஒரு வர்த்தகநிலையத்தை ஆரம்பித்தார். இது தற்போது புத்தக நிலையமாக இயங்கிவருகின்றது. 1995ஆம் ஆண்டில் மற்றுமொரு வர்த்தக நிலையமாக "விஷ்ணு புக் ஷொப்" (Vishnu Book Shop) என்னும் புத்தகநிலையத்தை இல: 64, வித்தியாலயம் வீதி, திருக்கோணமலை என்னும் முகவரியில் ஆரம்பித்தார். இவ்விரு வர்த்தக நிலையங்களையும் இயக்கிவருவதுடன் திருமலை நகரத்தில் வாழ்ந்து வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகூரவேண்டியவர்கள்

**சுப்பிரமணியம் விதானையார் :**

சாம்பல்தீவு 06ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர். அரசாங்கத்தின் கிராம சேவை உத்தியோகத்தராக இக்கிராமத்தில் நீண்டகாலம் கடமையாற்றியவர். இவர் ஒரு அரச உத்தியோகத்தராயினும் இக்கிராமத்தை சேர்ந்தவர். நீண்டகாலமாக இக்கிராமத்தில் கடமையாற்றியவர். கிராமத்தில் அதிக உறவினர்களைக் கொண்டவர் என்றவகையில் கிராமத்தின் ஒருதலைவரை போன்றே செயற்பட்டார். தனது அரச தொழிலுடன் விவசாயத்திலும் ஈடுபட்டார். சிறுப்பிட்டிப்பகுதியில் இவருக்கு நெல்வயல் இருந்தது. அத்துடன் தென்னந்தோட்டத்தையும் உரிமையாகக் கொண்டிருந்தார். சாம்பல்தீவு மாரியம்மன் ஆலயத்தின் முதலாவது மணியகாரராக கடமையாற்றினார். உயர்ந்த தடித்த கம்பீரமான உடற்தோற்றத்தைக் கொண்டவர். இவர் பத்துப்பிள்ளைகளின் தந்தையாவார். தனது பிள்ளைகள் அனைவரது பெயரின் இறுதியிலும் இரத்தினம் என வரக்கூடியவாறு பெயரிட்டிருந்தார். உதாரணம் இராசரெத்தினம், நவரெத்தினம் இவரது பிள்ளைகள் சிலரும், பேரப்பிள்ளைகளும் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

**சு.அழகரெத்தனம்**

இவர் சாம்பல்தீவு 06ஆம் வட்டாரத்தில் வாழ்ந்தவர். விவசாயத்தொழிலில் சிறந்து விளங்கியவர். நெல்விவசாயம், தென்னந்தோட்டம், கால்நடைகள், உழவியந்திரம் என்பவற்றைக் கொண்டிருந்தார். விவசாயத்துறையில் சிலருக்கு தொடர்ச்சியாகவே தொழில் வாய்ப்பை வழங்கும் ஒருவராக இருந்தார். இவர் சுப்பிரமணியம் விதானையாரின் மகனாவார். தந்தையைப்போலவே உயர்ந்த தடித்த கம்பீரமான உடற்தோற்றம் உடையவராகக் காணப்பட்டார். தனது உழைப்பின் மூலமாக உயர்வடைந்தவராக இருந்தார். சாம்பல்தீவு மகாவித்தியாலயம், மாங்கணாய் மாரி அம்மன் ஆலயம் என்பவற்றிற்கு தனது சொந்த வருவாயில் இருந்து உதவிகளைச் செய்தார். தனது தந்தைக்குபின் பல வருடங்கள் மாங்கணாய் மாரி அம்மன் ஆலயத்தின் மணியகாரனாக பல வருடங்கள் சேவையாற்றினார். இவரது பிள்ளைகள் சாம்பல்தீவில் வாழ்கின்றனர். இவருக்கு இரண்டு புதல்விகளும் ஒரு மகனும் உண்டு, புதல்விகளில் ஒருவர் அரச திணைக்களத்தில் கடமையாற்றுகின்றார், ஒருவர் ஆசிரியராக கடமையாற்றுகின்றார். மகன் திருமலை நகரசபையில் ஒரு மேற்பார்வையாளராக கடமையாற்றுக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றே.கோபால்

இவர் ஆத்திமோட்டைப்பகுதியில் வாழ்ந்தவர். அப்பகுதிக்கான கிராமசபை உறுப்பினராக இருந்தவர். ஆத்திமோட்டை பகுதியின் குடியேற்றம், அபிவிருத்தி, பாடசாலை அமைத்தல் என்பவற்றில் முன்னின்று உழைத்தவர். தனது தொழிலை விட பொதுச்சேவைக்கு முன்னுரிமை கொடுத்து வாழ்ந்தவர் இவரது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் ஆகியோர் இப்பகுதியில் வாழ்க்கின்றனர்.

## சின்னத்துரை பரிகாரியார்

இவர் சாம்பல்தீவு 04ஆம் வட்டாரத்தில் மாங்கணாய் மாரிஅம்மன் ஆலயத்திற்கு அண்மையில் வாழ்ந்தவர். சித்த ஆயுர்வேத வைத்தியம் செய்து வந்தார். சாம்பல்தீவில் தற்போது 03 வைத்தியசாலைகள் இயங்குகின்றன. இவையெல்லாம் இல்லாத காலத்தில் இவரது வைத்தியம் கிராமத்திற்கு தேவையானதாகவும் உதவியானதாகவும் இருந்தது. இவர் சாம்பல்தீவு கேணியடியில் ஒரு சுமைதாங்கியை அமைத்தார். தனது மனைவி வயிற்றில் குழந்தை இருந்தபோது இறந்ததால் அவரது ஞாபகார்த்தமாக இச்சுமைதாங்கியை அமைத்தார். இவர் தனக்குச் சொந்தமான அடுக்குப்பாரில் உள்ள $3^1/_3$ ஏக்கர் காணியை மாங்கணாய் மாரியம்மன் ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

## கா.இரட்ணசபாபதிப்பிள்ளை

இவர் சல்லிப்பகுதியில் வாழ்ந்த ஒரு செல்வந்தராவார். வயல்நிலம், தென்னந்தோட்டங்கள், கால்நடைகள் என்பவை இவரிடம் இருந்தன அத்துடன் இவர் சல்லிக்கல் வியாபாரத்திலும் ஈடுபட்டார். இவருக்கு சிறுப்பிட்டிப்பகுதியில் நெல்வயல் இருந்தது. சல்லி, அடுக்குப்பார், ஆற்றடிப்பகுதிகளில் தென்னந்தோட்டங்கள் இருந்தன. அதிக ஏக்கர் தென்னந்தோட்டங்களை இவர் கொண்டிருந்தார். சல்லி அம்பாள் ஆலயத்தின் மணியகாரனாக இருந்து பணியாற்றியுள்ளார். 1933ஆம் ஆண்டில் சல்லி அம்மன் ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகத்தையும் நடாத்திவைத்தார். சல்லி அம்பாள் மகாவித்தியாலயம் அமைந்துள்ள காணி இவருடையதே இவர் இதனை பாடசாலைக்கு அன்பளிப்பு செய்துள்ளார்.

உயர்ந்த தடித்த கம்பீரமான தோற்றத்தை உடையவர், தலைமுடியை வெட்டாது பெண்களைப்போன்று கொண்டைபோட்டிருப்பார். எல்லோருடனும் இனிமையாகவும் சந்தோஷமாகவும் பேசுவார். ஒரு மிடுக்கான குரலையும் கொண்டிருந்தார். அவரது காலத்தில் மோட்டார் வாகன பயன்பாடு குறைவாக இருந்தமையால் தனது அலுவல்களுக்காக திருமலை நகரத்திற்கு மாட்டு வண்டியில் சென்றுவருவார். இவருக்கு 09 பிள்ளைகள், இவரது வழித்தோன்றல்களான பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் என ஒரு பெரிய பரம்பரையில் சல்லியில் வாழ்ந்து வருகின்றது. இவரது மூத்த மகனான தங்கராசா சாம்பல்தீவு கிராமசபையின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டு கடமையாற்றினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப்பெருமாள் :

இவர் சல்லி 1ஆம் வட்டாரத்தில் வாழ்ந்தவர். துறைமுக அதிகார சபையில் எழுதுவினைஞராக கடமையாற்றியவர். ஒரு சமூக சேவையாளனாக இருந்து சல்லிப்பகுதி மக்களை வழிப்படுத்தியவர். உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் போசகராகவும் இருந்தவர். சல்லி அம்பாள் ஆலயத்திற்கான பணிகளிலும் ஈடுபட்டவர். அகால மரணமடைந்தார்.



**வ.நா.தம்பிராசா**
**முன்னாள் கிராமசபைத்தலைவர்**



**க.வேலாயுதம்**
**முன்னாள் கிராமசபைத்தலைவர்**



**கா.இரட்ணசபாபதிப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

இருபத்தாறுவருட யுத்தத்தின் காரணமாகவும் அபிவிருத்தி வேலைகள் இக்கிராமத்தில் நடைபெறவில்லை. யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்களாகியும் இக்கிராமத்தின் அபிவிருத்தியில் பெருமளவு அக்கறைகாட்டாததால் இங்கு மக்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர்.

இங்குள்ள பிரச்சனைகள் சில இலகுவாக தீர்க்கக்கூடிய சிறிய பிரச்சனைகளாகவும், சில பிரச்சனைகள் பாரிய நிதிச்செலவுடன் தீர்க்கக்கூடிய பிரச்சனையாகவும் உள்ளன. அரசியற் தலைவர்கள், திணைக்களங்கள், பிரதேசசபை, பொலிஸ்பகுதி, பொதுமக்கள் ஆகியோரால் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகளாக இவையுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், மாவட்ட செயலகம், பிரதேசசபை என்பவற்றிற்கு அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கப்படுகின்றது. இந்நிதி மூலகங்களில் இருந்து இக்கிராமத்திற்கும் ஒருபகுதி நிதி வந்தால் இங்குள்ள பிரச்சனைகளை ஓரளவிற்கேனும் தீர்க்கமுடியும். இவ்வருட (2016) வரவு செலவுத்திட்டத்தில் கிராமங்களின் அபிவிருத்திக்கென அரசாங்கம் ஒதுக்கும் நிதியை அதிகரித்துள்ளது. இத்தொகை 15 இலட்சம் ரூபாவாக காணப்படுகின்றது. இந்நிதி மூலமும் இக்கிராமத்தின் பிரச்சனைகள் சில தீர்க்கப்படக்கூடியன நிதி சரியானமுறையில் திட்டமிட்டு செலவழிக்கப்படவேண்டும்.

- பிரதான வீதியும் உள்வீதிகளும் பழுதடைந்து திருத்தவேண்டிய நிலையில் உள்ளன. பாடசாலைகள், கோவில்கள் அரச அலுவலகங்கள் என்பவற்றிற்குச் செல்லும் பிரதானவீதி மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது. இதனால் இவ்வீதியால் செல்லும் பொதுமக்களும், வாகன சாரதிகளும், பெரிதும் சிரமப்படுவதுடன் வாகனங்களும் பழுதடைகின்றன. சாம்பல்தீவு சந்தியில் இருந்து அடுக்குப்பார் வரையிலும், சல்லிக்கோயில் வரையிலும் இவ்வீதி காப்பற் வீதியாக அல்லது கூடிய தரம் கொண்ட ஒரு வீதியாக அமைக்கப்பட வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

- வீதிகளுக்கு சரியான வடிகால்கள் இன்மையால் மாரிகாலங்களில் வெள்ளம் தேங்கி நின்று மக்களின் போக்குவரத்திற்கு பெரிதும் இடையூறு காணப்படுகின்றது. இப்பிரச்சனை கூடிய அளவில் ஆத்திமோட்டை இலுப்பைக்குளம் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றது.

- இராக்காலங்களில் ஊர்மக்களின் மாடுகள் வீதிகளில் தங்கி பிரயாணத்திற்கு இடையூறாகவுள்ளது. பிரதான வீதியிலும் இவ்வாறு மாடுகள் தங்குகின்றன. மாடுகளின் சாணம் வீதிகளை பெரிதும் மாசுபடுத்துக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* குரங்குகள் பறவைகள் மூலம் பயிர்கள் அழிக்கப்படும் பிரச்சனையும் காணப்படுகின்றது.

* உற்பத்தி செய்யப்படும் பொருட்களை குறிப்பாக விவசாய உற்பத்தி பொருட்களை மக்கள் உரிய விலையில், உரிய நேரத்தில் சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

* நிரந்தரமான வீட்டு வசதி இல்லாமலும் பல குடும்பங்கள் சிரமப்படுகின்றனர்.

* இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கக்கூடியதான கைத்தொழில் சாலைகளோ, வேறுதிட்டங்களோ கிராமத்திலோ அயலிலோ இல்லை.

* சல்லிப்பகுதியில் குறிப்பாக சல்லி அம்மன் கோவிலைச்சார்ந்து கடலரிப்பு பெரும் பிரச்சனையாகவுள்ளது.

* கடல்நீர் ஏரியின் முகத்துவாரப்பகுதியில் கழிவுப்பொருட்கள் சுனாமி வெள்ளத்தின் போது கொண்டுவந்து படியவிடப்பட்டுள்ளது. இதனால் முகத்துவாரப்பகுதியில் நீரின் அளவு (நீர் மட்டம்) குறைவடைந்துள்ளது. கடல்நீர்ஏரிக்கும் நீர் ஏறுவது குறைவாக உள்ளது. பாதுகாப்பாக தமது வள்ளங்களை கடல்நீர்ஏரியில் கட்டுவதற்காக கடலில் இருந்து எடுத்துவருவதற்கு ஏரியின் முகத்துவாரத்தில் ஆழம் போதாது மக்கள் சிரமப்பட வேண்டியுள்ளது.

* நிலாவெளி வீதியைச்சார்ந்து கடல்நீர் ஏரிக்கு அண்மையில் ஹோட்டல்களினால் கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டு அப்பகுதி அசுத்தமடைகின்றது.

* வீதிகளில் முக்கியமான இடங்களில் கூட தெருவிளக்குகள் இல்லை. பொருத்தப்பட்டிருந்த தெருவிளக்குகளையும் மின்சாரசபை கழற்றி சென்றுள்ளது. முன்பு கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படாதபோது கிராமசபையினால் பல இடங்களில் மண்ணெண்ணை விளக்குள் பொருத்தபட்டிருந்தது.

* இவ்வூர் மீனவர்கள் மீன்பிடிக்கும் கடற்பரப்பில் வெளியூர் மீனவர்கள் சுருக்கு வலைகள் மூலமாகவும் டைனமைற் பாவிப்பதன் மூலமாகவும் மீன்பிடிப்பதால் மீன் இனங்கள் பாதிக்கப்பட்டு இப்பகுதி மீனவர்களுக்கு இடையூறாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோணேசபுரிப்பகுதி பாடசாலைகளுக்கு மிகவும் தொலைவில் அமைந்துள்ளமையால், மாணவர்கள் பாடசாலை செல்வதற்கு சிரமமப்படுகின்றனர். மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதும் குறைவாகவுள்ளது. இப்பகுதிக்கென தற்போது சிறியதொரு பாடசாலை இயங்கிவருகின்றது. இது ஒரு சிறந்த பாடசாலையாக விருத்தி செய்யப்படவேண்டும்.

- கிராமத்திற்கு போக்குவரத்துப்பிரச்சனையும் உள்ளது. இலங்கை போக்குவரத்து சபையின் பேரூந்துகள் சல்லி, சாம்பல்தீவு, கோணேசபுரி ஆகிய பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடுவதில்லை, தனியார் பேரூந்துகளே சேவையில் ஈடுபடுகின்றன. இதில் பல சிரமங்கள் உள்ளன. இலங்கை போக்குவரத்துசபை பேரூந்துகளும் சேவையில் ஈடுபடுத்தப்படுவதன் மூலமே போக்குவரத்துப்பிரச்சனையை தீர்க்க முடியும். சாம்பல்தீவினூடாக சல்லிக்கு பேரூந்துகள் செல்வது போன்று சாம்பல்தீவு, அடுக்குப்பார் ஊடாக கோணேசபுரிவரையில் பேரூந்து சேவை நடாத்தப்படுவது பொது மக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

- சாம்பல்தீவு சந்தியில் இருந்து உட்செல்லும் பிரதான வீதியைச்சார்ந்து ஒரு கள்ளுக்கடை அமைந்துள்ளது. இது வீதியில் செல்வோருக்கு இடையூறாகவுள்ளது. அத்துடன் இங்கு இயற்கையான பணங்கள் மட்டுமல்லாது, இரசாயனக்கலவைகள் மூலம் உற்பத்தி செய்யும் கள்ளும் விற்பனை செய்யப்படுகின்றது. இது அதிக போதை கொடுக்கக்கூடியது. இதனைப் பாவிப்போரின் உடல்நிலை பாதிப்படைவதுடன் சமூகச்சீரழிவும் ஏற்படுகின்றது. இக்கள் விற்பனை நிலையம் மூடப்படவேண்டும் அல்லது மக்களுக்கு இடையூறு இல்லாத இடத்திற்கு மாற்றப்பட்டு இரசாயனக்கள் விற்பனை நிறுத்தப்பட வேண்டுமென மக்கள் எதிர்பாரக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டாளரைப்பற்றி

திரு.V.T.நவரெத்தினம் அவர்கள் சாம்பல்தீவைச் சேர்ந்தவர். சாம்பல்தீவு 04ம் வட்டாரத்தில் வாழ்ந்து யுத்த சூழ்நிலைகாரணமாக இடம்பெயர்ந்து திருகோணமலை நகரில் வாழ்ந்து வருகின்றார். சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயத்திலும் திருகோணமலை இந்துக்கல்லூரியிலும் தனது கல்வியை பெற்றார். இலங்கைத்துறைமுக அதிகாரசபையில் இருபத்தைந்து வருடங்கள் பாதுகாப்பு மேற்பார்வையாளராக கடமையாற்றினார். ஐந்து வருடங்கள் வெளிநாட்டு கம்பனிகளிலும் கடமையை தொடர்ந்தார். சேவையிலிருந்து ஓய்வுபெற்றதின் பின் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்கள் என்பவற்றில் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றினார்.

இளமை காலத்திலிருந்தே சமூகசேவையில் ஈடுபட்டு வந்தார். திருகோணமலை இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்சங்க உபதலைவராக நீண்டகாலம் கடமையாற்றினார். திருக்கோணேஸ்வரர் பரிபாலனசபை, இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், நோமன் விளையாட்டுக்கழகம், சிறுவர் பராமரிப்பு இல்லமான அன்பு இல்லம் என்பவற்றின் ஆயுட்கால உறுப்பினராவார். சர்வதேச அரிமா கழகத்தின் உறுப்பினருமாவார். இவரும் இவரது பரம்பரையினரும் சாம்பல்தீவு கிராமத்தில் வாழ்ந்தமையால் அக்கிராமத்தைப்பற்றி நூல் ஒன்று வெளியிடுவதில் மிகவும் ஆர்வம்காட்டி அதற்காக உழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரைப் பற்றி...



நூலாசிரியர் செல்வராசா மோகனசுந்தரம், சாம்பல்தீவு 6ஆம் வட்டாரத்தில் பிறந்து வளர்ந்தவர். யுத்த சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து திருக்கோணமலை உவர்மலைப் பகுதியில் வாழ்ந்துவருகின்றார். தனது ஆரம்பக்கல்வியை ஆத்திமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை சாம்பல்தீவு மகாவித்தியாலயத்திலும் உயர்வகுப்புக்கல்வியை திருக்கோணமலை இந்துக்கல்லூரியிலும் பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி 1982ஆம் ஆண்டில் ஒரு கலைப்பட்டதாரியாக வெளியேறினார். பின் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமாவை பெற்றார்.

பட்டதாரி ஆசிரியராக அரசவேையில் இணைந்தார். திருக்கோணமலை கோட்டக்கல்வி அலுவலகத்தில் இணைப்பில் ஒரு உத்தியோகத்தராக 02 ஆண்டுகள் கல்வி அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டார். பின் 06 ஆண்டுகள் திருக்கோணமலை வலயக்கல்வி அலுவலகத்தில் முறைசாராக்கல்விக்குரிய ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றினார். அரசசேவையில் இருந்து சேவை முடிவுக்காலத்திற்கு முன்பே ஓய்வு பெற்று அரச சார்பற்ற நிறுவனத்தில் இணைந்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களில் முகாமைத்துவப் பதவிகளில் கடமையாற்றி, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருக்கோணமலை ஆகிய 05 மாவட்டங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அபிவிருத்திப்பணிகளில் ஈடுபட்டார்.

எழுத்துத்துறையிலும் இவருக்கு ஆர்வம் உண்டு. இவரது கவிதையொன்று கவிதைத்தொகுப்பு நூல் ஒன்றில் வெளியாகியுள்ளது. இவரது சில கட்டுரைகள் வீரகேசரி வார வெளியீட்டில் வெளியாகியுள்ளன. இவர் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றிய காலத்தில் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்ட பல சிறப்பு மலர்களின் நூலாக்கக்குழுவின் உறுப்பினராக இருந்து முக்கிய பங்கை ஆற்றியுள்ளார்.

Printed by : Ben Vision Pri

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org